பக்கங்கள்: 20



பாரதியார் பாடல்களில் பெண் தெய்வமும் பெண்களும்

செ.லெவோகா

பக்கம் 09

THEEMPUNAL
# தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை


தீ : 01 புனல்:47 19.03.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053



மகளிர் கரீபியன் பிரீமியர் லீக்

பக்கம் 19

வர்மா




# இலங்கையில் உருவான பொருளாதாரப் போர்



இந்து சமுத்திரத்தின் முத்து, தப்ரபேன் எனப் புகழப்பட்ட இலங்கை இன்று பொருளாதார சுழலில் சிக்கியுள்ளது. இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலைக்கு பலத்த போட்டி ஏற்பட்டதால் சுற்றுலாவை பிரதான வருவாயாகக் கட்டமைத்தது. கொரோனா என்ற கொடிய துயரம் அந்த வருவாயை நசுக்கியது. உலக நாடுகள் அனைத்தும் கொரோனாவால் பாதிக்கப்பட்டன. படுத்து விட்ட இலங்கையின் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு அரசாங்கம் செய்த முயற்சிகள் எவையும் கைகொடுக்கவில்லை.

இலங்கையின் பொருளாதாரம் கடுமையாக வீழ்ந்துள்ளது. 1970 இல் இலங்கையில் நிலவிய பஞ்சத்தை விட மிக மோசமான பஞ்சமாக இது பார்க்கப்படுகிறது. இலங்கைப் பொருளாதாரம் கொரோனாவிற்குப் பின்பாகத்தான் வீழ்ச்சி அடைகிறது என்றும் கூடச் சொல்ல முடியாது. ஏனென்றால் கடந்த நான்கு வருடமாகவே, அதாவது கொரோனாவிற்கு முன்பே பொருளாதாரம் கொஞ்சம் கொஞ்சமாக வீழ்ச்சியை நோக்கித்தான் சென்று கொண்டு இருந்தது.

முக்கியமாக சீனாவிடம் வாங்கிய கடன், சீனாவின் பல்வேறு ரோட் அண்ட் பெல்ட் திட்டத்திற்காக வாங்கப்பட்ட நிதி உதவிகள், அதற்கான வட்டி எல்லாமே இலங்கையின் பொருளாதாரத்தை முடக்கிப் போட்டது. அதன்பின் வந்த கொரோனா காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாதாளத்திற்குச் சென்றது. முக்கியமாக கொரோனா சமயத்தில் இலங்கையின் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடைந்தது. உலக

▶18

# இந்திய நிதியுதவியும் ஈழத்தமிழர்களும்

**சிங்கள மக்கள் கோபப்படாத அணுகுமுறைகளையும் ஈழத் தமிழர்களை எப்படியாயினும் திருப்திப்படுத்தி விடலாமென்ற நம்பிக்கையோடும் இந்தியா வடக்குக் கிழக்கில் தனது நலன் சார்ந்தும் பல திட்டங்களை முன்னெடுக்கின்றது.**

அ.நிக்ஸன்

இலங்கையின் பொருளாதார நெருக்கடி என்பது அதாவது விலைவாசி உயர்வு என்பது தீவின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் மக்களைப் பாதித்திருக்கின்றது. இந்தப் பாதிப்பு தொடரவும் போகின்றது. குறைந்தபாடில்லை என்பதே இன்று அனைத்து மக்களாலும் பேசப்படுகின்றது.

2.4 பில்லியன் டொலர்களை வழங்குவதாக இந்தியா கடந்த வருடம் டிசம்பர் மாதம் வாக்குறுதியளித்திருந்தது. முதலில் ஒரு பில்லியன் டொலர்களை வழங்கும் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவது என்று இணக்கம் ஏற்பட்டிருந்தது.

ஆனால் ரஷ்யா- உக்ரைன் போர் ஆரம்பித்ததால் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நடவடிக்கை பிற்போடப்பட்டது. ஆனாலும் சென்ற வியாழக்கிழமை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் அதி உச்சக் கோரிக்கையாகும். ஆனால், தமிழ் மக்கள் கோருகின்ற முழுமையான சமஷ்டி ஆட்சி முறை பற்றிப் பேசியதாகத் தெரியவில்லை.

13 பற்றிய அழுத்தமும் ஒப்பா

▶02



‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

# இந்திய நிதியுதவியும் ஈழத்தமிழர்களும்




(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

சாரத்துக்காகப் பேசப்பட்ட ஒன்றே. ஆனால், இலங்கையிடம் இருந்து இந்தியாவின் புவிசார் அரசியல் நலனுக்காகப் பேரம் பேசப்பட்ட விவகாரங்களே அதிகமாகத் தென்படுகின்றன.

குறிப்பாகச் சீனாவை மையமாகக் கொண்ட இந்தோ - பசுபிக் பாதுகாப்புக்காகத் தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்குக்கிழக்கில் பல பிரதேசங்களைத் தாரைவார்த்த நிலையிலேயே ஒரு பில்லியன் டொலரை நிதியுதவியாகப் பெறுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள நிதியமைச்சு வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

புதுடில்லிக்குச் சென்ற பசில் ராஜபக்ஷ, பிரதமர் நரேந்திரமோடி வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் ஆகியோரைச் சந்தித்த பின்னரே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தைச் சுற்றி இந்தியாவின் மூலோபாய நலன்களை வலுப்படுத்தும் கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவது தொடர்பாக இலங்கை இந்தியாவுக்கு வாக்குறுதியளித்துள்ளது.

அத்துடன் திருகோணமலை துறைமுக சூழலில் கப்பல் பழுது பார்க்கும் தளம் ஒன்றை நிறுவுவதற்கும் அமெரிக்க கடற்படையின் முயற்சியான பஹ்ரைனை தளமாகக் கொண்ட உளவுத்துறை பகிர்வு அலுவலகத்தில் கடற்படை அதிகாரி ஒருவரை நியமிக்கவும் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கு அருகிலுள்ள சம்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மன்னார், பூநகரி மற்றும் நெடுந்தீவு பகுதிகளில் சூரிய சக்தி திட்டங்களை மேற்கொள்ளவும் இந்தியாவிற்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது அதானி குடும்பத்துக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தியாவின் வணிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தைப் பயன்படுத்தவும் இலங்கை உடன்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பா ணத்தில் இந்தியாவின் கலாசார திட்டங்களைச் செயற்படுத்தவும் இந்தியாவிற்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே, இலங்கை தற்போது எதிர்நோக்கியிருக்கும் நிதி நெருக்கடியைப் பயன்படுத்தி அமெரிக்க- இந்திய அரசுகள் தமது இந்தோ- பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களையே முன் நிலைப்படுத்தும் என்பது தெரிந்த ஒன்றுதான்.

ஆனாலும் இலங்கைத்தீவின் நெருக்கடிக்குக் காரணமான உண்மைக் காரணிகளைக் கண்டுபிடித்து நிதியைக் கையளிக்கும் நிலையில் அமெரிக்க- இந்திய அரசுகள் இல்லை. இருந்தாலும் இந்தியாவைப் பொறுத்தவரை அயல்நாடு என்ற அடிப்படையில் ஒப்பாசாரத்துக்காகவேணும் 13 பற்றிப் பேசிவிட்டு முற்று முழுதாகத் தனது அரசியல், பொருளாதார நலன்களை அதுவும் இலங்கையில் சீன ஆதிக்கத்துக்கு எதிரான செயற்பாடுகளை மையப்படுத்தி வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இந்திய முதலீடுகளுக்குள் என்ற போர்வையில், தமிழர் பிரதேசங்கள் இந்தியக் கண்காணிப்பில் கொண்டு வரப்பட்டுள்ளதெனலாம்.

இதற்காக இந்திய இலங்கை ஒப்பந்தம் நன்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் 13 ஐ வலியுறுத்தி இந்தியப் பிரதமருக்குக் கையளித்த கடிதத்தின் அறிவுறுத்தல் அரசியல் (Instruction politics) இப்போது பலருக்கும் புரிந்திருக்கும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதற்கு, அமைச்சரவைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ புதன்கிழமை இரவு இலங்கைத்தீவு மக்களுக்கு வழங்கிய தனது உரையில் கூறியிருந்தார்.

ஆனால், பசில் ராஜபக்ஷவுடன் உரையாடிய பின்னர், இந்தியா வழங்கியுள்ள நிதியுதவிகள் மற்றும் வழங்கவுள்ள நிதியுதவிகளுக்கான பேச்சுக்களின் அணுகுமுறையை நோக்கினால் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கையைப் பிணை எடுப்பது போன்றதொரு தன்மையைக் காண முடிகின்றது.

இலங்கையிடம் இருந்து இந்தியா உத்தரவாதங்களைப் பெற்றிருக்கின்றதே தவிர இலங்கைக்கு நிபந்தனைகள் எதனையும் விதித்ததாகத் தெரியவில்லை. இந்தியத் திட்டங்களுக்கு இலங்கை அனுமதியளித்துள்ளது.

இந்தியாவின் அயல்நாட்டு முதற்கொள்கை மற்றும் கடல்சார் அதாவது பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்ற கோட்பாட்டில் இலங்கைக்கு முக்கிய பங்கு உண்டு என்று பிரதமர் மோடி கூறியிருக்கிறார்.

பௌத்த மற்றும் இராமாயணச் சுற்றுலாக்களைக் கூட்டாக ஊக்குவிப்பது உட்பட, இருதரப்பு சுற்றுலாப் பயணிகளை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளையும் மோடி இந்த ஒப்பந்தத்தின் பின்னர் வெளியிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி மற்றும் காங்கேசன்துறையில் உள்ள இரண்டு ‘இணைப்பு’ திட்டங்களை விரைவாக முடிக்க இலங்கைக்கு இந்தியா ‘அழுத்தம் கொடுப்பதாக’ இந்திய உயர்மட்ட அதிகாரியொருவர் கூறியுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் (indianexpress.com) என்ற ஆங்கிலச் செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.

தமிழர் தாயகமான வடமாகாணத்தில் உள்ள தலைமன்னார் மற்றும் தமிழ்நாட்டின் ராமேஸ்வரம் இடையே படகு சேவையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து இந்திய- இலங்கை அரசுகள் பரிசீலிக்கின்றன.

பலாலி விமான நிலைய ஓடுபாதையின் ஒரு பகுதி மறுசீரமைப்பிற்குப் பின்னர், 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சென்னையில் இருந்து பொதுமக்களுக்காக விமான நிலையங்கள் திறக்கப்பட்டது. ஆனால், கொவிட் 19 தொற்றுநோய்த்தாக்கத்தால் அது மூடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணச் சர்வதேச விமான நிலையம் என்று அழைக்கப்படும் பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதை வசதியை மீண்டும் திறப்பதற்கான அறிகுறியை இலங்கை இதுவரை வெளிப்படுத்தவில்லை. ஆனாலும் பலாலி விமான நிலைய ஓடுபாதை மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்னர் அதன் நீளத்தை அதிகரிக்க இந்தியா உதவியது மேலும் ஓடுபாதை மேம்பாட்டிற்கு உதவுவதாக இந்தியா விருப்பம் தெரிவித்துமுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டு இரு நாடுகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இதனையடுத்து எக்ஸிம் வங்கி சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கும், புவிசார் மற்றும் இட அமைவுகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் மற்றும் சிதைவுகளை அகற்றுவதற்கும் நிதி வழங்கியது. ஆனால், அந்தத் திட்டத்தில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரானவொரு சூழலிலேயே இந்தியா வடக்குக் கிழக்கில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துக் கூடுதல் கவனமும் செலுத்தியிருந்தது. அந்தத் திட்டங்கள் என்பது இந்திய நலன் சார்ந்துமுள்ளது.

மற்றொரு முக்கிய திட்டமான திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணையின் கூட்டு அபிவிருத்திக்கான ஒப்பந்தத்தில் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்டிருந்தன.

இதன் பின்னணியிலேயே ஈழத்தமிழர் விவகாரத்தை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் திட்டத்தை இந்திய மத்திய அரசு வகுத்திருக்கின்றது. அதாவது சிங்கள மக்கள் கோபப்படாத அணுகுமுறைகளையும் ஈழத்தமிழர்களையும் எப்படியாயினும் திருப்திப்படுத்தி விடலாமென்ற நம்பிக்கையோடும் இந்தியா பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

ஆகவே, கடந்த ஆண்டு ஜூன் மாதம் நிதியமைச்சர் பதவியை ஏற்பதற்கு முன்னர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பசில் ராஜபக்ஷ அங்கிருந்து சுமந்திரன் மற்றும் சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளோடு உரையாடியதன் தொடர்ச்சியாகவே இதனை அவதானிக்க வேண்டும்.

குறிப்பாக 13 பற்றி செல்வம் அடைக்கலநாதன் நடத்திய பேச்சுக்களும் சுமந்திரன் தலைமையிலான குழு அமெரிக்காவுக்குச் சென்று வந்ததன் பின்னணியும் மற்றும் சுமந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் சில உறுப்பினர்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தமிழகம் சென்று வந்ததையும் நோக்க வேண்டும்.

ஆகவே, இலங்கை ஒற்றையாட்சி முறைமைக்குள் ஈழத்தமிழ் மக்கள் வாழக்கூடிய சூழலை தமிழ்த்தேசியக் கட்சிகளின் சில பாராளுமன்ற உறுப்பினர்களே உருவாக்கிக் கொடுத்திருக்கின்றனர் என்பது பட்டவர்த்தனம்.

இதனைப் புரிந்து தேர்தலில் எப்படி யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பதை முடிவெடுக்க வேண்டியது மக்களே.

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# நாட்டு மக்களுக்கு நற்செய்தி எப்போது வரும்?

**“எனது செயல்களுக்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன் மற்றும் கடினமான முடிவுகளை எடுப்பதில் உறுதியாக இருக்கிறேன்” ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ.**

ரஷ்ய - உக்ரைன் போருக்கு அடுத்ததாக இலங்கைப் பொருளாதாரச் சிக்கல் உலகின் கவனத்தை ஈர்த்தது. அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு, உணவுப் பொருட்கள் கையிருப்பில் இல்லை, கட்டுப்படுத்த முடியாத விலை ஏற்றம், மின்வெட்டு, பொருட்களை வாங்க நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பு, அந்நியச் செலாவணி கையிருப்பில் இல்லை, டொலர் விலை ஏற்றம் போன்ற செய்திகள் பிரதான இடத்தைப் பிடித்தன.

உணவகங்கள், பேக்கரிகள் மூட்டப்பட்ட செய்திகள் அடித்தட்டு மக்களின் வயிற்றில் அடித்தது. இவற்றுக்கு முடிவு எப்போது வரும் எனத் தெரியாது மக்கள் புலம்புகின்றனர்.

ஆட்சி செய்யும் அரசுக்குள் குத்துப்பாடு.. வாசு, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மூவர் அணி பசிலுக்கு எதிரான காய் நகர்த்தல், ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக அமைச்சர் பதவி பறிப்பு.

இத்தனை பிரளயத்துக்கு மத்தியிலும் ஆட்சியைக் கைப்பற்ற சஜித் அணி துடிக்கிறது. இவற்றினால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது.

நித்திரை விட்டெழுந்தால் தட்டுப்பாடு, விலை ஏற்றம் என்ற செய்தியே முதலில் காதில் விழுகிறது. இவற்றுக்கு எப்போது முடிவு வரும் எனக் கேட்டால் எவருக்கும் பதில் சொல்லத் தெரியவில்லை. இந்த நிலையில்தான் ஜனாதிபதி கோட்டபாய நாட்டு மக்களுக்கு உரையாற்றப் போவதாக அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி தனது உரையில் தீர்வுக்கு வழி சொல்வார் என ஒரு சிலர் நம்பிக்கையுடன் காத்திருந்தனர். மின் வெட்டு காரணமாக ஜனாதிபதியின் பேச்சை சிலர் கேட்கவில்லை. நெருக்கடியான காலத்தில் நம்பிக்கையாக ஏதாவது கூறுவார் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு அடிப்படைக் காரணம் அந்நியச் செலாவணி நெருக்கடியே என ஜனாதிபதி தெரிவித்தார். 2022 ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர்களாக இருந்ததாகவும் இறக்குமதிச் செலவு 22 பில்லியன் டொலர்களாக இருப்பதால், 10 பில்லியன் டொலர் வர்த்தகப் பற்றாக்குறையை ஏற்படுத்தியிருக்கும் எனக் கூறினார். சுற்றுலாத்துறை, தகவல் தொழில் நுட்பம், வெளிநாடுகளில் இருந்து வரும் தொழிலாளர்களின் பணம் போன்றவற்றால் இலங்கைக்குக் கிடைக்க உள்ள பில்லியன் டொலர் கணக்கை வெளிப்படுத்தினார். கணக்குப் பார்க்க நல்லாகத்தான் இருக்கிறது. ஆனால், எதிர்பார்ப்பு நிறைவேறுமா? என்ற கேள்வி மனதுக்குள் குடைகிறது.

எரிபொருள், எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம் உள்ளிட்ட மக்கள் எதிர்நோக்கும் பல இன்னல்களை தாம் உணர்ந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். உலகச் சந்தையில் எரிபொருள் விலை உயர்ந்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பொருளாதார நிபுணர் ஆனந்த் ஸ்ரீனிவாசனின் கருத்து வேறு விதமாக உள்ளது.

இலங்கையில் தற்போது, வரலாற்றில் இல்லாத அளவிற்கு மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. இந்தப் பொருளாதார நெருக்கடி பற்றி எளிதாகச் சொல்ல வேண்டும் என்றால் பின்வருமாறு இரண்டு வரிகளில் சொல்லிவிடலாம். டொலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 75.87.. தற்போது போர் காரணமாகப் பொருளாதார தடையை எதிர்கொண்டு இருக்கும் ரஷ்யாவின் ருபேல் மதிப்பு 104. ஆனால் எந்த போரையும் உள்நாட்டு மோதலையும் எதிர்கொள்ளாத இலங்கை ரூபாயின் மதிப்பு 264.44 என்கிறார் பொருளாதார நிபுணர் ஆனந்த் ஸ்ரீனிவாசன்.

இந்த நெருக்கடி தன்னால் உருவாக்கப்படவில்லை என வலியுறுத்திய ஜனாதிபதி, இந்த நெருக்கடியை உருவாக்குவதற்குக் காரணமானவர்கள் இன்று அரசாங்கத்தை மக்கள் முன்னிலையில் விமர்சிப்பதாகக் குற்றம் சாட்டுகின்றார்.

உலகில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள ஒரே நாடு நமது நாடு அல்ல. முழு உலகமும் பல்வேறு இன்னல்களால் சூழப்பட்டுள்ளது. கொவிட்-19 தொற்று நோயால் ஏற்படும் அதிகரித்து வரும் கப்பல் செலவுகள், பொருட்களின் விலை உயர்வு மற்றும் சில பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவை நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. எவ்வாறாயினும், நாங்கள் மக்களின் நலனுக்காக சலுகை முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

எனவே, மக்கள் சார்பாக தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைப்பதாகக் கோரிய அவர், அண்மையில் நியமிக்கப்பட்ட தேசியப் பொருளாதாரக் குழுவும் அதன் ஆலோசனைக் குழுவும் தான் எடுக்கும் முடிவுகளை நடைமுறைப்படுத்துகிறதா என்பதைக் கண்காணிப்பதாகவும் உறுதியளித்தார். “நான் செய்யும் செயல்களுக்கு நான் பொறுப்பேற்கிறேன். இன்று மக்கள் அனுபவிக்கும் அசௌகரியங்களுக்குத் தீர்வு காண கடுமையான முடி வுகளை எடுப்பதில் உறுதியாக உள்ளேன்.”

“வர்த்தகப் பற்றாக்குறையை நிரப்பவும், அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக, சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் நட்பு நாடுகளுடனும் கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பாக விவாதங்களை ஆரம்பித்துள்ளோம். எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் புதிய வழிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றது” என ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்து தட்டுப்பாடின்றி கிடைப்பது எப்போது என்ற ஒற்றைக் கேள்விக்கு விடை தேடிய அப்பாவிப் பொதுமகனின் கேள்விக்கு ஜனாதிபதியிடம் இருந்து பதில் வரவில்லை. ஜனாதிபதியின் உரையை இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர்கள் காரசாரமாக விமர்சனம் செய்கின்றனர்.

இலங்கையில் இப்படி ஒரு இக்கட்டான நிலை ஏற்படும் என 18 மாதங்களுக்கு முன்பே பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்தனர் அப்போதே நடவடிக்கை எடுத்திருந்தால் ஓரளவு நிமிர்ந்திருக்கலாம்.

மக்களின் அன்றாட வாழ்க்கையைச் சீரமைப்பதற்குரிய வழி முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமை. ■

# சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இல்லாததால் இது நடந்தது -ரணில்

நிலைமை ஒரு முக்கியமான கட்டத்தை அடைவதற்கு முன்னதாகவே அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியிருந்தால் இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் டொலர் தட்டுப்பாட்டைத் தவிர்த்திருக்க முடியும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

“நாங்கள் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றிருந்தால் அதைச் செய்திருக்கலாம். நாங்கள் செல்லாததால் இது நடந்தது,” என்று அவர் சமூக ஊடகங்கள் வழியாக இளைஞர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

சந்தைப் பொருளாதாரத்தில் சுமார் 300 பொருட்களை இறக்குமதி செய்வதை மட்டுப்படுத்த முடிவு செய்ததால், இப்போது நாடு மற்றொரு சிக்கலை எதிர்கொள்ளும் என்று அவர் எச்சரித்தார்.



இலங்கையின் சந்தை மற்றும் பங்களாதேஷ் சந்தைக்கு 2020 இல் பிரச்சினைகள் எழுந்ததாகவும் ஆனால், இலங்கையின் கையிருப்பு வீழ்ச்சியடையும் போது பங்களாதேஷிடம் கையிருப்பு இருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கூறினார்.

அந்த நேரத்தில் இலங்கை குறிப்பாகச் சர்வதேச நாணய நிதியத்திடம் உதவியை நாடியிருக்க வேண்டும் என்றார். நாங்கள் 2021 இல் சென்றிருந்தால், நாங்கள் இரண்டு முதல் மூன்று பில்லியன் டொலர் வரை எடுத்திருப்போம். நாங்கள் அதை எடுக்கவில்லை.

“பிரச்சினைகள் ஏற்படும் போது எங்களைப் போன்ற பல நாடுகள் சென்று பணம் பெற்றன. ஆனால், இலங்கை செல்லவில்லை. எனவே, இலங்கை இறுதியாக ஓரங்கட்டப்பட்டது. எங்களிடம் பணமில்லை, உதவிகள் கிடைக்கவில்லை, அதனால்தான் இன்று இந்த நிலையில் இருக்கிறோம். வேறு எந்த காரணத்திற்காகவும் அல்ல. ”

“இது கொவிட்-19 காரணமாக என்று நாங்கள் கூற முடியாது. கொவிட்-19 எல்லா இடங்களிலும் பாதிக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 உடன் எங்களால் தொடர முடியாது. நாங்கள் உரம் கொண்டு வருவதை நிறுத்தியது கொவிட்-19 காரணமாக அல்ல. அதற்கு யார் பொறுப்பு?”

2020 தேர்தலின் போது இலங்கைச் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று 4 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். 2021 ஆம் ஆண்டளவில் நிலைமை மோசமடைந்ததாகவும் பல நாடுகள் பிணை எடுப்பு கோரி சர்வதேச நாணய நிதியத்தை அணுகியதாகவும் ஆனால், இலங்கை அதை விரும்பவில்லை என்றும் அவர் கூறினார்.

2015 ஆம் ஆண்டில், கொழும்பு துறைமுகத்தின் ஈஸ்டர் முனையத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள், இலகு ரயில் அமைப்புக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள், ஜப்பான் மற்றும் இந்தியாவின் எல்.என்ஜி மின் உற்பத்தி நிலையங்களுக்கு 2 பில்லியன் டொலர்கள் எனப் பல வளர்ச்சித் திட்டங்கள் 2015 இல் நாடு வரிசைப்படுத்தப்பட்டதாக முன்னாள் பிரதமர் கூறினார். அத்துடன் அமெரிக்காவுடனான MCC ஒப் பந்தத்தின் மூலம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

“இவற்றுடன் மட்டும் எங்களிடம் சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் உள்ளன, அதே நேரத்தில் சீனா மற்றும் ஐரோப்பிய யூனியனிடமிருந்து நிதி பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,” என்று அவர் மேலும் கூறினார்.

இதில் எதையும் நாங்கள் செலவிடவில்லை. இவை அனைத்தும் ஒழிக்கப்பட்டன. அதாவது 2020 இல் தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்ட அனைத்து முதலீட்டுத் திட்டங்களும் நிறுத்தப்பட்டன.

நாடு முன்னோக்கிச் செல்வதற்கு இலங்கைக்கு அவசரமாக தேசிய ஒருமித்த கருத்து தேவை எனவும் இல்லையெனில் மக்களுக்கு எதிர்காலம் இருக்காது எனவும் முன்னாள் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

“எங்கள் நாட்டில் தேசிய ஒருமித்த கருத்து இல்லை. ஒரு அரசு வரும்போது மற்ற அரசு செய்ததை மாற்றிவிடும். நாம் செய்ததை முன்னெடுத்துச் சென்றிருந்தால் இந்த அரசாங்கத்திற்கு இன்று பிரச்சினை இருந்திருக்காது. இந்த நிலையில் நாங்கள் இருக்கமாட்டோம். ஆனால், அது நடக்கவில்லை. கட்சிகள் தேசிய ஒருமித்த கருத்தை அறிந்து கொண்டு முன்னேற வேண்டும் அல்லது எதிர்காலத்தை இழந்துவிடுவோம்” என்று அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் சனத்தொகையில் சுமார் 50% ஆகக் கூடிய இந்த நிலைமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறுகிய கால நிவாரணம் வழங்கும் திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தும் என எதிர்பார்ப்பதாகவும் விக்ரமசிங்க கூறினார். ■






# தலைமைத்துவப் போட்டியால் தடுமாறும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

ஜெயலலிதா என்ற இரும்புப் பெண்மணி இருந்த வரையில் அவருடைய குரல் மட்டுமே ஓங்கி ஒலித்தது. ஜெயலலிதா மறைந்த பின்னர் முதல்வராவதற்கு ஆசைப்பட்ட சசிகலாவால் கழகத்தினுள் கலகம் எழுந்தது. ஜெயலலிதா கையைக் காட்டிய ஓ.பன்னீர்ச்செல்வத்தைத் தூக்கி எறிந்து விட்டு எடப்பாடி பழனிச்சாமி முன்னிலைப்படுத்தப்பட்டார். முதல்வர் பதவி கொடுத்த சுகானுபவங்களை இழக்க விரும்பாத எடப்பாடி பழனிச்சாமி சசிகலாவைத் தூக்கி எறிந்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் சிறையில் இருந்த சசிகலா விடுதலையாகி வெளியே வந்ததும் தலைமையைக் கைப்பற்ற பெரும் முயற்சி செய்தார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்ததால் அவரின் முயற்சிகள் அனைத்தும் நீர்த்துப்போயின.

கழகத்தினுள் எடப்பாடியின் கை ஓங்கியது. பன்னீரும் அவரது ஆதரவாளர்களும் ஓரம் கட்டப்பட்டனர். கழகத்தின் பிடி எடப்பாடியின் கையில் உள்ளது. இரட்டை இலை வழக்கு பன்னீரின் வசம் உள்ளது. இரட்டை இலை இல்லாத தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியடைந்த வரலாறு உள்ளது. இரட்டை இலை இல்லாமல் ஜெயலலிதாவே படுதோல்வியடைந்தார். ஆகையால், பன்னீரும், எடப்பாடியும் இணைந்து செயற்பட்டால்தான் கழகம் உருப்படியாக இருக்கும். இல்லையேல் இருவரின் அரசியல் எதிர்காலமும் சூனியமாகி விடும். சசிகலாவுக்கு ஆதரவான சில தொண்டர்களும், நிர்வாகிகளும் குரல் கொடுத்த போது அவர்கள் நீக்கப்பட்டனர்.

எடப்பாடியை வழிக்குக் கொண்டுவர சசிகலாவை ஆதரித்து பன்னீர் பேசுவார். அப்போது சிலர் எடப்பாடிக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பார்கள். இன்னும் சிலர் பன்னீருடன் சமாதானம் பேசுவார்கள். இப்போது பன்னீரின் சகோதரரான ஓ.ராஜாவும் மூத்த நிர்வாகிகளும் சசிகலாவைச் சந்தித்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அண்ணனுக்கு அடங்கிய தம்பியான ராஜா, அண்ணனான பன்னீருக்குத் தெரியாமல் சசிகலாவைச் சந்தித்திருக்க மாட்டார். சந்தித்தது மட்டுமல்லாமல் கழகத்துக்குத் தலைமை ஏற்க வரும் படி அழைப்பு விடுத்துள்ளனர். சசிகலாவுக்கு ஆதரவாக தீர்மானம் செய்தது, சசிகலாவைச் சந்தித்தது, அழைப்பு விடுத்தது என்பனவற்றை எடப்பாடி தரப்பு கொஞ்சமும் ரசிக்கவில்லை. அவர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. சசிகலாவைச் சந்தித்த ராஜாவும் இன்னும் சிலரும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர். தம்பியை நீக்குவதற்கு அண்ணன் பன்னீர் கையெழுத்திட்டார்.

கடந்த ஜூலை மாதத்திலிருந்து இதுவரை மட்டும் 305 பேர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். சசிகலாவைச் சந்தித்தவர்கள், பாரதீய ஜனதாக் கட்சிக்கு எதிராகப் பேசியவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தொடர்பிலிருந்தவர்கள், கட்சி விரோத நடவடிக்கை எனப் பல காரணங்களை முன்வைத்து இந்த நீக்கங்கள் நடைபெற்றிருந்தாலும், ‘ஒரு கட்சிக்கு இது ஆரோக்கியமானதா?’ என்கிற அழுத்தமான கேள்வியை முன்வைத்து விவாதம் எழுந்திருக்கிறது. பாரதீய ஜனதாவை எதிர்த்துப் பேசுபவர்களை நீக்கியது மிகவும் கொடுமையானது.

கட்சியிலிருந்து நீக்கம் என்பது கழகத்துக்குப் புதிதல்ல. எடப்பாடி பழனிச்சாமி - பன்னீர் செல்வம் தலைமையிலான



அணிகள் ஒன்றிணைந்த பின்பு, சசிகலா, தினகரனுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாக சுமார் 3,000 நிர்வாகிகள் கட்சிப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து, மாவட்டச் செயலாளர்களுடன் ஒத்துப் போகாத நிர்வாகிகள் அவ்வப்போது நீக்கப்பட்டு வந்தனர். ஆட்சியிலிருந்தபோது, குறைவாக இருந்த இந்த நீக்க எண்ணிக்கை, எதிர்க்கட்சியாக அமர்ந்த பிறகு வேகம் பெற்றிருக்கிறது.

கடந்த ஆண்டு ஜூலை, நவம்பர் மாதங்களில் மட்டும் 16 நீக்க அறிவிப்புகள் வெளியாகியிருக்கின்றன. ஜூலையில் மட்டுமே தஞ்சை தெற்கு, கன்னியாகுமாரி, சேலம் புறநகர், அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து 29 பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். கட்சி விரோத நடவடிக்கைகள் காரணமாகக் கூறப்பட்டாலும், நீக்கப்பட்ட அந்த நிர்வாகிகளின் பின்னால் எத்தனை ஆதரவாளர்கள் கட்சியிலிருந்து வெளியேறியிருப்பார்கள் என்பதைத் தலைமை யோசிப்பதில்லை. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் சமயத்தில், இந்த நீக்கம் அதிகரித்தது. கடந்த பெப்ரவரியில் மட்டும் 157 பேர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இது கட்சிக்குப் பெரிய பின்னடைவு.

ஒரு புகார் வந்தால், அது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுப்பது ஜெயலலிதாவின் வழக்கம். இதற்காகக் கட்சிக்குள் ஐவரணி செயற்பட்டது. இது போக, உளவுத்தகவல் மூலமாகவும் புகார்களின் உண்மைத்தன்மையை அறிந்துகொள்வார். அதன் பிறகுதான் கடும் நடவடிக்கைகள் பாயும்.

இப்போது மாவட்டச் செயலாளர்களின் ராஜாங்கம்தான் நடக்கிறது. தங்களுக்குப் பிடிக்காத நிர்வாகிகள், தொண்டர்களைக் கட்சித் தலைமை மூலமாகக் கட்டம் கட்டிவிடுகின்றனர். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நீக்கப்பட்ட 10 பேரும், தர்மபுரி, ராணிப்பேட்டை, தேனி, திருப்பூர் புறநகர், விருதுநகர் கிழக்கு மாவட்டங்களில் நிலவும் உட்கட்சிப் பூசலால் நீக்கப்பட்டவர்கள். இவர்கள் மீதான புகார்களைக் கட்சித் தலைமை விசாரிக்கவே இல்லை.

மாவட்டச் செயலாளர்கள் சொல்வதைக் கேட்டு நடக்கவேண்டிய நெருக்கடியில்தான், பன்னீரும் எடப்பாடியும் இருக்கிறார்கள். கடந்த ஒன்பது மாதங்களில் நீக்கப்பட்ட 305 பேரில், 50 பேர் தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். 16 பேர் எடப்பாடி பழனிச்சாமி மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகிக்கும் சேலம் புறநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் மாவட்டத்திலேயே, கட்சி விரோத நடவடிக்கைகளை கட்டுகின்றன. இது ஏன் நடக்கிறது என்பதை அமர்ந்து பேசி, சுமூகமாகத் தீர்வுகாண்பதற்குத் தலைமை விரும்பவில்லை. இப்படியே போனால், ‘எங்கள் இருவரையும் தவிர, எல்லோரையும் கட்சியிலிருந்து நீக்குகிறோம்’ என்று ஒரு நள்ளிரவில் இவர்கள் அறிக்கை வெளியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை” என்கிறார்கள்.



“முன்னாள் அமைச்சர் நிலோபர் கபில் மீது பண மோசடிப் புகார் எழுந்தபோது, அதைக் காரணமாகக் காட்டி கட்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். ஆனால், முன்னாள் அமைச்சர்கள் மணிகண்டன், ஜெயக்குமார், ராஜேந்திர பாலாஜி ஆகியோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பிறகும்கூட, கட்சியிலிருந்து எந்த நடவடிக்கையும் இல்லை. ஒருசார்பாகவே அ.தி.மு.க தலைமை நடந்து கொள்வது இதன் மூலம் வெட்ட வெளிச்சமாகிறது. பன்னீர் - எடப்பாடி கட்டுப்பாட்டில் இப்போது கட்சி இல்லை. மாவட்டச் செயலாளர்கள் கையில்தான் கட்சி இருக்கிறது. அதுதான் இது போன்ற நீக்கப் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம்” என்றார் அ.தி.மு.க-விலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் கழகச் செய்தித் தொடர்பாளர் புகழேந்தி.

வாய்பாய், அத்வானி ஆகிய இரண்டு தலைவர்களும் இணைந்து பாரதீய ஜனதாக் கட்சியை வழி நடத்தினார்கள். கருணாநிதி, அன்பழகன் ஆகிய இருவரின் ஒருமித்த கருத்துடன் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி நடை போட்டது. மோடி, அமித் ஷா ஆகியோரின் செயற்பாட்டினால் அசைக்க முடியாத இடத்தில் பாரதீய ஜனதா உள்ளது. எடப்பாடி பழனிச்சாமி, ஓ. பன்னீர்ச்செல்வம் ஆகியோரின் அதிகாரப் போட்டியால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தடுமாறுகிறது. ■

**கடந்த ஆண்டு ஜூலை, நவம்பர் மாதங்களில் மட்டும் 16 நீக்க அறிவிப்புக்கள் வெளியாகியிருக்கின்றன. ஜூலையில் மட்டுமே தஞ்சை தெற்கு, கன்னியாகுமாரி, சேலம் புறநகர், அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து 29 பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். கட்சி விரோத நடவடிக்கைகள் காரணமாகக் கூறப்பட்டாலும், நீக்கப்பட்ட அந்த நிர்வாகிகளின் பின்னால் எத்தனை ஆதரவாளர்கள் கட்சியிலிருந்து வெளியேறியிருப்பார்கள் என்பதைத் தலைமை யோசிப்பதில்லை. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் சமயத்தில், இந்த நீக்கம் அதிகரித்தது. கடந்த பெப்ரவரியில் மட்டும் 157 பேர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இது கட்சிக்குப் பெரிய பின்னடைவு.**




இலங்கை தமிழர் தரப்பு அரசியல் மட்டுமல்ல சிங்கள, முஸ்லிம் தரப்பு அரசியலுக்கும் 70 ஆண்டுகளுக்கு மேலான வரலாறு இருக்கிறது.

இந்தப்பின்னணியில், தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தில் பதிவுசெய்வதற்காக எழுபதிற்கும் மேற்பட்ட கட்சிகள் விண்ணப்பங்களை அனுப்பிவிட்டு காத்திருக்கின்றன. இச்செய்தி அண்மையில்

# ஆணவம் மிஞ்சினால்... எஞ்சுவது என்ன...?

வெளியானது !

ஏற்கெனவே, பல கட்சிகள் பாராளுமன்றத்திலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் தத்தமது பிரதிநிதிகளை வைத்திருக்கின்றன. காலத்துக்குக் காலம் தங்கள் தனிப்பட்ட காரணங்களினாலும் தன்முனைப்பு ஆணவத்தினாலும், கருத்து மோதல்களினாலும் கட்சிகளிலிருந்து வெளியேறி, புதிய புதிய கட்சிகளை உருவாக்கியவர்கள் பற்றி அறிந்திருக்கின்றோம்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், தோன்றிய ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து பண்டாரநாயக்க தனித்துச் சென்று உருவாக்கியதே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி. அதே போன்று தமிழ்க்காங்கிரஸிலிருந்து புதிதாகத் தோன்றியதே தமிழரசுக்கட்சி. சமசமாஜக் கட்சி, கம்மியூனிஸ்ட்கட்சி ஆகியவற்றிலும் பிளவுகள் தோன்றி புதிய புதிய கட்சிகள் உருவாகின. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் பல தடவை பிளவுகளைக் கண்டது.

அதில் ஒரு பிளவுதான் இன்று ஆளும் பொதுஜன முன்னணிக் கட்சி. அதற்கு முன்னர் சந்திரிக்காவும் அவரது கணவர் விஜய குமாரதுங்கவும் சேர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உடைத்துக்கொண்டு வெளியேறி மக்கள் கட்சியை உருவாக்கினர்.

ஐக்கிய தேசியக்கட்சியில், ரணிலா? சஜித்தா? தலைமை ஏற்பது என்ற போராட்டத்தின் விளைவுதான் இன்றைய ஐக்கிய மக்கள் சக்தி. தமிழர் தரப்பு அரசியல் கட்சிகள் குறித்து பேசவே வேண்டாம். தமிழ்க்காங்கிரஸ், தமிழரசு இணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு இறுதியில் என்ன நடந்தது...?

ஆனந்தசங்கரி அதனை தன் வசப்படுத்திக்கொண்டு தனி வழி சென்றார்.

புலிகளின் தலைவர், ஆயுதப் போராட்ட களத்திற்கு அப்பால் ஜனநாயக அரசியல் பேசுவதற்காக உருவாக்கிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் தற்போது நடந்துகொண்டிருக்கும் உள்முரண்பாடுகளைப் பார்த்து சந்தி சிரிக்கிறது. ஈ.பி.ஆர்.எல்.எஃப் கட்சி பிளவு கண்டது. ரெலோவும் அவ்வாறு பிளவுகளைச் சந்தித்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து விக்னேஸ்வரனும் பிரிந்து சென்று புதிய கட்சி அமைத்தார். மூத்த அரசியல் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் குமார் பொன்னம்பலம் அணி - உடுப்பிட்டி சிவசிதம்பரம் அணி என்று முன்னர் பிளவுண்டது. மலையகக் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகள் பற்றி தனிக்கதையே இருக்கிறது.

> **“இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை ஏற்பதா..? இல்லையா..? என்பதில் கஜன்மாரின் கட்சிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே நடந்த காகித அறிக்கை அக்கப்போர் பிரசித்தம்! தற்போது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அழைக்கும் பேச்சுவார்த்தைக்குத் தங்களால் வரமுடியாது என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ கட்சி பகிரங்கமாக அறிவித்துள்ளது. எந்தவொரு பிரச்சினைக்குமான தீர்வு இறுதியில் பேச்சுவார்த்தையில்தான் முடிவடையும். உலக மகா யுத்தங்களின் போதும் இந்திய - சீன மற்றும் இந்திய - பாகிஸ்தான் போரின்போதும் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன.”**

தான் அரசியல் பிரவேசம் மேற்கொண்ட காலத்தில் ஒன்பது வயது நிரம்பிய சஜித் பிரேமதாச, தனக்குச் சரிசமமாக எப்படி வரமுடியும் என்று தலைமுறை அரசியல் பேசிய ரணில் விக்கிரமசிங்க தான் மட்டுமன்றி தனது ஐக்கிய தேசியக்கட்சியையும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடையச் செய்துகொண்டார். பிறகு தேசியப்பட்டியல் ஊடாக பின்கதவினால் பாராளுமன்ற மன்றத்துக்குள் பிரவேசித்துள்ளார்.

1970 களில் ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்டு அன்றைய அரசின் கொடிய அடக்குமுறையினால் முறியடிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி (JVP) 1977 இன்பின்னர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்கு வந்தபிறகு பிளவுகளைச் சந்தித்தது. அதன் தலைவர் ரோகண விஜேவீரா கொல்லப்பட்டதன் பின்னர், அக்கட்சியின் தலைவராக தெரிவான சோமவன்ஸ அமரசிங்கவும் தனிவழிசென்று இறுதியில் மறைந்தார்.

மக்கள் விடுதலை முன்னணியில் முன்பிருந்த விமல் வீரவன்ஸவும் அங்கிருந்து வெளியேறி, புதிய கட்சியை ஆரம்பித்து ராஜபக்ஷ சகோதரர்களுடன் ஐக்கியமானார். தற்போது அவரும்தான் இணைந்திருந்த பொதுஜன பெரமுனை தந்திருந்த அமைச்சுப் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டு, தனி வழி செல்லத் தயாராகியிருக்கிறார். அவரது கட்சியைச் சேர்ந்த மேலும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கான தமது ஆதரவை விலக்கிக்கொண்டுள்ளனர்.

இந்தக் குறிப்புகள் அனைத்தும் இலங்கை மூவின மக்களும் அதாவது தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையும் தகுதியும் பெற்ற அனைவரும் நன்கு அறிந்த செய்திகள்தான்.

எனினும் அவர்களும் காலத்துக்குக் காலம் வேட்பாளர்களின் வாக்குறுதிகளை நம்பி மோசம் போனவர்கள்தான்.

சமகாலத்தில் எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் குழந்தைகளின் பால்மா உட்பட அத்தியாவசியப் பொருட்களுக்காகவும் வீதிகளில் நீண்ட வரிசையில் கால் கடுக்க நிற்கும் தாய்மாரும் தந்தையரும் இளைஞர் யுவதிகளும் இன்றைய பொதுஜன முன்னணி அரசை அரியணையில் ஏற்றுவதற்காக வாக்களித்தவர்கள்தான்.

இவர்கள் இப்போது அரசை திட்டித்தீர்த்து சாபம் போடுகிறார்கள். இவர்களின் அன்றாட குமுறல்களை நாம் அச்சு மற்றும் இணைய ஊடகங்களில் பார்த்து வருகின்றோம். தென்னிலங்கை அரசியலில்தான் இத்தனை வேடிக்கை என்று மாத்திரம் சொல்லிவிட்டு நாம் ஒதுங்கிவிடமுடியாது. வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்க்கட்சிகளுக்கிடையே நடக்கும் கேலிக்கூத்துக்களையும் நாம் பார்த்து ரசித்து கடந்து சென்றுகொண்டிருக்கின்றோம்.

கடந்த பல நாட்களுக்கு முன்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்புவதில் இந்த தமிழ்க் கட்சிகளுக்குள் நீடித்த இழுபறிபற்றி அறிந்திருப்பீர்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை ஏற்பதா..? இல்லையா..? என்பதில் கஜன்மாரின் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே நடந்த காகித அறிக்கை அக்கப்போர் பிரசித்தம்! தற்போது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அழைக்கும் பேச்சு வார்த்தைக்குத் தங்களால் வரமுடியாது என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ கட்சி பகிரங்கமாக அறிவித்துள்ளது.


எந்தவொரு பிரச்சினைக்குமான தீர்வு இறுதியில் பேச்சுவார்த்தையில்தான் முடிவடையும். உலக மகா யுத்தங்களின் போதும் இந்திய - சீன மற்றும் இந்திய - பாகிஸ்தான் போரின்போதும் பேச்சு வார்த்தைகள் நடந்திருக்கின்றன.

ஏன்... சமகாலத்தில் நடக்கும் ரஷ்ய - உக்ரைன் மோதலிலும் சமாதானப்பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன.

ஈழப்போராட்டத்தில் வெவ்வேறு முனைகளில் நின்ற பிரபாகரனும் ஸ்ரீசபாரத்தினமும் பாலகுமாரும் பத்மநாபாவும் கூட உமா மகேஸ்வரனைத் தவிர்த்துவிட்டு ஒரு உடன்பாட்டிற்கு வருவதற்கு பேச்சுவார்த்தை நடத்தியவர்கள்தானே..!?

தமிழ் மக்களைத் தொடரும் இனம்புரியாத சாபம், அந்த ஒற்றுமையையும் பின்னர் குலைத்து சகோதரப் படுகொலையில் முடிந்துவிட்டது என்று நாம் விதியின் மேல் பழியை போடலாம்.




□ தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) □ ஈழ புரட்சிகர மாணவர் இயக்கம் (EROS) □ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) □ தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE) □ தமிழீழ விடுதலை இராணுவம் (TELA) □ தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) □ தமிழீழ இராணுவம் (TEA) □ புரட்சிகர ஈழ விடுதலை இயக்கம் (RELO) □ தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT) □ தமிழ மக்கள் விடுதலை முன்னணி (PLFT) □ தமிழீழ விடுதலை தீவிரவாதிகள் (TELE) □ தமிழீழ புரட்சி அமைப்பு (TERO) □ தமிழீழ விடுதலை கெரில்லாக்கள் (TELG) □ தமிழீழ செம்படை (RFTE) □ தமிழீழ தேசிய இராணுவம் (TENA) □ தமிழீழ பாதுகாப்பு படை (TEDF) □ தமிழீழ கொரில்லா இராணுவம் (GATE) □ இலங்கை விடுதலை தமிழ் இராணுவம் (IFTA) □ தமிழீழ புரட்சிகர மக்கள் விடுதலை இராணுவம் (TERPLA) □ கழுகு படை (EM) □ தமிழீழ விடுதலை நாகம் படை (TELC) □ தமிழீழ கொமாண்டோக்கள் (TEC) – உட்பட பல்வேறு இயக்கங்களும் தனி மனிதர்களும் ‘தமிழீழம்’ என்ற இலக்கிற்காக ‘ஆயுதப் போரைத்’ தொடங்கியிருந்தார்கள்.

இலங்கைத் தமிழினம் கொடுத்த விலை அதிகம், அதைவிட இம்மக்களுக்குக் காலங்காலமாக வாக்குறுதிகள் வழங்கி ஆசனங்களைப்பெற்று பாராளுமன்றம் செல்லும் எமது பிரதிநிதிகளான தமிழ்த்தலைவர்களின் ஆணவம் பெரிது.

ஆணவம் மிஞ்சினால் கோவணமும் மிஞ்சாது என்பார்கள்.

கட்சிகளின் பிளவுகளுக்கு முக்கியமாகியிருப்பது தலைவர்களின் இரத்தத்தில் ஊறியிருக்கும் தன்முனைப்பு ஆணவம்தான்.

ஒரு கடிதம் எழுதுவதற்கும் ஒரு பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கும் கூட ஒருமித்த முடிவை எடுக்க முடியாத கட்சித் தலைவர்கள், தங்கள் ஆணவத்தை மாத்திரம் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கின்றனர்.

அடுத்த பொதுத்தேர்தல் வரையில் அரசும், அதனுடன் பேசுவதா..? வேண்டாமா..? என்று தடுமாறிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகளும் ஊடக அறிக்கைகளின் ஊடாக மக்களை ஏமாற்றிக்கொண்டுதான் இருக்கப்போகின்றன.

இன்று இலங்கைத் தேசம் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இந்த நாட்டைக் கூறுபோட்டு விற்பதன் மூலமாவது தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளலாம் என்று அரசு முயற்சிக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபைக்காகவும் சர்வதேச சமூகத்திற்காகவும் இனப்பிரச்சினை தீர்வு குறித்து தொடர்ந்து குரல் எழுப்பிவரும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் அரசின் தலைவர் முதல் கட்டமாகப் பேச வந்துள்ளார். அதற்குச்செல்வதிலும் தமிழர் தரப்பில் இழுபறி !

தேசிய அரசாங்கத்திற்கான முயற்சி ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும்போது, அதற்கு எதிராகவும் எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பத் தொடங்கியிருக்கின்றன. சோலியான் குடுமி சும்மா ஆடாது. பொதுஜன பெரமுன அரசின் ஜனாதிபதியும் காரியத்துடன்தான் காய் நகர்த்துகிறார். இவ்வேளையில் முகநூல் வழியாக அவதானிக்கு கிடைத்துள்ள கேலிச்சித்திரத்தை தீம்புனல் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம். ■

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 13

## கல்வி நிர்வாகச் சீர்கேடுகள்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 09

**பகுதி - 02**

இனி, மாகாணக் கல்வி நிர்வாகக் கட்டமைப்புகள் எவ்வாறு இந்த குளறுபடிகளில் தெரிந்தோ தெரியாமலோ துணைபோகின்றன என விளக்குகிறேன்.

இனியாவது அதை உணர்ந்து தாங்கள் சொல்லியபடி, வடமாகாண ஆளுநரோ, மாகாணக் கல்விப் பணிப்பாளரோ, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரோ உடனடி நடவடிக்கையில் இறங்க உதவியாக இவற்றை நேரடியாகவே இங்கு பகிர்கிறேன். அவர்கள் அதைச் செய்யக்கூடிய சூழ்நிலை இல்லை எனின் என்ன காரணம்? யார் தடுக்கிறார்கள்? என்பதை அவர்களே மக்களுக்குப் பகிரங்கப்படுத்தட்டும். மக்கள், எங்கள் கல்வி சமூகம் ஆதரவு கொடுத்து அவர்கள் அதை நடத்திக்காட்ட உதவலாம்.

மூன்று விடயங்களாக இந்தக் குளறுபடிகளை வகைப்படுத்தி உள்ளேன்.

1) வடமாகாண ஆசிரிய வள சமபரம்பல் குறைபாடுகள்

2) ஆரம்பக்கல்வியில் குவிக்கப்பட்டுள்ள பட்டதாரி அல்லாத அல்லது போதிய அளவு பயிற்றப்படாத ஆசிரிய வளக்குறைபாடுகள்.

3) கட்டாய ஆசிரிய இடமாற்றங்களில் அரசியல் சுயலாப தலையீடுகளால் ஏற்படும் குறைபாடுகள்!


**கேள்வித் தொகுதி 1:**

இலங்கை கல்வி அமைச்சின் புள்ளிவிபரங்களில் வடமாகாணம் 38.8% பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டுள்ளது என்று கூறினேன் அல்லவா. ஆனால், மாவட்ட ரீதியில் அதுவும் வடமாகாண கல்விநிர்வாகக் கட்டமைப்பால் கையாளப்படக் கூடிய மாவட்ட ரீதியான வளப்பரம்பலில் என்ன நடக்கிறது தெரியுமா?

**62. Teachers of Government Schools by Category of Appointment by District - 2018**

| District | Category of Appointment of Teachers | | | | | Total | Graduate % |
|---|---|---|---|---|---|---|---|
| | Graduate | Trained | Trainee | Untrained | Other | | |
| 11. Colombo | 10,109 | 7,544 | 113 | 23 | 57 | 17,846 | 56.6 |
| 12. Gampaha | 9,176 | 7,351 | 37 | 11 | 14 | 16,589 | 55.3 |
| 13. Kalutara | 6,357 | 5,094 | 80 | 18 | 40 | 11,589 | 54.9 |
| 21. Kandy | 8,139 | 9,377 | 379 | 194 | 11 | 18,100 | 45.0 |
| 22. Matale | 2,855 | 3,798 | 124 | 66 | 5 | 6,848 | 41.7 |
| 23. Nuwara Eliya | 3,045 | 6,931 | 341 | 370 | 6 | 10,693 | 28.5 |
| 31. Galle | 5,340 | 6,246 | 131 | 46 | 18 | 11,781 | 45.3 |
| 32. Matara | 4,966 | 5,316 | 104 | 62 | 3 | 10,451 | 47.5 |
| 33. Hambantota | 3,798 | 4,486 | 56 | 21 | 8 | 8,369 | 45.4 |
| 41. Jaffna | 4,288 | 4,648 | 103 | 10 | 2 | 9,051 | 47.4 |
| 42. Mannar | 669 | 1,416 | 14 | 4 | 1 | 2,104 | 31.8 |
| 43. Vavuniya | 629 | 1,361 | 53 | 4 | 7 | 2,054 | 30.6 |
| 44. Mullaitivu | 858 | 2,018 | 72 | 1 | - | 2,949 | 29.1 |
| 45. Kilinochchi | 610 | 1,308 | 81 | 1 | - | 2,000 | 30.5 |
| 51. Batticaloa | 3,509 | 3,830 | 178 | 35 | 1 | 7,553 | 46.5 |
| 52. Ampara | 3,572 | 6,265 | 218 | 36 | 2 | 10,093 | 35.4 |
| 53. Trincomalee | 1,957 | 3,645 | 174 | 23 | 2 | 5,801 | 33.7 |
| 61. Kurunegala | 9,503 | 10,591 | 384 | 68 | 15 | 20,561 | 46.2 |
| 62. Puttalam | 4,006 | 4,723 | 164 | 35 | 13 | 8,941 | 44.8 |
| 71. Anuradhapura | 5,599 | 6,822 | 184 | 32 | 2 | 12,639 | 44.3 |
| 72. Polonnaruwa | 2,538 | 2,608 | 86 | 18 | 2 | 5,252 | 48.3 |
| 81. Badulla | 4,939 | 8,196 | 364 | 208 | 89 | 13,796 | 35.8 |
| 82. Moneragala | 2,840 | 3,636 | 152 | 62 | 8 | 6,698 | 42.4 |
| 91. Ratnapura | 5,521 | 7,551 | 197 | 154 | 5 | 13,428 | 41.1 |
| 92. Kegalle | 5,918 | 5,874 | 230 | 119 | 7 | 12,148 | 48.7 |
| **Total** | **110,741** | **130,635** | **4,019** | **1,621** | **318** | **247,334** | **44.8** |

Source : School Census 2018




Page 74

யாழ் மாவட்டம் கிட்டத்தட்ட 48 % பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டிருக்க கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்கள் 30% அல்லது அதற்குக் குறைவான பட்டதாரி ஆசிரிய வளத்தையே கொண்டுள்ளது. இது நியாயமா? நுவரெலியா மாவட்டம் இறுதிநிலையில் 27%.

தேசிய சராசரி 44% வீதமாக இருக்க இந்த மாவட்டங்கள் ஏன் பிற்படுத்தப்பட்டுள்ளன? இதைச் சரிசெய்யவேண்டியது மாகாணக் கல்வி அமைச்சு அல்லவா? எங்களிடம் போதிய வளங்கள் இல்லை என்று காரணம் கூறப்போகிறீர்களா? அந்த விடயத்துக்கு வருகிறேன்.

வடமாகாணக் கல்வி அமைச்சு வெளியிட்ட ஆசிரிய பங்கீட்டு அட்டவணைகளை ஆராய்ந்த போது யாழ் மாவட்டத்தில் குறிப்பாக யாழ்ப்பாண வலயத்தில் மட்டும் 271 ஆசிரியர்கள் மேலதிகமாகப் பணி புரிகிறார்கள். அதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களில் 200ற்கும் 100ற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன. (ஆதாரம்: http://www.edudept.np.g ov.lk/s electschool cadre.pup) பாடரீதியாக வெற்றிடங்களை ஆராயும் போது அது இன்னும் இடியப்பச் சிக்கலாகத் தாறுமாறாக உள்ளது. அருகில் உள்ள சிறிய பாடசாலைகளைத் தொகுதிப்படுத்தி வளம் பகிரப்படும் முறைகளை கையாளலாம் அல்லவா?

(சில இடங்களில் மட்டும் அவ்வாறு பாடசாலைகளுக்கிடையிலான வளப்பகிர்வு முன்னுதாரணமான சில ஆசிரியர்களுடன் நடக்கிறது. ஆனால், பல இடங்களில் இல்லை என அறிகிறேன்) இது சற்று நின்று நிதானித்து செய்யவேண்டியது மாகாணக்கல்விக் கட்டமைப்பின் பணி அல்லவா?

வடமாகாணஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்டு முடிவுத் திகதி 30.06.2020 என அறிகிறேன். அதில் இந்த முறை சமபரம்பலை முன்னிலைப்படுத்த அனைத்து தரப்பும் ஆத்மார்த்தமாக முன் வர வேண்டும். 01.01.2021 மலரும் போது சம வாய்ப்புகளை முடிந்த வரை பிள்ளைகளுக்கு வழங்க உதவுங்கள்!

**கேள்வித் தொகுதி 2:** தொண்டர், ஆசிரியர் குவியம் சார்ந்த குறைபாடுகள்!

ஆரம்பக் கல்வி என்பது பிஞ்சுப் பிள்ளைகளுக்கு போடப்படும் அத்திவாரம். அது மிக மிக முக்கியமாக கவனம் எடுக்கப்பட வேண்டியது! அங்கு கட்டப்படும் அத்திவாரத்தில்தான் அந்தப் பிள்ளைகளின் மொத்த கல்வி வளர்ச்சியின் கட்டுமானங்களும் கட்டி எழுப்பப்படப் போகின்றன. ஆனால், அந்த அத்திவாரம் உறுதியாகப் போடப்படா விட்டால் என்ன நடக்கும் என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரியும். (அதை விளக்க இன்னுமொரு அத்தியாயம் எழுதுகிறேன்).

ஆனால், நான் இதுவரை சேகரித்த தரவுகளின் படி, வடமாகாணத்தில் ஆரம்பக்கல்வி கற்பிப்பவர்களில் கிட்டத்தட்ட 40% ற்கும் மேற்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தொண்டர் ஆசிரியர்களாகவே இருப்பதாகத் தெரிகிறது. உண்மையான இலக்கங்கள் விரைவில் வெளியே வரும். அதை இந்தக் கட்டுரையின் இறுதியில் சொல்லப்படும் வழியில் நீங்கள்தான் வெளியே கொண்டு வரப்போகிறீர்கள். அவ்வாறு உண்மையில் எத்தனை தொண்டர் ஆசிரியர்கள் ஆரம்பக் கல்வியில் போதிய பயிற்சிகளை வழங்காமல் குவியப்படுத்தி இருக்கிறீர்கள்? இவ்வாறு பெரும்பாலான தொண்டர் ஆசிரியர்களை ஆரம்பக் கல்வியில் குவியப்படுத்தியது யார்? அவர்களுக்குப் போதிய பயிற்சியும் போதிய வளமும் வழங்கப்பட்டதா? கல்வியியலாளர்களே! நீங்கள் சொல்லுங்கள், இது சரியான நடைமுறையா? எங்கள் கல்வியின் அத்திவாரங்கள் உறுதியாகப் போடப்பட வேண்டியது அவசியம் அல்லவா? இது தொடர்ந்தால் ஒரு சமூகமாக இன்னும் பின் தங்கி விடுவோம் அல்லவா?

**கேள்வித் தொகுதி 3:** கட்டாய இடமாற்றக் குறைபாடும்!

> **வடமாகாணக் கல்வி அமைச்சு வெளியிட்ட ஆசிரிய பங்கீட்டு அட்டவணைகளை ஆராய்ந்த போது யாழ் மாவட்டத்தில் குறிப்பாக யாழ்ப்பாண வலயத்தில் மட்டும் 271 ஆசிரியர்கள் மேலதிகமாகப் பணி புரிகிறார்கள். அதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களில் 100 ற்கும் 200 ற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன. (ஆதாரம்:** http://www.edudept.np.g ov.lk/s electschool cadre.pup) **பாடரீதியாக வெற்றிடங்களை ஆராயும் போது அது இன்னும் இடியப்பச் சிக்கலாகத் தாறுமாறாக உள்ளது. அருகில் உள்ள சிறிய பாடசாலைகளைத் தொகுதிப்படுத்தி வளம் பகிரப்படும் முறைகளைக் கையாளலாம் அல்லவா?**

வடமாகாணத்தில் பல ஆசிரியர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கிடையிலும் கஷ்டப் பிரதேசங்களில் 7 வருடங்கள் பணிசெய்து வருகிறீர்கள். பணி செய்து திரும்பியுள்ளீர்கள். ஆனால், இந்த விதி ஏன் தொடர்ச்சியாக சொந்த மாவட்டங்களில் பணிபுரியும் பலஆசிரியர்களுக்குப் பயன்படுத்தப்படவில்லை?

வடமாகாணத்தில் மட்டும் கஷ்டப் பிரதேசங்கள் / வேறு மாவட்டங்களுக்கு சட்டப்படி இடமாற்றம் பெற்றிருக்க வேண்டிய, ஆனால், இதுவரை இடமாற்றம் பெறாமல் தப்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் எண்ணிக்கை என்ன? அவர்கள் யார்? அவர்களின் பின்னணியில் உள்ள அரசியல் / சுயலாப சக்தி எவை? இது நியாயமானதா? இடமாற்ற விடயங்களில் எந்த அளவு நேர்மையாக நடக்கிறது. பிரபல தனியார் வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எல்லோரும் இந்த நியதியை விதியைப் பின்பற்றியுள்ளனரா? கல்வி அதிகாரிகளும் பணிப்பாளர்களும் அரசியல்வாதிகளும் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும். யாரையாவது கைக்குள் வைத்துக் கொண்டு யாராவது ஆசிரியர்கள் சுயநலமாக நடந்து கொள்கின்றனரா? கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள் தகுதியானவர்களாக கடமையைச் செய்கிறார்களா? பொறுப்புடன் பாடசாலைகளைக் கண்காணிக்கின்றார்களா? அல்லது யாராவது குற்றம் நிரூபிக்கப்படும் SLPS தர அதிபர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களாக தரம் உயர்த்தப்பட்டு செயலற்று உட்காரவைக்கப்படுகிறார்களா? கல்வி நிர்வாகக் கட்டமைப்பு எந்த அளவு இந்த விடயங்களில் நேர்மையாக நடந்து கொள்கிறது?

**அத்தியாயம் தொடரும்...**



# ஆயுத வியாபாரிகளை வாழவைக்கும் வல்லரசுகள்

வானதி

முதலாவது உலக மகா யுத்தமும், இரண்டாவது உலகப் போரும் தந்த இழப்புகள், போர் வடுக்கள் என்பன இன்றளவும் பேசு பொருளாக உள்ளன. அமெரிக்கா வீசிய அணுகுண்டுகளின் பாதிப்பு இன்றும் ஜப்பானில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உலகின் பல நாடுகளை அழித்த ஜேர்மனியும், மோசமான அழிவைச் சந்தித்த ஜப்பானும் ஆயுத உற்பத்தியில் அதிக அக்கறை காட்டவில்லை. யுத்தம் இல்லாத நாடாக நோர்வே தலை நிமிர்ந்து நிற்கிறது.

இனி யுத்தமே வேண்டாம் என உலக நாடுகள் முடிவெடுத்தன. அந்த முடிவுரை அறிக்கையில் மட்டும்தான் இருக்கிறது. பல நாடுகளின் இராணுவ, பாதுகாப்பு பட்ஜெட் எகிறிக்கொண்டே போகிறது. கடந்த நூற்றாண்டில் ஆரம்பித்த பயங்கரவாதத்தால் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. அமெரிக்க - வியட்னாம் போர், வடகொரியா- தென் கொரியா சண்டை, இந்தியா - பாகிஸ்தான் யுத்தம், இந்திய - சீனப் போர், இங்கிலாந்து - ஆர்ஜென்ரீனா சண்டை, இஸ்ரேல் - எகிப்து மோதல் என்பன அடங்கிவிட்டன. இஸ்ரேல் - பாலஸ்தீன முற்றுகை நூற்றாண்டு கடந்தும் தொடர்கிறது.

ஈரான், ஈராக், எகிப்து, குவைத், ஆப்கானிஸ்தான் ஆகிய மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெற்ற தொடர் யுத்தங்கள் ஆயுத வியாபாரிகளை வளப்படுத்தின. அல் - கொய்தாவும், தலிபான்களும் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்ததால் ஆயுத வியாபாரிகளின் உற்பத்தி அமோகமாக இருந்தது. ஆப்கானில் இருந்து அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ படைகள் விலகியதால் ஆயுத வியாபாரிகளின் வருமானம் வீழ்ச்சியடைந்தது.அடுத்து ஒரு போரை எதிர்பார்த்து காத்திருந்தவர்களுக்கு ரஷ்யா கைகொடுத்தது.

போர் காரணமாக இரண்டு நாடுகளின் பொருளாதாரமும் பாதிக்கப்படுகிறது. ஆயுத பலம் ஆள் பலம் உள்ள நாட்டின் இராணுவ நடவடிக்கை மூர்க்கமடைவதால் மற்றைய நாட்டின் கட்டமைப்பு தகர்க்கப்படுகிறது.அரச கட்டடங்கள், இராணுவ மையங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் என்பனவற்றின் மீது நடைபெறும் தாக்குதலால் அவை உருக்குலைந்து போகின்றன. பாடசாலைகள், வைத்தியசாலைகள், பொது மக்களின் வாழ்விடங்கள் என்பனவும் அழிக்கப்படுகின்றன. மக்கள் அகதியாகின்றனர். உணவு, உடை, நீர் என்பன கிடைக்காமையினால் அல்லல்படும் மக்களை ஆயுத வியாபாரிகள் கண்டுகொள்வதில்லை.

மரணத்தையும் அழிவையும் வைத்தே ஆயுத வியாபாரம் நடக்கிறது. உலகின் பெரிய நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் எல்லா ஆயுதங்களும் நன்றாக விற்க வேண்டும் என்றால், அவர்களுக்கு ஒரு போர் தேவை. ஆப்கானிஸ்தானை மையமாக வைத்து தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா நடத்திய போர், ஈராக், சிரியா என்று பல நாடுகளுக்குப் பரவி ஆயுத நிறுவனங்களை வாழ வைத்தது. ஆப்கன் இப்போது தலிபன் கைகளுக்குப் போய் விட்டது. ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு காணாமல் போய்விட்டது. ஆபிரிக்க தேசங்களில் நடக்கும் உள்நாட்டுப் போர்களால் ஆயுத வியாபாரம் பெரிதாக நடப்பதில்லை. இந்த அமைதியைக் குலைத்து ஒரு பெரிய போர் நடந்தால்தான் ஆயுதங்களுக்குத் தேவை ஏற்படும். புதிய ஆயுதங்களைப் பரிசோதனை செய்து பார்க்கவும், யார் உருவாக்கிய ஆயுதங்கள் வலிமையானவை என்பதை நிரூபிக்கவும் போரே சரியான வழி.

ஆப்கான் மண்ணிலிருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா எடுப்பதற்கு முன்பே, அடுத்த களம் உக்ரைன்தான் என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டே உக்ரைனுக்கு அமெரிக்க நிறுவனங்கள் ஆயுதங்களை விற்க ஒப்புதல் அளித்தார், அப்போதைய ஜனாதிபதி டொனால்டோ ட்ரம்ப். இது சமாதான முயற்சிகளைச் சிக்கலாக்கி, ரஷ்ய ஜனாதிபதி புடினை போர்முனைக்குக் கொண்டுவந்து நிறுத்தும் என்று அப்போதே பலர் எச்சரித்தனர். ட்ரம்ப் போய் ஜோ பைடன் வந்தபிறகும் இது மாறவில்லை. அமெரிக்க ஏவுகணைகள் அடுக்கடுக்காகப் போய் அங்கே இறங்கியதைப் பார்த்து வெகுண்டார் புடின். விளைவாகப் போர் வந்திருக்கிறது.

உலகின் ஆயுத மார்க்கெட்டைக் கட்டுப்படுத்தும் டாப் 5 நாடுகள், அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ். உலக நாடுகள் பயன்படுத்தும் 75.9 சதவிகித ஆயுதங்களை இவையே விநியோகிக்கின்றன. இஸ்ரேல், இத்தாலி, தென் கொரியா, ஸ்பெயின் மற்றும் பிரிட்டன் ஆகியவை அடுத்த இடங்களில் இருக்கும் ஐந்து நாடுகள். இவை 14.4 சதவிகித ஆயுதங்களை விநியோகிக்கின்றன.

இவற்றில் குறிப்பாக அமெரிக்காவும் ரஷ்யாவும் மட்டுமே 57 சதவிகித ஆயுத மார்க்கெட்டை வசப்படுத்தி வைத்துள்ளன. உலகின் டாப் 10 ஆயுத நிறுவனங்களில் அமெரிக்காவில் மட்டுமே ஐந்து உள்ளன. உலகின் பெரிய ஆயுத நிறுவனமான லாக்ஹீட் மார்ட்டின், டாங்கிகளை அழிக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்குக் கொடுத்திருக்கிறது. பிரிட்டனில் இருக்கும் சாப் நிறுவனம், டாங்கிகளை அழிக்கும் ராக்கெட் லாஞ்சர்களைக் கொடுத்திருக்கிறது. ஜேர்மனி, இத்தாலி, துருக்கி போன்ற நாடுகளும் உக்ரைனுக்கு ஆயுதங்களை விற்றிருக்கின்றன. வரலாற்றில் முதல் முறையாக ஐரோப்பிய யூனியன் தன் செலவில் ஆயுதங்களை வாங்கி உக்ரைனுக்குக் கொடுப்பதாக அறிவித்துள்ளது. இயற்கைச் சீற்றங்களின்போது உதவி செய்வதற்காகத் தன்னார்வலர்களை அழைப்பதுபோல, தங்களுக்காகப் போர் புரிய தன்னார்வலர்களை அழைத்திருக்கிறது உக்ரைன். ஆயுதங்களின் வாசமே அறியாத பலர் போர்க்களத்தில் இப்போது ஆயுதமேந்தி நிற்கிறார்கள். மொத்தத்தில் ஆயுத வியாபாரம் சூடு பிடித்துவிட்டது.

இந்தச் சூழலில் சாமர்த்தியமாக இன்னொரு விஷயத்தையும் செய்ய நினைக்கிறது அமெரிக்கா. ஒட்டுமொத்தமாக ரஷ்யாவின் ஆயுத வியாபாரத்தை முடக்கி விட்டு, அதைத் தன்வசப் படுத்தும் முயற்சியே அது. போர் விமானங்கள், கவச வாகனங்கள், ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், எலெக்ட்ரானிக் போர் அமைப்புகள், ஏவுகணைத் தடுப்பு அமைப்புகள் போன்றவற்றைச் செய்யும் 22 ரஷ்ய நிறுவனங்களுக்கு அமெரிக்கா பல்வேறு தடைகளை விதித்திருக்கிறது. இனி புதிதாக ஆயுத விற்பனை செய்வதோ, ஏற்கெனவே விற்ற ஆயுதங்களுக்குப் பராமரிப்புப் பணி செய்வதோ இனி இந்த நிறுவனங்களுக்குக் கடினமாக இருக்கும்" என்கிறது அமெரிக்கா.

ரஷ்யாவுக்குப் பெரும் வருமானத்தைத் தருவது



ஆயுத ஏற்றுமதி பிஸ்னஸ்தான். அவர்கள் பெரிதாக மேற்கத்தியத் தொழில்நுட்பங்களை நம்பி இல்லை. அதனால் இந்தத் தடை தங்களை ஒன்றும் செய்யாது என்கிறார்கள் அவர்கள். தாக்குதல்களைத் தாங்கி நிற்கும் அளவுக்கு வலிமையான போர் வாகனங்களைச் செய்வதற்கான மெட்டலர்ஜி நுட்பம், சென்சார் மற்றும் ரேடார் டெக்னாலஜி போன்றவற்றில் அமெரிக்காவைவிட ரஷ்யா சிறப்பாக உள்ளது. காஷ்மீரின் உறைபனிச் சூழலிலும், அரேபியாவின் தகிக்கும் பாலைவனத்திலும் தடையில்லாமல் இயங்கும். விலையும் குறைவு. அதனாலேயே ரஷ்யப் போர்க்கருவிகள் பலராலும் விரும்பப்படுகின்றன. இந்தியா, சீனா, எகிப்து, அல்ஜீரியா, வியட்னாம், ஈரான், லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றவை ரஷ்ய ஆயுதங்களை அதிகம் பயன்படுத்துகின்றன.

ரஷ்யாவின் 400 ஏவுகணைத் தடுப்பு அமைப்பை இந்தியா வாங்கியுள்ளது. அடுத்து ஏ.கே 203 துப்பாக்கிகளை ரஷ்யாவும் இந்தியாவும் இணைந்து இந்தியாவில் தயாரிக்கவுள்ளன. உலகின் மிக வேகமான ஏவுகணையாகக் கருதப்படும் இந்தியாவின் பிரமோஸ் ஏவுகணையை மேம்படுத்த ரஷ்யா உதவி செய்யவுள்ளது. அமெரிக்காவின் தடை இந்தத் திட்டங்களை என்ன செய்யப்போகிறது என்று தெரியவில்லை. ■



# அமெரிக்காவின் அதிகாரத்தையும் ரஷ்யாவின் அரசியலையும் வெளிப்படுத்தும் போர்

ஐ.வி.மகாசேனன்

**உக்ரைனின் தற்போதைய படையெடுப்பு அமெரிக்காவிற்கும் ரஷ்சியாவிற்கும் இடையிலான உறவு பற்றிய பல நீண்டகால விவாதங்களை புதுப்பித்துள்ளது. புடினின் பல விமர்சகர்கள் மேற்கத்திய தலையீட்டைப் பொருட்படுத்தாமல் முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஒரு ஆக்ரோஷமான வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுவார் என்று வாதிட்டாலும், அவரைத் தூண்டுவதில் அமெரிக்கா தவறு என்று மியர்ஷெய்மர் தனது நிலைப்பாட்டை தற்போதும் உறுதியாக முன்வைக்கின்றார்.**

ரஷ்யா-உக்ரைன் எனும் இரு தேசங்களுக்கிடையிலான புவிசார் அரசியல் மோதலே பெப்ரவரி இறுதி வாரங்களிலிருந்து முழு உலகையும் ஆக்கிரமித்துள்ளது.

மேற்கு அரசியல் தலைவர்களும் ஊடகங்களும் ரஷ்யா-உக்ரைன் போரினூடாக சர்வதேச வெளியில் ரஷ்யாவை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை வீரியமாக முன்னெடுத்து வருகின்றார்கள். இதனோர் வடிவமாகவே ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடினை நாஜித் தலைவர் ஹிட்லருடன் ஒப்பீடு செய்து அராஜகத்தின் முழுவடிவமாக மேற்கு ஊடகங்கள் பிரசாரப்படுத்துவதுடன், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை மக்கள் நாயகனாகக் காட்சிப்படுத்துகிறார்கள். எனினும் மேற்கின் பிரச்சாரங்களுடன் நிகழ்நிலை விடயங்கள் முரண்படுவதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. புடினை அராஜகவாதியாக அடையாளப்படுத்தும் அளவிற்கு அவரது செயற்பாடுகள் உக்ரைன் களத்தில் அமையப் பெறவில்லை என்ற வாதமும் காணப்படுகின்றது. எனினும் ஊடகப்பரப்பில் அதுபற்றிய உரையாடல்கள் தவிர்க்கப்படுகிறது. இந்நிலையில் ரஷ்யா பற்றிய எதிரான கருத்துகளை அதிகம் முதன்மைப்படுத்தும் அமெரிக்க களத்திலேயே ரஷ்யாவின் ஆக்கிரமிப்பிற்கு அமெரிக்காவின் தூண்டுதல்களே காரணம் என்ற கருத்தும் ஒருசில யதார்த்தவாத பள்ளியை சேர்ந்தவர்களால் உரையாடப்படுகிறது. இக்கட் டுரை ரஷ்யா-உக்ரைன் போர் தொடர்பிலான ஜோசப் மியர்ஷெய்மர் எனும் அமெரிக்க யதார்த்தவாத சிந்தனையாளரது கருத்தை மையப்படுத்திய தாக ரஷ்யா-உக்ரைன் போர் தொடர்பிலான யதார்த் தவாதிகளின் பார்வையை தேடுவதாகவே உருவாக் கப்பட்டுள்ளது.



யதார்த்தவாதக் கோட்பாடு போரற்ற உலகத்தை நோக்கிய நகர்வுக்கு வித்திடுவதாக யதார்த்தவாதிகள் குறிப்பிடுகின்றனர். அராஜகத்தை முதன்மைப்படுத்தும் யதார்த்தவாதம் போரற்ற உலகைப் பிரகடனப்படுத்துவது புதிராக அமையலாம். இரண்டாம் உலகப் போருக்குப் பின்பான பனிப்போர் அரசியல் ஒழுங்கானது வல்லரசுகளின் இராணுவ வலுவை அதிகரித்ததன் மூலம் மீளவோர் உலகப் போர் ஒன்று ஏற்படாது தவிர்த்ததாகவும் அதற்கு அரசுகளின் இராணுவ மற்றும் ஆயுத தளபாடங்களின் பலமே காரணமெனவும் யதார்த்தவாதிகள் விவாதிக்கின்றனர். அத்தகைய யதார்த்தவாதத்திற்குள்ளேயே ரஷ்ய-உக்ரைன் போர்க்களமும் நகர்கிறது. அரசுகளின் இராணுவ அதிகாரத்தைப் பலப்படுத்துவதனூடாக போரைத் தவிர்க்கும் யதார்த்தவாத சிந்தனைகளத்தில், 1990களிலிருந்து 2010 கள் வரை, ஜார்ஜ் கென்னனின் நேட்டோ விரிவாக்கத்திற்கு எதிர்ப்பு முதல் உக்ரைனில் அமெரிக்க ஈடுபாடு பற்றிய ஜான் மியர்ஷைமரின் விமர்சனம் வரை இன்றைய ரஷ்யா-உக்ரைன் போர் பற்றிய தீர்க்கதரிசன கருத்துகளாக காணப்படுகிறது.

இந்த தலைமுறையின் மிகவும் செல்வாக்குமிக்க யதார்த்தவாதியான சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் ஆர். வென்டெல் ஹாரிசன் சிறப்புமிக்க சேவைப் பேராசிரியராக உள்ள அமெரிக்க அரசியல் விஞ்ஞானி ஜான் ஜோசப் மியர்ஷெய்மர் உக்ரைனில் ஏற்பட்ட நெருக்கடிக்கு அமெரிக்காவையே குற்றம் சாட்டுகிறார். மியர்ஷெய்மர் 2015 இல், “மேற்கு நாடுகள் உக்ரைனை ப்ரிம்ரோஸ் பாதையில் (Primrose path- பேரழிவு தரும் விளைவுகளைக் கொண்டு வருவதைக் காணும் போது இன்பத்தைத் தேடும் பாதை) இட்டுச் செல்கின்றன. இறுதி முடிவு உக்ரைன் சிதைந்து போகிறது.” எனத்தெரிவித்திருந்தார். மேலும், நேட்டோவை கிழக்கு நோக்கி விரிவுபடுத்துவதற்கும் உக்ரைனுடன் நட்புறவை ஏற்படுத்துவதற்கும் அமெரிக்கா அழுத்தம் கொடுத்து அணு ஆயுத சக்திகளுக்கு இடையே போரின் வாய்ப்பை அதிகரித்து உக்ரைனை நோக்கி விளாடிமிர் புடினின் ஆக்கிரமிப்பு நிலைப்பாட்டிற்கு அடித்தளமிட்டுள்ளது என்று பல ஆண்டுகளாக மியர்ஷெய்மர் வாதிட்டார். மேலும், “உண்மையில் 2014 இல் ரஷ்யா கிரிமியாவை இணைத்த பிறகு, அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய நட்பு நாடுகளும் இந்த நெருக்கடிக்கான பெரும்பாலான பொறுப்பைப் பகிர்ந்து கொள்கின்றன” என்று 2014 இல் கிரிமியாவை ரஷ்யா கைப்பற்றிய போது குறிப்பிட்டிருந்தார்.

உக்ரைனின் தற்போதைய படையெடுப்பு அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான உறவு பற்றிய பல நீண்டகால விவாதங்களைப் புதுப்பித்துள்ளது. புடினின் பல விமர்சகர்கள் மேற்கத்திய தலையீட்டைப் பொருட்படுத்தாமல் முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஒரு ஆக்ரோஷமான வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுவார் என்று வாதிட்டாலும், அவரைத் தூண்டுவதில் அமெரிக்கா தவறு என்று மியர்ஷெய்மர் தனது நிலைப்பாட்டை தற்போதும் உறுதியாக முன்வைக்கின்றார். மார்ச்-01 அன்று நியூயோர்க்கர் (The New Yorker) செய்தித் தளத்தில் வெளியாகிய நேர்காணலில் மியர்ஷெய்மர், ‘2008 ஏப்ரலில் புக்கரெஸ்டில் நடந்த நேட்டோ உச்சி மாநாட்டில் உக்ரைனும் ஜோர்ஜியாவும் நேட்டோவின் ஒரு பகுதியாக மாறுமென நேட்டோ ஒரு அறிக்கையை வெளியிட்டதாகவும், ரஷ்யர்கள் இதை ஒரு இருத்தலியல் அச்சுறுத்தலாகக் கருதினார்களெனவும், அனைத்து பிரச்சினைகளும் அங்கேயே தொடங்கியதாகவும் நினைப்பதாக” தற்போதைய ரஷ்யா மற்றும் உக்ரைனின் போர்க்கள சூழலை குறிப்பிட்டார்.

மியர்ஷெய்மரது நேர்காணலின் பிரதான கருத்துகளை நுணுக்கமாக அவதானிக்குமிடத்து, மேற்கு ஊடங்களின் பிரச்சாரங்களினதும், மேற்கு நாடுகளின் அரசியல் தலைவர்களது உரையாடல்களினதும் தப்பெண்ணங்களை அல்லது போலிப் பிரச்சாரங்களை அறியக் கூடியதாக காணப்படும்.

முதலாவது, ரஷ்யா-உக்ரைன் போரானது ரஷ்யாவின் இருப்பு சார்ந்த அச்சுறுத்தலின் விளைவினாலானதாகும் என்பதே யதார்த்தவாதிகளின் உறுதியான வாதமாகக் காணப்படுகிறது. போர் அராஜகமான முடிவாயினும் அரசியல் அதிகாரப் போட்டியில் போர் தவிர்க்க இயலாத செயன்முறையாகவே காணப்படுகிறது. புவிசார் அரசியலில் ரஷ்யாவின் நலனுக்குரிய களத்தில் ரஷ்யாவின் அரசியல் கொள்கைகளுக்கு புறத்தேயான ஓர் அதிகாரத்தின் அதிகாரம் மேலோங்க முனைவது ரஷ்யாவின் இருப்பு சார்ந்த அச்சுறுத்தலுக்கு வழிகோலுமென்பதே எளிமையான பார்வையாகும். நேட்டோவால் சுற்றி வளைக்கப்படும் என்ற பயத்தின் விளைவில் ரஷ்யா மூலோபாய நடத்தைக்கு ஒரு தற்காப்பு தர்க்கமாக போரைத் தேர்ந்தெடுத்துள்ளது. இது செல்வாக்கு மண்டலத்தின் பாதுகாப்பை மையமாகக் கொண்டது. இதற்கான விளக்கத்தை அளிக்கும் மியர்ஷெய்மர், “அது ஏகாதிபத்தியம் அல்ல. இது பெரும் அதிகார அரசியல். நீங்கள் உக்ரைன் போன்ற ஒரு நாடாக இருக்கும் போது, ரஷ்யா போன்ற ஒரு பெரிய சக்தியின் பக்கத்து வீட்டில் வசிக்கும்போது, ரஷ்யர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை நீங்கள் கவனமாகக் கவனிக்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் ஒரு குச்சியை எடுத்து அவர்களின் கண்ணில் குத்தினால், அவர்கள் பதிலடி கொடுக்கப் போகிறார்கள்.” எனும் அதிகார அரசியலின் யதார்த்தத்தை தெளிவுபடுத்தியுள்ளார்.


இரண்டாவது, உக்ரைன் மீதான ரஷ்யா போருக்கான உந்துதல் அமெரிக்காவையே சாருகிறது. ரஷ்யாவின் எல்லையில் உக்ரைனை மேற்கத்திய அரணாக மாற்றுவதற்கு உக்ரைனை மேற்கில் சேர்க்க அமெரிக்கா முன்னேறியது. இது நேட்டோ விரிவாக்கத்தை விட அதிகமானது. நேட்டோ விரிவாக்கம் மூலோபாயத்தின் இதயமாகும். ஆனால், அது ஐரோப்பிய ஒன்றிய விரிவாக்கம் மற்றும் உக்ரைனை அமெரிக்க சார்பு தாராளவாத ஜனநாயகமாக மாற்றுவதையும் உள்ளடக்கியது. இது தொடர்பில் கருத்துரைத்த மியர்ஷெய்மர், உக்ரைன் அமெரிக்கச் சார்பு தாராளவாத ஜனநாயகமாகவும் நேட்டோவின் உறுப்பினராகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினராகவும் மாறினால், ரஷ்யர்கள் அதை திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று கருதுவார்கள். நேட்டோ விரிவாக்கம் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய விரிவாக்கம் இல்லை என்றால், உக்ரைன் ஒரு தாராளவாத ஜனநாயகமாக மாறினாலும், மற்றும் பொதுவாக அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளுடன் நட்பாக இருந்தாலும், அது ஒருவேளை அதிலிருந்து விடுபடக்கூடும். எனத்தெரிவித்துள்ளார். எனவே உக்ரைன் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு உத்தியான ஐரோப்பிய ஒன்றிய விரிவாக்கம், நேட்டோ விரிவாக்கம் மற்றும் உக்ரைனை அமெரிக்கச் சார்பு தாராளவாத ஜனநாயகமாக மாற்றுதல் என்பனவே ரஷ்யாவை உக்ரைன் மீதான போர் ஆக்கிரமிப்புக்கு தூண்டியுள்ளது.

எனவே, யதார்த்தவாதிகளின் நோக்குநிலை ஒரு வகையில் சில உலகியல் யதார்த்தங்களை வெளிக்கொணருகின்றது. சில போலிகளை தடம்போட்டுக் காட்டுகிறது. அமெரிக்காவின் அதிகார போட்டியும் ரஷ்யாவின் இருத்தலுக்குமான போட்டிக்களமாகவே உக்ரைன் போர் முனை காணப்படுகிறது. அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இரு அரசுகளின் நலன்களுக்கிடையிலான மோதலால் உலகம் பொருளாதார நெருக்கடியில் திணறுகிறது. இதில் உக்ரைன் ஜனாதிபதியின் இராஜதந்திரமற்ற நகர்வுகளும் ஒரு காரணமாகும். அதிகார அரசியல் சார்ந்த சில யதார்த்தங்களை மனித நேயம் மனித நலன் சார்ந்து ஏற்க முடியாதாயினும், அரசியல் அதிகார வரலாறு சில அசாதாரணங்களை சாதாரணங்களாக உருவாக்கியுள்ளது. எனவே, யதார்த்தத்தில் அசாதாரணங்கள் சாதாரணங்களாய் போலியற்று வெளிப்படுகிறது. ■



# பாரதியார் பாடல்களில்
# பெண் தெய்வமும் பெண்களும்

செ.வெவோகா
இறுதி வருட சிறப்புக்கற்கை
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை



வான்புகழ் வள்ளுவன், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் யாத்த இளங்கோ, இராமகாதை பாடிய கவிச்சக்கரவர்த்தி கம்பன் போன்ற புலவர்களுக்குப் பின்னர் தனது பாட்டுத் திறத்தாலே இந்த வையத்தை பரிபாலித்தவர் பாரதியார்.

**புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்**
**தமிழ்மொழியைப் புகழி லேற்றும்**
**கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்**
**வசையென்னாற் கழிந்த தன்றே!**

என்று மார்தட்டியவர் பாரதியார்.

பாரதியால் தமிழ் உயர்ந்ததும் தமிழால் பாரதி உயர்ந்ததும் இன்று யாவரும் ஏற்றுக் கொண்ட உண்மை. தன்னைப் பின்பற்றித் தமிழ் வளர்க்க ஒரு பரம்பரையைத் தோற்றுவித்தவர் பாரதியார். ஏனைய தமிழ்ப் புலவர்களுக்கோ பாவலர்களுக்கோ இல்லாத தனிப் பெருமை பாரதியாருக்கு உண்டு. தமிழ்த் தேசியத்துக்குக் கால்கோள் இட்ட முதல் கவிஞன் என்பது தான் பெருமையான விடயமாகும்.

பண்டைத் தமிழ் வரலாற்றையும் பாரதப் பண்பாட்டினையும் அறிந்திருந்த பாரதி நாட்டின் ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்களின் நிலை கண்டு மனம் வெதும்பினார், வேதனைப்பட்டார். பெண் விடுதலைக்காக எழுச்சிமிகுந்த பாடல்களைப் பாடினார். பாரதியார் தனது பாடல்களிலும் கட்டுரைகளிலும் பெண்ணுரிமைக் கருத்துகளைத் தனக்கே உரித்தான கவியழகோடும், அழுத்தத்தோடும், வீராவேசத்துடனும் கேட்போரின் சிந்தனையை தூண்டும் விதத்திலும் கனல்தெறிக்க எழுதியுள்ளார். பாரதியின் சமூக சீர்திருத்தக் கருத்துகளில் முன்னுரிமை பெற்றுத் திகழ்வது பெண்ணுரிமைக் கோட்பாடாகும். அத்துடன் "பெண்களிற்கு உரிமை கொடுக்காத சமுதாயம் முன்னேற வழியில்லை" என அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். "பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதமையற்றிடும் காணீர்" என்கிறார்.

பெண்ணுரிமை வாதத்தை பாரதியார் மிகவும் ஆதரித்ததற்கு காரணங்கள் உண்டு. அவையாவன, அக்காலகட்டத்தில் இருந்த சிறு பிள்ளைத் திருமணம், உடன்கட்டை ஏறுதல், விதவைகளின் இழிவு நிலை, பெண்களிற்குக் கல்வியுரிமை கொடாமை போன்ற சமுதாய வழக்கங்களை ஐரோப்பியர் இந்தியரின் மூடத்தனத்திற்கு சான்றிதழ் எனக் கூறி வந்தனர். ஆனால் இது தற்காலிகமான ஒரு இருள், பண்டைக்கால இந்தியாவில் பெண்களின் நிலை இழிவானது அல்ல எனப் பாரதி வாதிட்டார்.

**"புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும், பொய்மை கொண்ட கலிக்கு புதிதன்றி, சதுர்மறைப் படிமாந்தர் வாழ்ந்த நாள் தனிலே பொதுவான வழக்கமாம்"** என வாதிடுகிறார்.

பெண்களை அடிமை கொள்ள எண்ணும் அறிவற்றவர்களை "அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமையாக்க முயல்பவர் பித்தராம்". ஆணுக்கு நிகராகக் கல்வி கற்று தொழில் செய்து சமூகத்தில் சம உரிமை பெற்று வாழ முற்படும் நவீன யுகப் பெண்களைப் பாடுகிறார். "விலகி வீட்டில் ஓர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்" என்று எதிர்வு கூறுகின்றார்.

பாரதியின் பெண்மைப் பாடலோ பெண்ணை சகல சக்திகளிலும் திரும்பிய அன்னை பராசக்தியாகவே நினைத்துக் கூத்திடுகிறது.

**"உயிரைக் காக்கும்**
**உயிரினைச் சேர்ந்திடும்**
**உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா"**

எனக் களிகொண்டு கூத்தாடுகிறார். இதன் மூலம் பெண்மையின் மகத்துவம் எத்தகையது என்பதனை அறிய முடிகிறது.

அதுமட்டுமன்றி கற்பு நிலை பற்றிக் கருத்துக் குறிப்பிடுகையில் கற்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமானது எனக் குறிப்பிடுகிறார். அதனை,

**"கற்பு நிலையென்று சொல்ல வந்தால் - இரு**
**கட்சிக்கும் அது பொதுவில் வைப்போம்.**
**எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காண் என்று கும்மியடி!**

எனக் குறிப்பிடுவதன் மூலம் அறிய முடிகிறது. சிவனும் சக்தியும் ஒன்று. சிவன் பாதி சக்தி பாதி என்று முழங்கி விட்டு பெண்கள் ஏட்டைத் தொடுவது தீமை என்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார், வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் என்றெல்லாம் பெண் விடுதலைக்காக வீரமுழக்கம் இடுவதனைக் காணமுடிகிறது. அத்துடன் ஆணுக்குப் பெண் சரிநிகர் சமமாகக் கருதப்பட வேண்டும் எனவும் ஆணுக்குப் பெண் எவ்விதத்திலும் குறைந்தவள் இல்லை எனவும் அவர் தனது கவிதைகளிலும், கட்டுரைகளிலும் வலியுறுத்துகிறார்

ஆண் - பெண் கற்பு பற்றி தனது கருத்துகளை "பதிவிரதை" என்ற கட்டுரை மூலமும் வெளிப்படுத்துகிறார்.

பாரதியின் தலையாய கொள்கைகளுள் ஒன்று 'பெண் விடுதலை'. பாரதி, தான் வடித்த புதுமைப் பெண்ணை, 'புதுமைப் பெண்' என்ற கவிதையில் நம் கண் முன்னர் கொண்டு வந்து நிறுத்தியதை அறிவோம். பெண்ணிற்கு ஓர் இலக்கணத்தையே வகுத்த கவிதை அது. பெண்களை அடிமைப்படுத்த எண்ணும் பேடிகளை "அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமையாக்க முயல்பவர் பித்தராம்" என்பார் எனக் குறிப்பிடுகிறார்.

பெண்களை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதனை பின்வரும் பாடலில் குறிப்பிடுகிறார். அதாவது,

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ் வையந் தழைக்குமாம்...
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ!

பாரதி கண்ட புதுமைப் பெண்ணின் குணநலன்கள் பற்றிக் குறிப்பிடுகையில், நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச் செருக்கு போன்ற குணாதிசயங்களைக் குறிப்பிடுவதுடன் பெண்ணானவள் தெய்வத்திற்கு ஒப்பானவள் எனவும் அவளின் அறிவுரை கேட்டு செயற்படுங்கள் எனவும் பெண்களிற்கு புது அத்தியாயத்தினை ஏற்படுத்த முயல்கிறார் பாரதியார்.

இராஜரிஷி ஜனகரின் சபையில் வேதாந்த விவாதங்கள் நடைபெற்ற போது அங்கே பெண் ரிஷியான கார்க்கியும் இடம்பெற்றிருந்தார். பல்வேறு மகான்களும் ரிஷிகளும் இந்த வெகு நுட்பமான விவாதத்தில் பங்கேற்று ஆத்மவிசாரத் தத்துவங்களை விளக்குகின்றனர். இறுதியில் ரிஷி கார்க்கி யாக்ஞவல்கியரின் கருத்தையேற்று அவரை அங்கீகரிக்கிறார். ரிஷி கார்க்கியின் அங்கீகாரத்தினை மிகப் பெரும் பேறாகவே யாக்ஞவல்கியர் ஏற்கிறார். ஒரு பெண் தன்னோடு விவாதிப்பதா, அவரின் அங்கீகாரம் என்பது பெரிதா என்ற ஆணாதிக்க மனப்பான்மை அப்போது அங்கே ஏற்படவில்லை.


ஆணாதிக்கச் சூழலுக்கு எதிராக குரல் கொடுத்த ஆண்களை வரலாறு அடையாளப்படுத்திக் கொண்டே இருக்கிறது. அவர்களுள் தமிழகத்தில் முதன்மையானவராகப் பெண்ணின் பெருமைகளை உரிமைகளை உரக்கக் கூறிய பெருமை மகாகவி பாரதிக்கு உண்டு. **"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே"** என்ற மகாகவியின் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**"இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து அருள்**
**மங்கைய ராயவர் இல்லறம் நன்கு**
**வளர்த்ததும் இந்நாடே - அவர்**
**தங்க மதலைகள் ஈன்று அமுதூட்டித்**
**தழுவியதும் இந்நாடே."**

நாட்டு வணக்கம் என்று பாடப்பட்ட இப் பாடல் மையப்படுத்துவது இந்து தேசத்தின் பெண்களை மகாகவி பாரதியாரின் பெண்ணுரிமைப் பாடல்கள் எத்தனையோ இருந்த போதும் இந்தப் பாடல் நுட்பமானது. பெண்களை மையமாகக் கொண்டது நம் தேசம் எனும் நுட்பம் இப்பாடலில் சிறப்பாகக் காணப்படுகிறது. இது பாரதி பெண்மையைப் போற்றியதற்கும் கொண்டாடியதற்கும் பெண்ணை முதன்மைப்படுத்தியதற்கும் சான்றாகும்.

அறம் சார்ந்த செயற்பாடுகளையும் அறிவாற்றலையும் வளர்த்துக் கொள்ளுவது பெண்ணின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் தேவையானது என்பதுதான் மகாகவி பாரதி கற்றுத் தந்த பெண் விடுதலை, பெண் உரிமை. அதே நேரத்தில் தற்போது அதிகமாகப் பேசப்படும் பெண்ணியம் என்ற கருத்தாக்கத்தை நாம் கவனிக்க வேண்டியது அவசியமாகும். மேலை நாடுகள் அறிவியலில் பெரும் முன்னேற்றம் அடைந்திருந்த போதிலும் ஆண், பெண் என்ற உறவில் பெரும் தடுமாற்றத்தோடுதான் எப்போதும் இருந்து வருகின்றன. பெண்களிற்கு வாகனம் ஓட்டுவதில் தொடங்கி வாக்குரிமை வரை அனைத்துக்கும் அவர்கள் போராடும் சூழலில் நம் தேசத்தில் பெண்களிற்கு இவை தேவையா என்பது போன்ற சிந்தனையோ கேள்வியோ கூட எழுந்ததில்லை. பெண்ணியம் பற்றிய புரிதலும் உலகம் முழுவதும் வேறுபட்டதாகவே அமைந்திருக்கிறது. நம்முடைய சமூக அமைப்பு அறம் எனும் அடிப்படையை இன்றும் பேணுகிறது. குடும்பத்தினருக்கான கடமைகள், பொறுப்புக்கள் ஆகியவை முக்கியத்துவம் பெற்றவையாக விளங்குகின்றன. "கலிய ழிப்பது பெண்க ளறமடா" என்று எல்லாக் கொடுமைகளையும் மூடத்தனங்களையும் அழித்தொழித்து அறத்தை நிலை நாட்டும் ஆற்றல் பெண்களிற்கே உரித்தான இயல்பு என்று மகாகவி பாரதி பெருமிதத்தோடு பாடுகிறார். "உயிரைக் காக்கும் சேர்த்திடும் உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா" என்று போற்றியவர் வழியில் ஆரோக்கியமான சமத்துவ சமுதாயத்தை உருவாக்கப் பெண்கள் ஈடுபடுவார்கள். ■

> **அறம் சார்ந்த செயற்பாடுகளையும் அறிவாற்றலையும் வளர்த்துக் கொள்ளுவது பெண்ணின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் தேவையானது என்பதுதான் மகாகவி பாரதி கற்றுத் தந்த பெண் விடுதலை, பெண் உரிமை. அதே நேரத்தில் தற்போது அதிகமாகப் பேசப்படும் பெண்ணியம் என்ற கருத்தாக்கத்தை நாம் கவனிக்க வேண்டியது அவசியமாகும்.**



# வெற்றிலைக்கேணி ஒல்லாந்தர் கோட்டை பாதுகாக்கப்படுமா?




இலங்கையில் உள்ள கோட்டைகளும் அரண்களும் நீண்ட கால வரலாறுகளைக் கொண்டவையாக உள்ளன. இலங்கைக்கு மேலைத்தேயத்தவர்கள் வருவதற்கு முன்பு தமிழ், சிங்கள, நாயக்க, சோழ மன்னர்களால் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டன. அதே போல் இலங்கையை கைப்பற்றி ஆட்சி செய்த ஐரோப்பியரால் மேலைத்தேயப் பாணியில் அமைக்கப்பட்ட கோட்டைகளும் அரண்களும் இன்னும் காட்சியளிக்கின்றன. பிரித்தானியர், போர்த்துக்கேயரை விட ஒல்லாந்தர் அதிகளவான கோட்டைகள், அரண்கள், வெளிச்சவீடுகளை, கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் அமைத்திருந்தனர்.

யாழ் மாவட்டத்தின் வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட வெற்றிலைக்கேணி கிராமத்தின் கடற்கரையை அண்டிய இடத்தில் ஒல்லாந்தர்களால் கட்டப்பட்ட வெளிச்சவீடு சிதைவடைந்த தொல்லியல் சின்னமாகக் காட்சியளிக்கிறது.

கடற்கரையை அண்டிக் காணப்படும் இவ்வெளிச்சவீடு தற்காலத்தில் சிறிய பற்றைக்காடுகளால் மறைக்கப்பட்டு உள்ளது. ஆரம்பத்தில் இதன் சுற்றுவட்டாரத்தில் மரங்கள் காணப்படாத மேடான நிலத்தில் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. கடலில் பிரயாணம் செய்பவர்கள் இலகுவாக இனம் காண்பதற்கும் கரையை வந்தடைவதற்கும் ஏற்றமுறையில் வடிவமைக்கப்பட்ட இவ்வெளிச்சவீடு இப்பிரதேச மக்களால் கோரியடி என்று அழைக்கப்படுகிறது. இதன் அருகில் அழகிய மணல் குன்றுகளும் கரவலைப்பாடுகளும் கடற்கரையை ஒருங்கே சேர்த்து அழகைக் கொடுக்கின்ற ஒரு உயரமான இடமாக உள்ளது.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போதும் உள்நாட்டில் பல தடவை ஏற்பட்ட யுத்தத்தின் போதும் அழிவடையாமல் உள்ளது. செல் தாக்குதல் அடையாளங்களை இவ்கோரியில் அவதானிக்க முடிந்தாலும் அழிவடையாமல் உள்ளமை சிறப்பான விடயம்.

கடல் ஓரத்தில் அமைந்துள்ள இவ்வெளிச்சவீடு ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டு ஆங்கிலேயர் காலத்திலும் பயன்படுத்தப்பட்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் கைவிடப்பட்டது. இன்று யாரும் இதைக் கண்டு கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்தின் சுண்ணக் கற்பாறைகளை நீள்சதுரக் கற்களாக செதுக்கி கட்டிய சுற்றுமதிலும் சிதைவடைந்த நிலையில் இங்கே காணப்படுகிறது. கலங்கரை விளக்கின் கட்டட அமைப்பானது உள் இடைவெளியின்றி கடற்காற்றினை எதிர்த்தும் கடற்காற்று உட்போகாத முறையிலும் திடமான முறையில் கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது.

மேற்பகுதிக்கு ஏறிச் செல்வதற்கு மரங்களாலான படி அமைப்பு வெளிப்புறமாக அமைக்கப்பட்டுள்ளது. மேற்பகுதியில் கம்பியால் குருசு வடிவில் அமைக்கப்பட்டிருந்ததை ஆரம்பத்தில் அவதானிக்க முடிந்தது. இன்று அதனைக் காணவில்லை.

இந்த ஒல்லாந்தர் கோட்டையில் கிணறுகள், பதுங்கு குழிக்கான சிதைவுகள், கட்டட இடிபாடுகள் என பல அம்சங்களின் எச்சங்கள் உள்ளன. இன்று இது சிதைவடைந்து செல்கிறது. மிக உயரமாக அமைந்த இவ்வெளிச்சவீடு நீண்ட தூர கடல் பயணங்களுக்கு கப்பல்கள், படகுகள், அடையாளம் காட்டுவதற்குப் பழைய முறையிலான வெளிச்ச கோபுரத்தைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது கூட இப்பிரதேச மீனவர்களால் இதன் எல்லையை வைத்து திசை மாறி தமது படகுகள் சென்றால் உடனே கோரியை மையப்படுத்தி வருவதனை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.



தமிழர் பிரதேசங்களில் கப்பல் போக்குவரத்து மேற்கொள்ளும் அளவிற்கு ஆழ்கடலிற்குச் சென்று மீன்பிடித்து கரைநோக்கி திரும்பும் அளவிற்கு தமிழ்மக்களின் வாழ்க்கைத் தரம் செல்வாக்குப் பெற்றமைக்கு இது ஒரு ஆதாரமாகக் கூறலாம். அதனை விட ஒல்லாந்தர்கள் வெற்றிலைக் கோரியை மையமாகக் கொண்டு தமது வியாபார நடவடிக்கைகள் எதிரி நாட்டு படைகளை கண்காணிக்கக் கூடிய வகையிலும் அமைக்கப்பட்டமையால் இப்பிரதேசம் வரலாற்று ரீதியாகவும் சிறப்புப் பெறுகிறது.



தூரத்தே கடலில் இருந்து வரும் படகுகளுக்கும் கப்பல்களுக்கும் அடையாளம் காட்டும் வெளிச்சக் கோபுரத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட இந்தக் கோட்டை வன்னிப் பெருநிலப் பரப்பில் இருந்த கிளர்ச்சியாளர்களிடமிருந்து யாழ்ப்பாண இராசதானியைப் பாதுகாப்பதற்காகவும் கொள்ளையர்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்டது என அறிய முடிகிறது. கொத்தாளம் ஒன்றில் அமைக்கப்பட்ட சுண்ணாம்புக் கல்லால் ஆன கிணற்றுப் பகுதி இடிபாட்டு எச்சமாகக் காணப்படுகிறது. ஒல்லாந்தர்கள் வெளியேறிய பின்பு பிரித்தானியர்கள் இதனை நிர்வகித்ததாகவும் கூறப்படுகிறது.

இதன் பின்னர், இப்பகுதியில் பேய் இருப்பதாகக் கூறி இப்பகுதிக்குச் செல்வதை இப்பிரதேசத்தவர்கள் தவிர்த்து வந்தனர். இன்னும் பேய், முனி இருப்பதாக இப்பிரதேசத்தைச் சேர்ந்த பெரியவர்களால் கூறப்பட்டு வருகிறது. அதனால் இதை பேய் கோட்டை எனவும் அழைப்பார்கள்.

வெற்றிலைக்கேணிக் கோட்டை இயக்கச்சி கோட்டை ஆனையிறவு கோட்டை ஆகியவற்றிற்கும் இடையில் சுரங்க வழிப்பாதைகள் காணப்படுவதாக இப்பிரதேச மக்களால் காலங்காலமாக கூறப்பட்டு வருவதனையும் குறிப்பிட முடியும். எது எவ்வாறு இருப்பினும் கடந்த கால வரலாறுகளையும் அக்கால தகவல்களையும் வைத்து ஆராய்ந்தால் பல தகவல்களை வெளிக்கொண்டு வர முடியும் என்பது நிதர்சனம்.

2019 ஆம் ஆண்டு காலத்தில் இது சுற்றுலா இடமாகவும் பாதுகாக்கப்பட வேண்டிய மரபுரிமை இடமாகவும் பெயர் பலகை இதன் அருகே இடப்பட்டது. ஆனால், 2020 இற்கு பின்பு அந்த பதாதைகள் காற்றோடு புடுங்கப்பட்டு இந்தப் பெயர் பலகை இல்லாது யாரும் இதை கவனிப்பதற்கோ, பாதுகாப்பதற்கோ முன்வருவதனைக் காண முடியாது உள்ளது.

தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களில் வரலாற்று சின்னங்கள் கால மாற்றத்தின் காரணமாக மறைக்கப்படுவதும் மறுக்கப்படுவதும் தொடர்கதையாகவே உள்ளது.

எமது பிரதேசத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்கள், தமிழர் சார்ந்த மற்றும் தமிழர் பிரதேசங்களில் உள்ள சிறப்பம்சங்களை அப்பிரதேசத்தில் உள்ள சமூக நலன் விரும்பிகள் முன்வந்து இதனைப் பாதுகாக்க வேண்டும். அதன் மூலம் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், இப்பிரதேசம் சார்ந்த அரச, தனியார் நிறுவனங்கள் தானாக முன்வர வேண்டும்.

வடமராட்சி கிழக்கின் இயற்கை வளங்கள் தொல்லியல் அம்சங்கள், மரபுரிமை அம்சங்கள், கலாசார விடயங்கள், கோயில்கள், தேவாலயங்கள் இவற்றை அபிவிருத்தி செய்யும் போது சுற்றுலாத் துறை ஒரு அபரிதமான வளர்ச்சியை எட்டும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. இங்கு இயற்கை வளங்கள் மிக முக்கியமான அம்சமாகக் காணப்படுகிறது. தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள்.

வெளிநாட்டவர்கள், யாழ் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் வந்து பார்க்க கூடிய பல சிறப்பு வாய்ந்த இடங்கள் உள்ளன. ஆனால், அவற்றை வெளிக்கொண்டு வர சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் முன் வருவது மிகவும் குறைவு கவனிப்பின்றி எமது பிரதேச வரலாற்று சிறப்பம்சங்களையும் வளங்களையும் நாம் பாதுகாக்காமல் விட்டால் எதிர்கால சந்ததியினர் இங்கு வாழ முடியாத சூழலும் மற்றும் தொடர்ந்தும் பின் தங்கிய இடமாகக் காட்சியளிக்கும் ஓர் துர்பாக்கிய நிலையில் சந்திக்கக் கூடும்.

வெற்றிலைக்கேணி ஒல்லாந்தர் கோட்டை விடுதலைப் புலிகள் காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைவரின் 50 ஆவது பிறந்த நாளில் ஒளிரவிட்டு தொடர்ந்து ஒளிர விட்டதாகவும் பின்பு யுத்தம் ஏற்பட்ட பின்பு அது செயலிழந்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைப் பாதுகாத்து இதற்கு வெளிச்சம் ஒளிர விட்டால் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கடற்தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு வருபவர்கள் அதனால் இக்கோரியை மையப்படுத்தி திசைமாறிச் செல்லாமல் இதனை அவதானித்து இரவு நேரங்களில் கூட வெளிச்சத்தை அவதானித்து வரவாய்ப்பாக இருக்கும். இதனை இப்பிரதேசம் சார்ந்த அரச திணைக்களங்கள் முன்வர வேணும் இது சாத்தியப்படுமா பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எமது பிரதேச நலன் கருதி வெற்றிலைக்கேணி ஒல்லாந்தர் கோட்டை (கோரியடி) பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குரிய ஒழுங்குகளைச் செய்ய சம்பந்தப்பட்ட தரப்புகள் விரைவாக முயற்சி எடுப்பதன் மூலம் இப்பிரதேச மக்களுக்கும் மீனவர்களுக்கும் நல்லதொரு எதிர்காலத்தையும் சுற்றுலாவையும் மேம்படுத்த வாய்ப்பாக இருக்கும். ■

# Z புள்ளி கணிக்கின்ற முறையும் அதன் பயன்பாடும்

சி.உதயகுமார்
BA.MA(Hons)PGDE.,
DIP.in.Cinema

(சென்றவாரத்தொடர்ச்சி)

**ஒவ்வொரு பாடத்திற்குமான Z புள்ளியினை கணித்தல்:**

Z புள்ளியானது $Z = \frac{Xi - \bar{X}}{SD}$ எனும் சூத்திரத்தினால் கணிக்கப்படுகிறது.

இங்கு, Z : Z புள்ளி, $X_i$ : குறித்த பாடத்திற்கான புள்ளி (நியமப் புள்ளி),

$\bar{X}$ : குறித்த பாடத்திற்கான சராசரிப்புள்ளி (கூட்டல் இடை)

SD : குறித்த பாடத்திற்கான நியமவிலகல்.

N : மீடிறன்களின் கூட்டுத்தொகை.

நியமவிலகல் SD ஆனது $SD = \sqrt{\frac{\Sigma(X - \bar{X})}{N}}$ என்பதால் கணிக்கப்படுகிறது.

**குறிப்பு:** $Z = \frac{Xi - \bar{X}}{SD}$ எனும் சூத்திரத்தில் நான்கு தெரியாக் கணியங்கள் உள்ளன. இவற்றில், மூன்று கணியங்கள் தரப்பட்டு கடைசிக்கணிய பெறுமானத்தினைக் கண்டறியுமாறு கேட்கப்படும். தரப்பட்ட கணியங்களை பிரதியிட்டு ஓர் எளிய சமன்பாட்டினைச் சுருக்குவது போல் இச்சூத்திரத்தினை சுருக்கலாம்.

**கணக்கு (1):** பாமதி என்ற மாணவி தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடத்தில் பெற்ற புள்ளி 72 ஆகும். இப்பாடத்திற்கான கூட்டல் இடை, நியம விலகல் என்பன முறையே 42, 15 ஆகும். தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடத்திற்கான பாமதியின் Z புள்ளி யாது?

**விடை:** $Z = \frac{Xi - \bar{X}}{SD}$ எனும் சூத்திரத்தில் பிரதியிடுவோம்.

$$Z = \frac{72-42}{15} = \frac{30}{15} = 2$$

$$\therefore \quad Z = 2$$

**கணக்கு (2):** தமிழ்மாறன் என்ற மாணவன் கணித பாடத்தில் பெற்ற புள்ளி 80 ஆகும். இப்பாடத்திற்கான கூட்டல் இடை, நியமவிலகல் என்பன முறையே 50, 12 ஆகும். கணித பாடத்திற்கான தமிழ்மாறனின் Z புள்ளி யாது?

**விடை:**

$Z = \frac{Xi - \bar{X}}{SD}$ எனும் சூத்திரத்தில் பிரதியிடுவோம்.

$$Z = \frac{80-50}{12} = \frac{30}{12} = \frac{5}{2} = 2.5$$

$$\therefore \quad Z = 2.5$$

**கணக்கு (3):** மகிழ்நன் என்ற மாணவனின் பொருளியல் பாடத்திற்கான Z புள்ளி 1.5 ஆகும். இப்பாடத்திற்கான கூட்டல் இடை, நியமவிலகல் என்பன முறையே 42, 12 ஆகும். மகிழ்நன் கணித பாடத்தில் பெற்ற புள்ளி யாது?

**விடை: 60**

**கணக்கு (4):** துர்க்கா என்ற மாணவியின் பௌதிகவியல் பாடத்திற்கான Z புள்ளி 2 ஆகும். இப்பாடத்திற்கான கூட்டல் இடை, நியமவிலகல் என்பன முறையே 50, 15 ஆகும். துர்க்கா பௌதிக பாடத்தில் பெற்ற புள்ளி யாது?

**விடை: 80**

**கணக்கு (5):** விதுசா என்ற மாணவியின் அழகியல் பாடத்திற்கான Z புள்ளி 2.2 ஆகும்.

இப்பாடத்திற்கான நியமப்புள்ளி, நியமவிலகல் என்பன முறையே 96, 10 ஆகும். கணித பாடத்திற்கான கூட்டல் இடை யாது?

**விடை: 74**

**கணக்கு (6):** பாணு என்ற மாணவனின் இணைந்தகணித பாடத்திற்கான Z புள்ளி 1.6 ஆகும். இப் பாடத்திற்கான நியமப் புள்ளி, நியமவிலகல் என்பன முறையே 90, 12 ஆகும். கணித பாடத்திற்கான கூட்டல் இடை யாது?

**விடை: 70.8**

**கூட்டுப்பாடங்களின் Z புள்ளி காணுதல்:**

**கணக்கு (7):** தமிழினி, அங்கயற்கண்ணி ஆகிய மாணவர்கள் இணைந்தகணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் பெற்றுக் கொண்ட புள்ளிகளும் மற்றும் கூட்டல் இடை, நியம விலகல் ஆகியனவும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

(i) இவர்களில் திறமைகூடிய மாணவி யார்?

(ii) மேலுள்ள பாடங்களின் அடைவுகளை மதிப்பிடுக.

| பாடங்கள் | தமிழினி | அங்கயற்கண்ணி | கூட்டல் இடை | நியம விலகல் |
|---|---|---|---|---|
| இணைந்த கணிதம் | 96 | 90 | 82 | 12 |
| பௌதிகவியல் | 85 | 79 | 74 | 15 |
| இரசாயனவியல் | 76 | 88 | 79 | 10 |
| மொத்தம் | 257 | 257 | | |

**விடை: தமிழினி**

இணைந்தகணித பாடத்திற்கான Z புள்ளி $= \frac{96-82}{12} = \frac{14}{12} = \frac{7}{6} = 1.2$

பௌதிகவியல் பாடத்திற்கான Z புள்ளி $= \frac{85-74}{15} = \frac{11}{15} = \frac{7}{5} = 0.7$

இரசாயனவியல் பாடத்திற்கான Z புள்ளி $= \frac{76-79}{10} = \frac{-3}{10} = -0.3$

**அங்கயற்கண்ணி**

இணைந்தகணித பாடத்திற்கான Z புள்ளி $= \frac{90-82}{12} = \frac{8}{12} = \frac{2}{3} = 0.7$

பௌதிகவியல் பாடத்திற்கான Z புள்ளி $= \frac{79-74}{15} = \frac{5}{15} = \frac{1}{3} = 0.3$

இரசாயனவியல் பாடத்திற்கான Z புள்ளி $= \frac{88-79}{10} = \frac{9}{10} = 0.9$

(i) தமிழினியின் மொத்த Z புள்ளி = 1.2+0.7-0.3=1.6

அங்கயற்கண்ணியின் மொத்த Z புள்ளி =0.7+0.3+0.9=1.9

அங்கயற்கண்ணியின் மொத்த Z புள்ளி தமிழினியின் மொத்த Z புள்ளியினை காட்டிலும் அதிகம் என்பதால் இவர்களில் அங்கயற்கண்ணி திறமைசாலி ஆவார்.

(ii) இணைந்தகணிதத்திற்கான மொத்த Z புள்ளி =1.2+0.7=1.9

பௌதிகவியலிற்கான மொத்த Z புள்ளி =0.7+0.3=1.0

இரசாயனவியலுக்கான மொத்த Z புள்ளி = -0.3+0.9=0.6

∴இணைந்தகணிதத்திற்கான மொத்த Z புள்ளி அதிகம் என்பதால், இணைந்த கணித பாடத்திற்கான அடைவுமட்டம் கூடுதலாம்.

**கணக்கு (8):** கிட்டன், கிளியன் ஆகிய மாணவர்கள் கணிதம், தமிழ், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் பெற்றுக்கொண்ட புள்ளிகளும் மற்றும் கூட்டல் இடை, நியம விலகல் ஆகியனவும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இவர்கள் இருவரில் திறமை சாலியான மாணவன் யார் என்பதைக் காண்க.

| பாடங்கள் | கிட்டன் | கிளியன் | கூட்டல் இடை | நியம விலகல் |
|---|---|---|---|---|
| கணிதம் | 85 | 75 | 70 | 15 |
| தமிழ் | 70 | 84 | 67 | 12 |
| விஞ்ஞானம் | 72 | 68 | 62 | 10 |
| மொத்தம் | 227 | 227 | | |

**கணக்கு (9):** குமரன், மேகலா ஆகிய மாணவர்கள் கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், சைவசமயம், விவசாயம் ஆகிய பாடங்களில் பெற்றுக்கொண்ட புள்ளிகளும் மற்றும் கூட்டல் இடை, நியம விலகல் ஆகியனவும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பாடங்கள் | குமரன் | மேகலா | கூட்டல் இடை | நியம விலகல் |
|---|---|---|---|---|
| கணிதம் | 74 | 70 | 70 | 12 |
| தமிழ் | 84 | 86 | 72 | 10 |
| விஞ்ஞானம் | 60 | 67 | 55 | 15 |
| ஆங்கிலம் | 54 | 57 | 47 | 12 |
| சைவசமயம் | 95 | 90 | 83 | 15 |
| விவசாயம் | 84 | 81 | 75 | 16 |
| மொத்தம் | 451 | 451 | | |

(i) இவர்களில் திறமைகூடிய மாணவன் யார்?

(ii) மேலுள்ள பாடங்களின் அடைவுகளை மதிப்பிடுக.

**கணக்கு (10):** சந்தோஸ், காவியா ஆகிய மாணவர்கள் கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், சைவசமயம், விவசாயம் ஆகிய பாடங்களில் பெற்றுக்கொண்ட புள்ளிகளும் மற்றும் கூட்டல் இடை, நியம விலகல் ஆகியனவும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

(i) இம்மாணவர்களில் அதிசிறந்த மாணவன் யார்?

(ii) மேலுள்ள பாடங்களின் அடைவுகளை மதிப்பிடுக.

| பாடங்கள் | சந்தோஸ் | காவியா | கூட்டல் இடை | நியம விலகல் |
|---|---|---|---|---|
| கணிதம் | 79 | 66 | 72 | 15 |
| தமிழ் | 45 | 51 | 54 | 12 |
| விஞ்ஞானம் | 74 | 71 | 50 | 12 |
| ஆங்கிலம் | 82 | 80 | 74 | 15 |
| சைவசமயம் | 60 | 92 | 75 | 14 |
| விவசாயம் | 65 | 45 | 60 | 10 |
| மொத்தம் | 405 | 405 | | |


**கணக்கு (11):** தமிழ்மாறன், கோவலன், செழியன் ஆகிய மாணவர்கள் ICT, கணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் பெற்றுக்கொண்ட புள்ளிகளும் மற்றும் கூட்டல் இடை, நியம விலகல் ஆகியனவும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | ICT | கணிதம் | கணக்கியல் |
|---|---|---|---|
| தமிழ்மாறன் | 78 | 68 | 75 |
| கோவலன் | 85 | 74 | 92 |
| செழியன் | 92 | 70 | 78 |
| $\bar{X}$ | 75 | 70 | 65 |
| SD | 8 | 12 | 10 |

(i) இம்மாணவர்களில் அதிசிறந்த மாணவன் யார்?

(ii) மேலுள்ள பாடங்களின் அடைவுகளை மதிப்பிடுக.

**குறிப்பு:** பாடங்களின் அடைவின் மதிப்பீடு என்பது ஒவ்வொரு பாடத்திற்குமான ஒவ்வொருவருடைய Z புள்ளிகளையும் கூட்டும்போது எந்த பாடத்திற்கான Z புள்ளி அதிகமாக இருக்கிறதோ அப்பாடத்தில் மாணவர்கள் சிறப்பாக சித்தியடைந்துள்ளார் என்று கூறுவதாகும். ■



# கல்யாணக்கனவு

கனவு 15

யாழ் சத்யா

முரளிதரன் படிக்கும் பாடசாலையில் வடமராட்சி வலய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒருவர் இரண்டு போட்டிகளில் பங்குபெற முடியும். வைஷாலி வழக்கம் போல நடனத்திற்கும் முதல் தடவையாகப் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளவும் அவளது பாடசாலையிலிருந்து தெரிவாகியிருந்தாள்.

நடனமும் பேச்சுப் போட்டியும் வேறு ஒரே நாளில் வந்து வைஷாலியைப் பதட்டப்படுத்திக் கொண்டிருந்தது. இவள் இரண்டிலும் பங்குபற்றுவதால் இவள் முதலில் ஆடுவதற்கு நடுவர்கள் ஒழுங்கு செய்திருந்தனர். நடனப் போட்டிகளைப் பற்றி அவளுக்குக் கவலை கிடையாது. அது அவள் இரத்தத்தில் ஊறியிருக்கப் பேச்சுப் போட்டி பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

பேச்சுப்போட்டி ஒரு அரங்கில் நடந்து கொண்டிருந்தது. பேசுபவர் தவிர்த்து பங்குபெறும் மீதி மாணவர்கள் அரங்குக்கு வெளியே நின்று கொண்டிருந்தார்கள். முரளிதரனும் கூட தனது முறைக்காகக் காத்துக் கொண்டிருந்தான். வைஷாலியும் நடனப் போட்டியை முடித்து உடை மாற்றிக் கொண்டு அந்த மாணவர்களோடு சென்று நின்று கொண்டாள்.



அப்போது இவளருகே வந்தான் முரளிதரன். வைஷாலிக்குப் போட்டியை எண்ணிக்கூட இந்தளவு பயமோ, பதட்டமோ ஏற்படவில்லை. ஆனால், முரளிதரன் இவளிடம் வருவதைக் கண்டவளுக்குப் பயத்தில் தலை சுற்றுவது போலிருக்கச் சுவரைப் பிடித்துக் கொண்டு வைத்த விழி வாங்காது அவனையே நோக்கினாள்.

வைஷாலிக்கு அழகே அவள் கண்கள்தான் எனலாம். அடர்த்தியான கருநிறப் புருவம் நடுவே தொடுத்திருக்க, அதன் கீழே அவள் நீண்ட விழிகள் இரண்டும் பல பாவங்கள் பேசும். கருமணிகள் இரண்டும் உருண்டு உருண்டு அவள் வாய்ப் பேச்சுக்கு மேலும் நயம் சேர்க்கும்.

இவளோ விழி விரிய அவனைப் பார்த்துக் கொண்டிருக்க, அவன் முகத்திலோ எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது. இவள் அருகே வந்தவன் அவள் கண்களை நேராய் உறுத்து விழித்தான். வைஷாலிக்கோ இதயம் எம்பி வெளியே குதித்து விடும் போலிருந்தது.

“ஏய் வைஷாலி...! இனிமேல் ரியூசன்ல வைச்சு என்னைப் பார்க்கிற வேலை வைச்சியோ... நடக்கிறதே வேற... என்ன செய்வன் என்று எனக்கே தெரியாது. நீ பாக்கிற படியாலதான் பொடியள் கூப்பிடுறாங்கள். படிக்கிற வயசில பாடத்தைக் கவனிக்காமல் உனக்கு என்ன பார்வை வேண்டிக் கிடக்கு. இனியும் நான் சும்மா இருப்பேன் என்று நினைக்காதை. இனியொரு தரம் பாத்தியோ நேர போய் சித்திர சேரிட்டச் (ரியூசன் சென்டர் டிரெக்டர்) சொல்லிட்டுத்தான் அடுத்த வேலை பாப்பன். விளங்கிச்சோ...”

தணிந்த குரலில் அவன் அடுத்தவருக்கும் கேட்காமல் உறுமி விட்டுச் செல்ல இவளோ முகம் வெளுத்து, உடல் தொய்ந்து வெலவெலத்துப் போய் நின்றாள்.

சஞ்சயன் படிப்பதும் அந்தப் பாடசாலைதானே. அப்போது உணவு இடைவேளை நேரம் என்பதால் வைஷாலி வந்திருக்கிறாளோ பார்ப்போம் என்று எண்ணியவனாய் போட்டிகள் நடைபெறும் அரங்குகளைச் சுற்றி வந்து கொண்டிருந்தான். அப்போதுதான் முரளிதரன், வைஷாலியிடம் பேசுவதும் அவள் முகம் சுருங்குவதும் இவன் கண்களில் பட்டது. விரைந்து அவளிடம் ஓடிச் சென்றான்.

கண்கள் கலங்கிப் போய் உதடுகளைக் கடித்துக் கொண்டு நின்றவளைப் பார்க்கவே இவன் மனது தாங்கவில்லை. முரளிதரன் மீது சொல்லொணாக் கோபம் எழுந்தது. போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வைஷாலியிடம் முரளிதரன் பேசியது சுத்தமாக அவனுக்குப் பிடிக்கவில்லை.

வைஷாலி அருகே செல்லவும் சஞ்சயனைப் பார்த்ததும் அவள் விழிகளில் துளிர்த்திருந்த நீர் முத்துக்கள் கன்னத்தில் உருண்டு வழிந்தன. தனது கைக்குட்டையை எடுத்து அவளிடம் நீட்டினான்,

“இங்க பாரு வைஷு... முரளி என்ன சொல்லியிருந்தாலும் காதில விழுத்தாதை. அவன் இப்ப உன்னோட கதைச்சதுக்குக் காரணம் உன்னைப் போட்டில வடிவா பேச விடாமல் செய்யிறதுதான். இல்லை என்றால் ரியூசன்ல வைச்சே அவன் உன்னோட கதைச்சிருக்கலாம். உன்ர மனசைக் குழப்பிறதான் அவன்ட நோக்கம். அதால தயவு செய்து அழாமல் போட்டிக்கு ரெடியாகு. நீ பேச வேண்டிய விஷயங்களைத் திருப்பி ஞாபகப் படுத்து.” எனக்கூறி விட்டுத் தான் வைத்திருந்த தண்ணீர் போத்தலை அவளிடம் நீட்டினான். எதுவும் பேசாமல் வாங்கி முகத்தைக் கழுவியவள் அண்ணாந்து மீதித் தண்ணீரைக் குடித்து முடித்தாள். இப்போது மனம் நன்றாகவே தெளிந்திருந்தது. ஆசுவாசமாகிப் பழையபடி போட்டியில் மனதைத் திருப்பியவள், சஞ்சயனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

“தாங்ஸ்டா நண்பா...”

தனது ஜீன்ஸ் பொக்கெட்டிலிருந்து ஒரு மை லேடி ரொபியை எடுத்து அவளிடம் கொடுத்தவன், இடைவேளை முடிந்திருக்க இவளிடம் விடை பெற்றுத் தனது வகுப்பறைக்குச் சென்றான் சஞ்சயன்.

**கண்கள் கலங்கிப் போய் உதடுகளைக் கடித்துக் கொண்டு நின்றவளைப் பார்க்கவே இவன் மனது தாங்கவில்லை. முரளிதரன் மீது சொல்லொணாக் கோபம் எழுந்தது. போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வைஷாலியிடம் முரளிதரன் பேசியது சுத்தமாக அவனுக்குப் பிடிக்கவில்லை. வைஷாலி அருகே செல்லவும் சஞ்சயனைப் பார்த்ததும் அவள் விழிகளில் துளிர்த்திருந்த நீர் முத்துக்கள் கன்னத்தில் உருண்டு வழிந்தன. தனது கைக்குட்டையை எடுத்து அவளிடம் நீட்டினான்.**

பேச்சுப் போட்டி முடிவடைந்து முடிவுகளும் வெளியாகியது. வழக்கம் போல முரளிதரன் முதலாம் இடம் பெற்றிருந்தான். வைஷாலிக்கு மூன்றாம் இடம்தான் கிடைத்திருந்தது. முதல் இரு இடங்களைப் பிடித்தவர்கள்தான் அடுத்த கட்டமாக மாவட்ட மட்டப் போட்டிகளுக்குப் போக முடியும்.

போட்டி முடிவடைந்து வீடு திரும்பும் போது வழி முழுவதும் யோசனையோடேதான் சென்றாள் வைஷாலி. பழக்கப்பட்ட பாதையில் துவிச்சக்கர வண்டியை கால்கள் அதுபாட்டிற்கு மிதிக்க எண்ணங்கள் முழுவதும் முரளிதரனைச் சுற்றித்தான்.

வெள்ளைச் சீருடையில் அவன் பேசுவதைக் கேட்க வேண்டும் என்று எவ்வளவு கஷ்டப்பட்டு இந்தப் போட்டிக்குத் தயாராகினாள். இராப் பகலாக பேச வேண்டிய விடயங்களை மனனம் செய்து அவள் இந்த சில நாட்களாகத் தூங்கியதே சில மணி நேரங்கள்தான். காலையில் போட்டிக்குச் செல்லும் போது இதயம் மகிழ்ச்சியில் எம்பி எம்பிக் குதித்துக் கொண்டிருந்தது. இப்போது எதிர் மறையாக அடங்கிப் போயிருந்தது.

முரளி இவளைப் பார்த்து ஒரு புன்முறுவலாவது பூப்பான் என்று எண்ணி வந்தவளுக்கு அவன் கொட்டிய அனல் மனதைத் தகிக்க வைத்தது.

‘கொஞ்சம் நல்லாப் படிச்ச உடனே அவருக்குப் பெரிய ஹீரோ என்று நினைப்பு. பொடியள் பட்டம் பழிக்கிறதுக்கு நான் என்ன செய்யிறதாம்? ஆனால், இனி அவன்ட பக்கமே திரும்பக் கூடாது. எங்களுக்கும் கொஞ்சம் சூடு, சுரணை இருக்கு என்று காட்ட வேணும்.’

தனக்குள்ளேயே உறுதியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தவள், அதை அன்றிலிருந்து செயற்படுத்தவும் தொடங்கினாள்.

அன்று மாலை ரியூசன் சென்டருக்குச் சென்ற போது வழக்கம் போல ‘முரளி... முரளி...’ என்று கத்த ஆரம்பித்தார்கள். அதைப் பொருட்படுத்தாமல் உள்ளே சென்றால் வழக்கத்திற்கு மாறாக முரளிதரன் வகுப்பறைக்கு அருகே நின்றிருந்த தென்னை மரத்தில் வலது காலைப் பின்புறமாக ஊன்றிச் சாய்ந்து நின்றிருந்தவன், இவளையே உறுத்து நோக்கிக் கொண்டிருந்தான்.

இவளும் முதலில் சளைக்காது அவன் கண்களையே நேராக நோக்கியவள், அன்றுதான் எடுத்திருந்த தீர்மானம் நினைவுக்கு வரக் கண்களைத் தாழ்த்திக் கொண்டு துவிச்சக்கர வண்டியை உரிய இடத்தில் நிறுத்தி விட்டு வகுப்பறையில் போய் அமர்ந்தாள்.

மூன்றாம் வாங்கிலில் இருந்தால்தானே அவனைப் பார்க்க முடியும் என்று எண்ணியவள் முதல் வாங்கில் தொடக்கத்தில் அமர்ந்து கொண்டாள். வகுப்பு ஆரம்பிக்கவும் கிரிக்கெட் விளையாடி விட்டு அரக்கப் பரக்க ஓடி வந்து அமர்ந்த சஞ்சயன் வைஷாலியை வழக்கமான இடத்தில் காணாது கண்களால் துழாவித் தேடினான்.

**அவள் கனவு நனவாகுமா?**

# பெட்டிக்கடை

ஆதவன்



இரண்டு தடவைகள் ஒரு மணித்தியால இடைவெளியில் குண்டுகள் வீசப்பட்டிருக்க வேண்டும். அந்த விமானங்களின் சத்தத்தை வைத்தே புக்காறாதான் என்பது புனிதனுக்குத் தெரியும். இடைத்தர அளவான விமானங்கள் அதிகம் வேகமாகப் பறக்காது. ஆறுதலாக வட்டமடித்து குண்டு வீசும் போது மட்டும் சற்று கீழ் இறங்கி தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை கச்சிதமாக முடிக்கும்.

சோடியாக வந்து பேசிப் பறைஞ்சு தலா ஆறு குண்டுகளை வீசியதை எண்ணிக் கொண்டு கிடந்தவன் அதிர்வுகளை வைத்து மிருசுவில் பக்கம் என்று கணித்தான். அண்ணாந்து படுத்திருந்து தலையை சரித்து ஜன்னல் இடைவெளியில் வானத்தைப் பார்த்தான். தெளிந்த வானத்து நட்சத்திர சிமிட்டல்களை இன்று ரசிக்கும் மனநிலை வந்துவிட்டது.

புனிதனுக்கு மெல்லிய கரும் தேகம். ஆனால், தைரியம் அதிகமாக இருந்தது. பலரின் எள்ளி நகையாடல்களுக்கு மத்தியில் பெட்டிக் கடைக்கு இடம் தேடி அந்த இடத்தைச் சாவச்சேரி பிரதான சாலையில் கண்டுபிடித்தான். அது அவனுக்குப் பரிச்சயமான தொழில்.

செய்யும் தொழிலால் அவனுக்கு உறுத்தல் சிறிதும் இல்லை. சில இறப்புகளும் புதிய பிறப்புகளுக்கு அடிநாதமாக அமைந்து விடும். பழமை இறந்து புதுமை பிறப்பது போல.

கடைக்கு நான்கு மாத வாடகை கட்டாமல் தொக்கி நிக்கிறது. கடை உரிமையாளர் வெளிநாட்டில் வசிக்கிறார். சொன்னால் கேக்க கூடிய மனிதர் பரவாயில்லை. ஆனால், இருக்கிற வீட்டுக்காரருக்குத் தவணை சொல்லேலாது. ஆள் சரியான கறார் பேர்வழி. என்ன பாடுபட்டும் மாதக் கடைசியில் கொடுத்து விடுவான். இந்தப் பிரச்சினையில் துணிமணி எடுக்கிறதையும் தள்ளி வைத்திருந்தான். இப்பதான் தீபாவளியும் வந்து போனது. ஆனால், மனைவி ரேகாவுக்கு நிலமை தெரிந்து எதுவும் கேட்கவில்லை. மகன் ஆதிக்கு சாவச்சேரி சந்தையில நடைபாதையில் குவித்து வித்தவனிடம் மலிவா உடுப்பு வாங்கியிருந்தான்.

கடும் வருத்தக்காரரும் அவசர சிகிச்சை பிரிவுக்கும் சனம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குத்தான் போகும். அங்கேயே பக்கத்தில் சில பெட்டிக்கடைகள் இருப்பதால் இவனுக்கு சாவச்சேரியில் பெரிதாக வியாபாரம் நடக்காது. வயதானவர்கள் போனால்தான் உண்டு. ஆனால் இப்படி செல்லடி விமானக் குண்டு வீச்சு நடந்தால் வருமானம் கொட்டும்.

அந்தச் சத்தம் கேட்ட பிறகு அவனுக்குத் தூக்கம் வரமறுத்தது. பக்கத்தில் தனக்கு மேல் ஒருகையைப் போட்டபடி கிடந்த ஆதியின் மெல்லிய குறட்டை கீச் என்ற ஒலியை எழுப்பியது. சளி கட்டியிருக்க வேணும். முந்தைய நாள் பள்ளி விடுற நேரம் மழை தூறினது. இலேசா நனைந்தவனை தோயவாக்கச் சொன்னவன். ரேகா தடிமன் வந்திடும் வேண்டாம் என்று தடுத்துவிட்டாள். அடைமழையில நனைந்தால் பரவாயில்லை ஆனால், தூறல் ஆபத்து என்று எவ்வளவு சொல்லியும் கேக்காத அவள் மேல் கோபம்தான் வந்தது.

நேற்று கடை திறக்கேக்க பக்கத்து கடை துரையர் கேட்டது இப்பவும் நினைவிருக்கு.

“என்ன வர வர பிந்தி திறக்கிற? வேளையோடு ஆட்கள் வந்தால் என்னட்டைதான் கேப்பாங்கள். நான் சுத்தமா சாம்பிராணி போட்டு மஞ்சள் தெளிச்சு கடை திறந்து வச்சிருக்கிறன். இதெல்லாம் அரியண்டம்.” என்று கடுப்பாக சொன்னார்.

துரையர் ஆச்சாரம் கூடிய ஆள். வயசு அறுபத்தேழு. பலசரக்குக் கடையென்றாலும் கருவாடு விற்க மாட்டார். நெற்றி நிறைய விபூதி பூசி சந்தனப் பொட்டு வைச்சு முகம் பளிச்சென்று இருக்கும். பஞ்சு போல நரைத்த தலைமுடிக்குப் போட்டியா இமைகள் கூட வெளிறிவிட்டது. மெல்லிய வாடலா இருந்தாலும் நல்ல சிவலை. கலர் சாரம் கட்டாமல் வெள்ளை வேட்டி அரைக்கை சேட்டு அதுவும் மத்தியானம் வெக்கை கூடினால் சேட்டை கழட்டி வைத்துவிட்டு வெறும் மேலோடதான் வியாபாரம் பார்ப்பார். கழுத்தில் சின்னி விரல் அளவில் அச்சரக் கூடு பளிச்சென்று தொங்கும்.

புனிதன் வாடகைக்கு எடுக்க முன்னம் கடை உரிமையாளர் வெளிநாடு போகும் வரை மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்றவர்.

துரையருக்கு அப்போதே அவர்களிடம் பிரச்சினைகள் வாய் தர்க்கங்கள் இருந்தது. இளவட்ட பெடிகள் மோட்டார் சைக்கிளில் முறுக்கிக் கொண்டு கடைக்கு வாறதும் முகப்பில் நின்று தம் அடிப்பதும் போற வாற குமர் பிள்ளைகளுடன் சொறியிறதும் துரையருக்குப் பிடிக்கவில்லை. சண்டை போட்டு பார்த்தார் சரிவரவில்லை. காவல் துறையில் என்றி போட்டு தண்டப் பணம் கட்ட வைத்ததால் அதுக்குப் பிறகு கடை உரிமையாளர் வாசலில் பலர் கூடுவதைத் தவிர்த்தாலும் துரையரின் நச்சரிப்பு தொடர்ந்தது.

இதுக்கு முடிவுகட்டி பழிவாங்க முடிவெடுத்து விட்டார் அந்த உரிமையாளர் போலும். பலர் கேட்டும் கொடுக்காமல் புனிதன் கேட்ட பெட்டிக் கடைக்கு ஒப்புக் கொண்டு வெளிநாட்டிற்குப் போய் விட்டார்.

துரையர் நேற்று கேட்டதும் புனிதனுக்கும் தான் சோம்பேறி ஆகின உணர்வு மெல்ல எட்டிப்பார்த்தது. ஒரு மாசத்துக்கு முன்னம் அடிச்சு வச்ச பத்து பெட்டியில இப்பவும் ஆறு விலைப்படாமல் கிடக்கு மிச்சமா. அவனுக்குப் புதுசா செய்யவும் மனமில்லை.

விடிய சில மணித்தியாலங்களுக்கு முதல் அயர்ந்து போனான்.

புனிதனுக்கு வவுனியாதான் சொந்த இடம். அனாதை. சின்ன வயதில் இருந்தே ஒருவரின் பெட்டி கடையில் வேலை பழகியிருக்கிறான். நாட்டு பிரச்சினைகள் வவுனியாவை விட்டு வெளியேறி சாவச்சேரிச் சந்தையில் மரக்கறிக் கடைகளில் எடுபிடி வேலை என்று காலம் கடந்தது.

அருகே இருந்த புடவைக் கடையில்தான் ரேகாவின் அறிமுகம். அவள் கொஞ்சம் கருப்பு களையான முகம். கண்களில் ஏழ்மையின் சோகம் எப்போதும் இருக்கும். அளவாகவே சிரிப்பாள். சாதாரண சுடிதார் அணிந்தாலும் சுத்தமாகவே கடையில் இருக்க வேண்டும் என்பது கட்டாயம். வரும் வாடிக்கையாளர்கள் முகம் சுளிக்காமல் நடந்து கொள்வது அவசியம்.

ஆடிக்கொரு தடவை அந்த புடவைக்கடை வழியே திரியும் புனிதன் தொடக்கத்தில் எதேச்சையாகவே பார்த்தான். மெல்லிய புன்னகையுடன் தொடங்கி வளர்ந்த நட்பு இருவரும் அறியாமலே காதல் என்ற எல்லைக்குள் நுழைந்து விட்டது.

திருமணம் செய்ய முதல் இந்தக் கடையை பேசி முடித்து முன்பணம் கொடுத்தவனுக்கு அந்தக் கடையையாலே காதலில் சிக்கல் வந்தது.

ரேகா வீட்டில் எதிர்ப்பு.

“பெட்டி விக்கிறவனைக் கட்டி எங்கள் மரியாதையைக் கெடுக்காத” என்றார் ரேகாவின் அப்பா.

“அதில் என்ன பிரச்சினை? எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை தெரியுமோ?

“பெட்டி வாங்க வாறவன் பறிகொடுத்த சோகத்தில் இருப்பான். என்ன சந்தோஷம் இருக்கும்? நாலு சனம் எங்கட முகத்தில முழிக்கவே கூச்சப்படும். தயவு செய்து அவனைக் கட்டினால் இந்தப்பக்கம் வந்திடாத” பொரிந்து தள்ளினார் தேப்பன்காரன். மற்ற பிள்ளைகளின் எதிர்காலம் இதனால் பாதிக்கும் என்ற கவலை அந்த ஏழை தந்தைக்கு இருந்ததில் வியப்பில்லை.

கடைசியில் காதல் வென்றது. தன் விருப்பப்படி கலியாணம் கட்டினாள். நகரை விட்டு தள்ளி மட்டுவில் பக்கம் ஒதுக்காக இருந்த சாதாரண இரண்டறை வீடு வாடகைக்கு எடுத்து வாழத்துவங்கினார்கள்.

ஆதி பிறந்த பிறகும் சில வருடங்கள் வியாபாரம் பரவாயில்லை. பிறகு சமாதான பேச்சுவார்த்தை என்று இழுபட்டது. இப்பதான் திரும்பச் சண்டை தொடங்கி நடப்பது புனிதனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

பொழுது விடிந்ததும் விடியாததுமா எழுந்தவன் முகம் கழுவி சாமி படத்துக்கு வைக்க மொட்டு விளாத செம்பரத்தைப் பூக்களை, புடுங்கத் தொடங்கினான். படத்துக்கு வச்சு கும்பிட்டது போக மிச்ச பூக்களை பிளாஸ்டிக் பையில் போட்டு வைத்தான். இந்த சச்சரவுகள் ரேகாவையும் எழுப்பிவிட்டது. அவளுக்கும் புரிந்திருக்கும். சிலவேளை புனிதன் இப்படி கெதியா வெளிக்கிடும் காரணம். கதிரையில் இருந்தவனுக்கு தேத்தண்ணியை குடுத்தாள்.

“என்ன ராத்திரி சத்தம் பலமா கேட்டது. யாவாரம் நடக்கும் எண்டு நம்புறீங்களோ?” உள்ளே அவளுக்கு இருந்த ஆசை முகத்தில் தெரிந்தது. வாராத தலை முடிகள் கன்னத்தில் வழிந்து தோடில்லாத காதை மறைத்தது.

“அதுதான் வேளைக்கு திறக்கவேணும். காலங்காத்தால வாறவங்கள் ஆளில்லாட்டி திரும்பி யாழ்ப்பாணம் போயிடுவாங்கள்” புனிதனின் கவலை வார்த்தையில் இருந்தது.

நன்றாக விடிந்து விட்டது. துரையர் பாண் மற்றும் நாளிதழ் வியாபாரத்தில் மும்முரமாக இருந்தார். பள்ளிக்கூடப் பிள்ளைகள் வரிசை கட்டி நடந்து கொண்டிருந்தனர். தங்களுக்குள் அளவளாவும் அவர்களில் சத்தமும் வாகனங்களின் இரைச்சலும் புனிதனுக்கு இன்று சந்தோஷ ஒலியாக இருந்தது.

கடையைத் திறந்து கூட்டி படத்துக்குப் பூக்களை அடுக்கினான். மூன்று சாம்பிராணிக் குச்சிகளை மூட்டி செருகி விட நறுமணத்தில் அவன் உடல் சிலிர்த்தது. அவனது பிரார்த்தனை மனிதனாலும் ஏன் கடவுளாலுமே ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கவேணும்.

உள்ளிருந்து ஒவ்வொரு பெட்டியா வெளியில் இழுத்து வந்து முன் பக்கத்தில் அடுக்கினவனை ஓரக்கண்ணால் பார்த்தார் துரை.

“நெடுகலும் இப்பிடி வந்திடு எனக்கு அலுப்பு குடுக்காமல். கண்ட கண்டதுகளில முழிக்க வேண்டி இருக்கு விடிஞ்சா” என்றார். வெளியில் வந்த துரையர் முகத்தில் அருவருப்பு கலந்த மகிழ்ச்சி இருந்தது.

புனிதன் மாலை ஆகுமட்டும் காத்திருந்தான். ஒரேயொரு பெட்டி அதுவும் கனநாளா சேடமிழுத்த கிழவி போயிட்டுதாம் என்று எடுத்துக்கொண்டு போனாங்கள். புனிதனும் போற வாற ஆட்களிட்ட விசாரிச்சான். எல்லா குண்டுகளும் வயல்வெளிகளில விழுந்ததாம்.

எதிர்பார்ப்பு வீணான வெறுப்பு அவனின்

**துரையர் ஆச்சாரம் கூடிய ஆள். வயசு அறுபத்தேழு. பலசரக்குக் கடையென்றாலும் கருவாடு விற்கமாட்டார். நெற்றி நிறைய விபூதி பூசி சந்தனப் பொட்டு வைச்சு முகம் பளிச்சென்று இருக்கும். பஞ்சு போல நரைத்த தலைமுடிக்குப் போட்டியா இமைகள் கூட வெளிறி விட்டது. மெல்லிய வாடலா இருந்தாலும் நல்ல சிவலை. கலர் சாரம் கட்டாமல் வெள்ளை வேட்டி அரைக்கை சேட்டு அதுவும் மத்தியானம் வெக்கை கூடினால் சேட்டை கழட்டி வைத்துவிட்டு வெறும் மேலோடதான் வியாபாரம் பார்ப்பார். கழுத்தில் சின்னி விரல் அளவில் அச்சரக்கூடு பளிச்சென்று தொங்கும்.**

கண்களில் இருந்தது. மாலை கடையை சாத்திவிட்டு கிளம்பினவனுக்கு எதிர்பார்ப்பு நிறைவேறாத கவலை. அதைப் பார்த்த துரையரும் நாளை விரும்பத்தகாத முழிவியளம் தொடரும் என்ற கவலையுடன் இருந்தார்.

■

# மருதமுனை விஜிலியின் இரண்டாவது தெருவின் நிழல்

இக்பால் அலி

கிழக்கிலங்கையில் மனிதம் பற்றியும் சமூகவியல் பற்றியும் ஏராளமான கவிதைகளையும் எழுதியும் கவியரங்குகளில் பாடியும் வருபவர் நண்பரும் கவிஞருமான மருதமுனை விஜிலி. மனித நேயத்தின் அவல நிலையினையும் சமூகவியல் பிரச்சினைகளையும் சேர்த்து அரசியலை நையாண்டி பண்ணி எழுதி வரும் கவிஞர் நூல்வெளியீட்டு விழா மேடைகள் தோறும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி வருபவர்



கிழக்கிலங்கையில் மருதமுனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர். மிகவும் அற்புதமான கவிதை வரிகளுடன் அவரது இரண்டாவது கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. இது “இரண்டாவது தெருவின் நிழல்” என்னும் பெயருடன் வெளிவந்துள்ளது. அதன் நூல் வெளியீட்டு விழா மருதமுனையில் 20-3-2022 இடம்பெறுகின்றது. இந் நூல் வெளியீட்டு விழா சிறப்புடன் இடம்பெற என்னுடைய நல்வாழ்த்துகளும் உரித்தாகுக.

பெரும்பாலும் இவரது படைப்புக்களில் மனிதர்களிடத்தில் மனிதாபிமானம் இல்லாதொழிக்கப்பட்டு வக்கிரமான உணர்வுகளோடு அகத்தினுள்ளும் புறத்தினுள்ளும் அல்லுற்று துன்பப்படுகின்றார்கள், மனிதனாகப் பிறந்தவன் எவனிடத்திலும் மனித நேயம் இல்லை. அவன் உடலில் வெற்றுடம்பு மட்டும்தான் இருக்கிறது. மனிதனே மனித இதயத்தைக் கொன்று விட்டு மிருகத்தைப் போன்று வாழ்கிறான்.

மனித நேயத்தின் மகத்துவம் புரியாமல் கேவலமான முறையில் தன்னைத் தானே அழித்துக் கொண்டு மனிதன் தவிக்கின்றான். எதைத் தொட்டாலும் இதயமில்லாத மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதயங்களெல்லாம் பிண அறையில் வைக்கப் பட்டுள்ளன. இதை இல்லை என்று சொல்ல என் பேனா மறுக்கிறது என்பதை கருப்பொருளாகக் கொண்டு கவி ஞர் விஜிலி யாத்த கவி வரிகள் மிகவும் அருமை. “ஒரு மூதாட்டியின் வாக்கு மூலம்” என்னும் தலைப்பில் அமைந்துள்ள கவிதையின் கவி வரிகள் இவை. உண் மையிலே கவிஞர் விஜிலி பக்குவப்பட்ட கவிஞர் என் பதால் படைப்பிலே முதிர்ச்சியை அனுபவிக்க முடிகிறது.

**எனது ஊன்றுகோல்**
**பூமி தடவும் போதெல்லாம்**
**மனிதாபிமானம் செத்துக் கொண்டிருக்கிறது.**

கவிஞர் விஜிலியுடைய கவிதையில் சாதாரண மனிதனுக்கும் நடக்கக் கூடிய சம்பவம் வெளிப்பட்டு நிற்கிறது. மனிதன் முன்னேறத் துடிக்கின்ற போது இயல்பாகவே தோன்றும் காழ்ப்புணர்ச்சியினால் பெரியளவில் மனம் சிதைக்கப்படுகிறது. ஒருவர் தமது துறையில் சாதனை நிலைநாட்டுவதற்கு ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்ற தவிப்பு தெரிகிறது. அதனால் தான் கவிதையில் மனம் நொந்து கொண்டு கண்ணீர் வடிக்க முடிகிறது. அந்த வலி நம்மையும் வேதனைப் படுத்தி நமக்குள்ளும் வலி எடுக்கிறது. இதுதான் உண்மைக் கவிதையின் வெளிப்பாடாகும்.

இந்த வலி ஏற்பட்டால் தானே தடைக்கற்களைப் போட்டு தடுத்து நிறுத்தும் சூழ்ச்சி பூரணத்துவம் அடையும். ஆனால், கவிஞர் எதிர்பாக்கிற அளவுக்கு நெடுந் தொலைவொன்றைத் தொட எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை என்று புரிந்து கொண்டு மன விரக்தியடைகிறார். உயரத் துடிக்கும் மனிதனுக்கு இத் தனை சோதனையா என்று கவிஞர் கோபம் கொள்கி றார். அது உண்மைக் கவிஞனுக்குரிய தார்மீகக் கோபத்தின் வெளிப்பாடு.

“காலடி” என்ற தலைப்பில் தம் சுற்றுச் சூழலில் உள்ளவர்கள் பற்றிய கவிதை. அற்பர்களாகவும், தாழ்வு மனப்பான்மையுள்ளவர்களாகவும், தம் திறனில் நம்பிக்கையில்லாதவர்களாகவும், அடுத்தவனை திட்டமிட்டு அழித்து சிதைப்பவர்களாகவும், இழிவு படுத்துபவர்களாகவும் இருக்கிறார்கள். ஒரு சமூகத்தின் விலாசத்தை அழிப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது. உண்மையான வரலாற்று ரீதியிலான புராதன சின்னங்களை இல்லாமல் செய்யும் சதித் திட்டம் நடக்கிறது. இப்படியான நிலையில் அதற்கு எதிராய் உண்மையை உலகறியச் செய்யக் கூடிய திறன்வாய்ந்த இளம் தலைவர் ஒருவர் இருக்கிறார். ஆனால், உண்மைப் புறம்பமாக அப்படியான இளம் தலைமைத்துவ வாதிகள் எவரும் இல்லை என்று பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது உண்மையென அந்த சமூகம் நம்புகிறது. எழுந்து வரத்துடிக்கும் சமூகங்களின் குரல்வளையை நசிக்க முற்படும் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் முகங்களை கவிஞர் தோலுரித்துக் காட்டுகிறார்.

காழ்ப்புணர்ச்சியின் மூலம் செய்யும் சூழ்ச்சியும் சூதும் புரியாமல் சதித்திட்டங்களை வரவேற்கும் மக்கள் சமூகம் இளம் தலைமைத்துவங்களை அழித்துக் கொண்டே இருக்கிறார்கள். இக்கவிதை கூர்மையான புரிதலுக்கும் உணர்ச்சி வெளிப்பாட்டிற்கும் உவப்பானதாகும்.

**நெடுந் தொலைவொன்றைக் கடந்து**
**இலக்கைத் தொடுவதற்கு**
**நடந்து கொண்டிருக்கின்றேன்**
**மறுகணமே**
**எனது காலடித் தடங்களை**
**சிலர் அழித்துக்**
**கொண்டிருந்தனர்.**

இன்றைய நாட்டின் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலைமை மிக மோசமானதாக இருக்கிறது. ஈவ இரக்கமில்லாமல் காட்டுமிராண்டிகள் போல பொருள்களின் விலையை நினைத்தபடி ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். அத்தியாவசியமான பொருட்களின் தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. கூலித் தொழிலாளி கூட நியாயமற்ற முறையில் நடந்து கொள்கின்றான். வீட்டில் அடுப்பு எரிவதற்குப் பதிலாக வயிற்றில் நெருப்பு எரிகிறது. தாயின் மார்பில் பால் வற்றிப் போய் பச்சிளம் குழந்தை கதறி அழுகிறது. வெயிலில் கருவாட்டை காயப் போடுவதற்குப் பதிலாக கொடிய வறுமை மனிதனை காயப் போட்டு மனிதனை துண்டு துண்டாக உடைத்தெறியும் நிலைமை தோன்றியுள்ளது.

இக்கால கட்டம் இவ்வளவு பெரிய கொடுமையானதா என அறிந்து கொள்ளும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது. மத்திய தரக் குடும்பத்தினர்கள் கூட விரக்தி நிலைக்குச் சென்று விட்டனர். இன்று எல்லோரும் மௌன விரதம் இருக்கிறார்கள். இன்று எல்லோரும் ஓலைக் குடிசைக்குள் வாழ்கின்றார்கள் என்று குமுறும் கவிஞர் விஜிலியின் கடும் கோபம் பட்டினியால் தவிக்கும் உள்ளங்களுக்கு சாந்தியளிக்கிறது.




**உடைக்கப்படும் கருவாட்டு**
**முட்களின்**
**மௌனத்தால்**
**ஒட்டிய வயிறுகள் நசிந்தன**
**ஓலைக் குடிசைக்குள்**

மொழியின் வலிமையும் வளமும் தெரிந்து சமூக அக்கறையோடு எதையும் நோக்குபவர் தான் கவிஞர் விஜிலி. தமது சுற்றுச் சூழல் மதுவுக்கு அடிமையாகி அல்லலுறுவதை தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் மனதுக்குள் தரிசனத்தைக் காட்டும் வார்த்தைகள் கும்பலாக வந்து கவிஞரைத் திணர வைக்கின்றன. இன்று மதுவுக்கு அடிமைப்பட்ட குடும்பங்கள் கர்ண கொடூரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தன் மனைவி யார் என்று தெரிவதுமில்லை. தம் பிள்ளை யார் என்று தெரிவதுமில்லை. கையில் கூர்மையான கத்தியை ஏந்தி கொலை வெறியாட்டம் ஆடி தம் குடும்பத்தையும் தன்னையும் அழித்துக் கொள்ளுகின்ற மனிதாபிமானமற்ற காட்சியெல்லாம் கண்டு கண்ணீர் வடித்து கண்ணீரெல்லாம் வற்றிவிட்டது. கண்ணீரை வடித்துத் தான் என்ன பயன் எல்லோரும் இருளில் கண்ணை மூடியிருப்பதைப் போல் இருக்கலாம் என்று கவிஞர் மனவருத்தம் கொள்கிறார். ஆனால், கவிஞர் விஜிலி மனதிற்குள் எழுந்த வார்த்தையை வெளியே அள்ளி வீசுகிறார்.

**மதுக் கோப்பைக்கு**
**மனிதாபிமானம்**
**செத்துக் கொண்டிருந்தது.**

கவிஞர் விஜிலி பாடுபொருளாகக் கொண்டு பாடிய கவிதையொத்த கவிதையொன்று ஞானம் சஞ்சிகையில் சமீபத்தில் வெளிவந்தது. இது என்னுடைய கவிதையாகும்.

மதுவுக்கு அடிமையான கணவனை கட்டிக் கொண்ட ஒரு பெண், படும் அவஸ்தையை கவிதையில் சித்தரிக்கும் போது

**எழும்பசிகளுக்கு**
**உடலையும் உதிரத்தையும்**
**உறிஞ்சி**
**சுவைக்கக் குடிக்கக் கொடுத்து**
**இருண்ட வீட்டிலும்**
**வெளிச்ச விளக்குகள் ஏற்றி**
**பிண ஊர்தியாய்**
**உதிர்ந்து போன**
**பூக்கன்றுகள் நாங்கள்.**
**ஞானம் சஞ்சிகை**

அந்த வகையில் கவிஞர் விஜிலியின் கவிதைகள் “இலக்கியம் சமூகத்திற்காக, மனிதனுக்காகத் தான் இருக்க வேண்டுமே ஒழிய, சும்மா பம்மாத்துப் பண்ணுவதற்கோ, தன்னை இலக்கிய மேலாண்மையாளன் என்று காட்டிக் கொள்வதற்கோ அல்ல” என்று தம் கவிதையின் செயற்பாட்டை பாரதி வழியில் நின்று வரையறுக்கிறார் கவிஞர்.

**கோடையின் அனல்**
**பற்றி எரிகிறது**
**சிலர் இதயங்களைப் போல**

கவிஞரின் கவிதை வரிகள் நெருப்பாக எரிகிறது. எந்த கோலத்திலும் எந்த கோணத்திலும் நோக்கினாலும் ஆணி அடிப்பது போல் உள்ளது. குருதியைக் கொப்பளிக்கச் செய்கின்ற கவிதை வரிகளாகும். இக்கவி வரிகள் கவிஞருடைய வெற்றி இலக்கை நோக்கிப் பயணிக்கிறது.

இக்கவிஞரின் தந்தை மூஸா சேர். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் பணியாற்றியவர்கள். இன்று கவிஞர் விஜிலி ஈழத்து கவிதைப் பரப்பில் பேசப்படும் முன்னணி மிக்க கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப்படும் அளவுக்கு இவரது கவிதைகள் அமைந்துள்ளன. அழகான அர்த்தங்களும் அழகான படிமங்கள், அனுபவ முதிர்ச்சிமிக்க கருத்துச் சித்திரங்கள், புதிய பார்வையோடு மனித இயல்புகளையும் சமூக நிகழ்வுகளையும் விமர்சிக்கும் பாங்கும் அங்கதத் தன்மையும் இக்கவிதைத் தொகுதியில் காணக் கூடியதாக உள்ளன.

இந்நூல் பற்றி தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எப்.எம். அஷ்ரப் பற்றிக் குறிப்பிடும் போது “தான் நாளாந்தம் தரிசிக்கும் சமூகத்தின் பல்வேறு கோணங்களையும் மனக்கண்ணால் படம் பிடித்து அவற்றை சிந்தனையில் இருத்தி அலசி ஆராய்ந்து பலனாய் வெளிவந்த அவரது உள்ளக் கருத்துகளையே இக் கவிதைத் தொகுதி தாங்கி நிற்கிறது. இன்னொரு வகையில் சொல்லப் போனால் எதிர்கால உலக ஒழுங்கிற்கு குறித்த அச்சம் முதலியவற்றால் சிதைந்து சிதறிப்போய் உள்ள மனிதாபிமானம் குறித்த அச்சமும் அவரது கவிதைகளினூடாக வெளிக்கிளம்பியுள்ளதை இத்தொகுதி இனங்காட்டுகிறது” என்று தமது மதிப்பீட்டைச் செய்துள்ளார் கலாநிதி ஏ.எம். எம். அஷ்ரப்.

இந்தியா மதுரை முதுகலை ஆசிரியர் கவிஞர் மா. காளிதாஸ் இந்நூல் பற்றிக்குறிப்பிடும் போது “மனித மனத்தின் சலனங்கள், இயலாமைகள், இருப்பின் மீதான பெரும் அச்சுறுத்தல்களையும், வேரோடிக் கிடக்கும் பழமையை தன் சந்தர்ப்பத்திற்குப் பயன்படுத்தத் துடிக்கும் முதலாளித்துவத்தையும் தன் சொல் சாட்டையால் சுழன்றடிக்கும் கலை இயற்கையாகவே கைவரப்பெற்றுள்ள கவிஞர் மூஸா விஜிலியின் கவிதைகள் ஆணவப்படுத்தப்பட வேண்டியவை என்பதில் எவ்வித ஐயமுமில்லை.” என்று தமது மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளார் கவிஞர் மா. காளிதாஸ்.

உங்கள் கவிதைப் பணி சிறக்க நல்வாழ்த்துகள். ■

ரமணி

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி 10


சிவாஜி, எம்.ஜி.ஆர் ஆகிய இரண்டு பெரும் ஆளுமைகளுக்குப் பாட்டு எழுதியவர் கவியரசு கண்ணதாசன். ஒரு படத்தில் சிவாஜிக்கு எழுதிய பாட்டு சிறப்பாக இருக்கும். அடுத்து எம்.ஜி.ஆரின் படப்பாடல்கள் அதை விடச்சிறப்பாக இருக்கும். அடுத்து வெளியாகும் சிவாஜி படப்பாடல் பட்டி தொட்டி எங்கும் ஒலிக்கும். சிவாஜி,எம்.ஜி.ஆர் என்ற அந்தஸ்து பார்க்காமல் தனது திறமையை வெளிப்படுத்தியவர் கண்ணதாசன்.

“பாகப்பிரிவினை” படத்துக்குத் தாலாட்டுப் பாடல் வேண்டும் என பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திடம் பீம்சிங் கேட்டார். தாலாட்டுப் பாடல் எழுதுவதில் கண்ணதாசன் கில்லாடி அவரிடம் போகுமாறு பட்டுக்கோட்டை கூறினார். பட்டுக்கோட்டையின் மீது மிகுந்த பற்று வைத்திருந்த கண்ணதாசன் தன்னிடம் வந்த சிலரை பட்டுக்கோட்டைக்கு அனுப்பினார். ஒரு படத்தின் அனைத்துப் பாடல்களையும் நான் தான் எழுதுவேன் என அவர்கள் அடம்பிடிக்கவில்லை.

சிவாஜிக்கும் கண்ணதாசனுக்கும் கருத்து மோதல் ஏற்பட்டதால் சிவாஜியின் படங்களுக்கு கண்ணதாசன் பாட்டு எழுதுவதில்லை. சுமார் இரண்டு வருடங்களாக நடக்காத ஒரு சம்பவம் இப்போது நடைபெற வேண்டும் என பீம்சிங் நினைத்தார். சிவாஜியின் படத்துக்கு கண்ணதாசன் பாட்டு எழுதாததற்கும், சிவாஜியின் வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவத்துக்கும் பீம்சிங்கும் ஒரு காரணம். அதற்கு பரிகாரம் செய்ய வேண்டும் என பீம்சிங் நினைத்தார். தனது இணைத் தயாரிப்பாளரான ஜி.என்.வேலுமணியிடம் இந்தப் பிரச்சினையைக் கூறினார். இது ஒரு சின்ன விஷயம் கண்ணதாசனிடம் இருந்து பாட்டை வாங்கலாம் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கண்ணதாசனின் வீட்டுக்குச் சென்ற ஜி.என். வேலுமணி , தனது படத்துக்குப் பாட்டு எழுத வேண்டும் என்றார். வேலுமணியும்,பீம்சிங்கும் இணைந்து தயாரிக்கும் படத்தின் கதாநாயகன் சிவாஜி என்பது கண்ணதாசனுக்குத் தெரியும். அதனால்,

“சிவாஜி படத்துக்கு பாட்டெழுத என்னைக் கூப்பிடுறியா?” எனக் கோபத்துடன் கேட்டார். சிவாஜிக்கும், கண்ணதாசனுக்கும் பிரச்சினை என்பதால் சுமார் இரண்டு வருடங்களாக சிவாஜி நடிக்கும் படத்துக்கு கண்ணதாசன் பாட்டு எழுதவில்லை. வேலுமணி நீண்ட நேரம் வேண்டுகோள் விடுத்தும் கண்ணதாசன் இறங்கி வரவில்லை. அப்போது கண்ணதாசனின் உதவியாளராக பஞ்சு அருணாசலம் இருந்தார். நீ என்ன செய்வியோ ஏது செய்வியோ தெரியாது சிவாஜி படத்துக்கு கவிஞர் பாட்டு எழுத வேண்டும் என பஞ்சு அருணாசலத்திடம் சொல்லிவிட்டுப் போனார்.



1956 ஆம் ஆண்டு தமிழ்நாட்டைத் தாக்கிய கடும் புயலில் இயல்பு வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு தடுமாறிக் கொண்டிருந்த தமிழக மக்களுக்கு உதவுவதற்காக எல்லோரும் புயல் நிவாரணத்திற்கு நிதி வசூல் செய்து தாருங்கள் என்று அண்ணா அறிக்கை விட்டார்.

அப்போது சிவாஜி கணேசன் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர் அறிஞர் அண்ணா மீது மிகுந்த பாசம் கொண்டவராக இருந்தார். ஆகவே அண்ணாவின் அறிக்கையைக் கட்டளையாக ஏற்றுக் கொண்டு விருதுநகர் வீதிகளிலே அலைந்து ‘பராசக்தி’ பட வசனங்களை எல்லாம் பேசி நிதி சேர்த்தார். பின்னர் அந்தத் தொகையை அறிஞர் அண்ணாவிடம் சேர்க்கச் சொல்லி அனுப்பிவிட்டு சேலத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்த படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக சிவாஜி சேலத்திற்கு போய்விட்டார்.

அவர் அங்கே படப்பிடிப்பில் இருந்தபோது புயல் நிவாரண நிதிக்கு அதிகமாக நிதி வசூலித்துத் தந்தவர்களுக்குச் சென்னையில் ஒரு பாராட்டு விழாவை அறிஞர் அண்ணா நடத்த இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது.

உண்மையில் அந்த புயல் நிவாரண நிதிக்கு அதிகமாக நிதி சேர்த்துத் தந்தவர் சிவாஜிதான் என்பதால் அந்த விழாவிலே கலந்து கொள்ள நிச்சயம் தனக்கு அழைப்பு வரும் என்று எதிர்பார்த்து சேலத்தில் இருந்து சென்னைக்குத் திரும்பினார் சிவாஜி. ஆனால் விழா நாள் அன்று காலைவரை அவருக்கு அழைப்பு வரவில்லை.

மாலை ஆறு மணிக்கு பாராட்டுக் கூட்டம் நடந்தது. அப்போதுதான் முதன்முதலில் எம்.ஜி. ஆரைக் கூட்டிச் சென்று அந்த கூட்டத்திலே மேடையேற்றி கௌரவித்தார்கள். அதிகமாக நிதி வசூலித்தவன் நான். ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களை அந்த கூட்டத்திலே மேடை ஏற்றிப் பாராட்டுகிறார்கள்.

“எங்கே கணேசன் வரவில்லையா?” என்று அண்ணா கேட்டபோது “இல்லை. வர முடியவில்லை என்று சொல்லி விட்டார்” என்று அண்ணாவிடம் சிலர் சொல்லியிருக்கிறார்கள். அப்போது அண்ணாவைச் சுற்றியிருந்த சிலர் அண்ணாவிடமிருந்து சிவாஜியைப் பிரிப்பதற்காகச் செய்த அரசியலால் வெற்றி பெற்றது. அன்று நடந்த அந்தச் சம்பவம் சிவாஜியை பெரிதும் பாதித்தது. நான் எல்லா அவமதிப்பையும் பொறுத்துக் கொண்டு பொறுமையாக இருக்க முயன்றார், முடியவில்லை. அந்த நிகழ்ச்சியால் பைத்தியம் பிடித்தவன் போல் ஆகிவிட்டார். ஏனென்றால் சின்னப் பிள்ளையிலிருந்து அந்த இயக்கத்திலே ஒட்டிக் கொண்டிருந்தவர் சிவாஜி.



என்னைத் தூக்கிப் போட்டுவிட்டு அண்ணன் எம்.ஜி.ஆரைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அன்று நடந்த அந்த சம்பவத்துக்கு அண்ணன் எம்.ஜி.ஆர். காரணமில்லை.” என்று சுயசரிதை நூலில் மன வேதனையை விரிவாகப் பகிர்ந்து கொண்டுள்ளார் சிவாஜி.

அந்தச்சம்பவத்தைத் தொடர்ந்து பத்து நாட்களுக்கு மேலாக பைத்தியம் பிடித்தவர் போல சிவாஜி உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்த இயக்குநர் ஏ.பீம்சிங், அவரை திருப்பதிக்கு வரும்படி அழைத்தார். சிவாஜி மறுத்தபோதும் விடாது வற்புறுத்திக் கூட்டிச் சென்றார் பீம்சிங். திருப்பதிப் பயணம் தன் வாழ்க்கையில் திருப்பு முனையை ஏற்படுத்தும் என விவாஜி எதிர்பார்க்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்துடனான தொடர்பை திருப்பதிப் பயணம் துண்டித்து விட்டது.

திருப்பதி கோவில் வாசலில் சிவாஜியைப் பார்த்த ஒரு பத்திரிகை நிருபர் தனது பத்திரிகைக்கு அந்தச் செய்தியைத் தெரிவிக்க சிவாஜி திருப்பதியிலிருந்து சென்னைக்குத் திரும்பியபோது “நாத்திக கணேசன் ஆத்திகனாக மாறினார்” என்று பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக சிவாஜி திருப்பதி சென்றதைப் பற்றி செய்தி வெளியிட்டிருந்தன. திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் சிவாஜிக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

அப்போது சிவாஜிக்கும், கவிஞர் கண்ணதாசனுக்கும் இடையே எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்ற போதிலும் சிவாஜி திருப்பதிக்கு சென்றதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தன்னுடைய “தென்றல்” பத்திரிகையில் சிவாஜியைத் தாக்கி எழுதினார். கண்ணதாசன்.

சிவாஜி படுகுழியில் புதைந்திருப்பதைப் போன்ற ‘தெனாலிராமன்’ படத்தின் புகைப்படத்தைப் பத்திரிகையிலே வெளியிட்டு அதற்குப் பக்கத்திலே “கணேசா இதுதான் உன்னுடைய எதிர்காலமா?” என்று அவர் கேள்வி எழுப்பியிருந்தார். அதைப் பார்த்த சிவாஜி அளவில்லாத ஆத்திரம் அடைந்தார்.

வாகினி ஸ்ருடியோவுக்கு கண்ணதாசன் சென்ற போது, ஆத்திரத்தோடு தன்னுடைய படப்பிடிப்பு தளத்திலிருந்த சிவாஜி வெளியே ஓடினார். சிவாஜியின் ஆத்திரத்தைக் கண்ட கண்ணதாசன் அவருடைய கையில் சிக்கினால் நிச்சயம் பிரச்சினைதான் என்ற பயத்தில் அருகில் என்.எஸ்.கிருஷ்ணன் நடித்துக் கொண்டிருந்த படப்பிடிப்பு தளத்திற்குள் ஓடிவிட்டார்.அங்கேயும் அவரை விடாமல் துரத்தினார் சிவாஜி. சிவாஜியை அமைதிப்படுத்திய என்.எஸ்.கிருஷ்ணன் கைகலப்பைத் தவிர்த்தார்.

சிவாஜிக்கும், கண்ணதாசனுக்கும் இடையே நடந்தது வெறும் வாக்குவாதம்தான் என்ற போதிலும் மறுநாள் எல்லா பத்திரிகைகளிலும் சிவாஜி, கண்ணதாசன் ஆகிய இருவரும் செருப்பால் அடித்துக் கொண்டு சண்டை போட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன. சிவாஜியை மிகவும் கடுமையாகத் தாக்கி கண்ணதாசன் விமர்சித்திருந்த போதிலும் தன்னுடைய படங்களுக்குப் பாட்டெழுத கண்ணதாசனை பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று சிவாஜி தன்னுடைய தயாரிப்பாளர்கள் எவரிடமும் கூறவில்லை. ஆனாலும் அவர்கள் இருவருக்கும் கடுமையான மோதல் நடந்ததாகப் பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பார்த்த சிவாஜி படத் தயாரிப்பாளர்கள் கண்ணதாசனை தங்களது படங்களில் தவிர்க்கத் தொடங்கினார்கள். 1957 ஆம் ஆண்டிலும் 1958 ஆம் ஆண்டிலும் சிவாஜி நடித்த படங்களில் ‘அம்பிகாபதி’ படம் தவிர சிவாஜி நடித்த வேறு எந்தப் படத்திலும் கண்ணதாசனின் பாடல்கள் இடம் பெறவில்லை.

வேலுமணி போனதும் கண்ணதாசனிடம் இது பற்றி தயங்கித் தயங்கி பஞ்சு அருணாசலம் கதைத்தார். பலவருடப்பகை உடனடியாகத் தீர்க்க முடியாது என்ற அவநம்பிக்கையுடன் பஞ்சு அருணாசலம் கதைக்கத் தொடங்கினார். “ சிவாஜி படத்துக்கு பாட்டெழுத நாம தேடிப்போகலை. அவங்கதான் நம்மைத் தேடி வந்தாங்க. பாட்டெழுதுவதில் தப்பில்லை” என பஞ்சு அருணாசலம் சொன்னார்.

“ சிவாஜியைக் கேட்டுட்டு வந்தாங்களா இல்லையான்னு தெரியாது. நாம பாட்டைக் குடுக்க. சிவாஜி வேணாண்ணா யாருக்கு அவமானம். “ என கண்ணதாசன் திருப்பிக் கேட்டார்.

“ உங்களுக்கும், சிவாஜிக்கும் உள்ள பிரச்சினை தமிழகம் பூரா தெரியும். கேக்க வந்திருக்க மாட்டாங்க” என பஞ்சு அருணாசலம் பதிலளித்தார்.

பஞ்சு அருணாசலத்தின் நச்சரிப்பினால் சிவாஜியின் படத்துக்குப் பாட்டெழுத அரை மனதுடன் கண்ணதாசன் சம்மதித்தார். முதல் பாடல் “ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ?” தொடர்ந்து “தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ”, “தாளையாம் பூ முடித்து தடம் பாத்து நடை நடந்து” முத்தான மூன்று பாடல்களும் இன்றைக்கும் மனதை விட்டு அகலாதவை.

ஒரு நாள் இரவு மூன்று பாடல்களையும் எம்.எஸ்.விஸ்வநாதன் சிவாஜியின் வீட்டில் போட்டுக் காட்டினார். அவற்றைக் கேட்டுப் பரவசமான சிவாஜி உடனடியாக கண்ணதாசனைப் பார்க்க வேண்டும் என்றார்.

சிவாஜியின் வீட்டில் இருந்து கண்ணதாசனின் வீட்டுக்கு ஒரு கார் சென்றது. காரில் இருந்து இறங்கிய எம்.எஸ்.விஸ்வநாதன் கண்ணதாசனைப் பார்த்தார். “சிவாஜி உங்களைப் பார்க்க விரும்புகிறார். உடனடியாகப் புறப்படு” என விஸ்வநாதன் சொன்னதை கவிஞரால் நம்ப முடியவில்லை. அதிர்ச்சியும், ஆச்சரியமும் நீங்காத நிலையில் இருந்த கண்ணதாசன் காருக்குள் ஏறினார். பஞ்சு அருணாசலமும் கூடச் சென்றார். வாசலில் காத்திருந்த சிவாஜி ஆரக்கட்டித்தழுவி வரவேற்றார். அந்தக் கணத்தில் இருவர் மனதிலும் இருந்த பகை மறைந்தது. இரவு இரண்டு மணிவரை பல விஷயங்களை மனம் விட்டுப் பேசினார்கள். பீம்சிங்கினால் உருவான பிரளயம் பீம்சிங்கினாலே தீர்க்கப்பட்டது. ■

# முருகபூபதியின் புதிய நூல் வெளியீடு யாதுமாகி

## 28 பெண் ஆளுமைகள் பற்றிய பதிவு

அவுஸ்திரேலியாவில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வதியும் எழுத்தாளர் முருகபூபதி எழுதியிருக்கும் 28 பெண் ஆளுமைகள் பற்றிய பதிவுகளைக் கொண்ட புதிய நூல் யாதுமாகி.

இம்மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை மெய்நிகரில் வெளியாகிறது.

கலை, இலக்கியம், கல்வி, ஊடகம், நடனம், தன்னார்வத் தொண்டு, சீர்மியப்பணி, திரைப்படம், விடுதலைப் போராட்டம், முதலான பல்துறைகளில் ஈடுபட்ட பெண் ஆளுமைகள் குறித்த தனது மனப்பதிவுகளைக் கடந்த காலங்களில் எழுதி வந்திருக்கும் முருகபூபதி சிறுகதை, நாவல்,




சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம், கடித இலக்கியம், புனைவுசாரா பத்தி எழுத்துகள், திறனாய்வு முதலான துறைகளில் இதுவரையில் 25 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருப்பவர்.

சிறு கதைக்காகவும் நாவலுக்காகவும் இலங்கையில் தேசிய சாகித்திய விருதுகளை இருமுறை பெற்றிருக்கும் முருகபூபதி, அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இலங்கை மாணவர் கல்வி நிதியம் முதலான அமைப்புகளினதும் ஸ்தாபக உறுப்பினருமாவார்.

இந்த அமைப்புகளில் நீண்டகாலமாக அங்கம் வகித்தவாறு ஊடகங்களில் தொடர்ந்து எழுதிவரும் முருகபூபதி அனைத்துலக பெண்கள் மாதத்தை முன்னிட்டு எழுதி, முதலில் மின்னூலாக வெளியிடவிருக்கும் யாதுமாகி நூலில் பின்வரும் பெண் ஆளுமைகள் இடம்பெற்றுள்ளனர்.

ராஜம் கிருஷ்ணன் (1925 - 2014 ),

அருண் விஜயராணி (1954 - 2015)

கமலினி செல்வராசன் (1954 - 2015),

மனோரமா ஆச்சி (1937 - 2015)

'குறமகள்' வள்ளி நாயகி இராமலிங்கம் (1933 - 2016),

கெக்கிராவ ஸஹானா ( 1968 - 2018) ,

தங்கேஸ்வரி (1952 - 2019) , தமிழ்ப்பிரியா ( 1952 - 2020), பத்மா சோமகாந்தன் ( 1934 - 2020), கமலா தம்பிராஜா ( 1944 - 2018), பாலம்லக்ஷ்மணன், ஞானம் இரத்தினம், சகுந்தலா கணநாதன், அன்னலட்சுமி இராஜதுரை, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி, சித்திரலேகா மௌனகுரு, கார்த்திகா கணேசர், 'குந்தவை' சடாட்சரதேவி, "ஆழியாள்" மதுபாஷினி, தேவா ஹெரால்ட் சந்திரிகா சுப்பிரமணியன், ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா, "தமிழச்சி" சுமதி தங்கபாண்டியன், தமிழ்க்கவி , புஸ்பராணி, வெற்றிச்செல்வி.

இவர்களில் முதல் பத்துப் பேரும் மறைந்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தகுந்தது.




கலை, இலக்கிய ஆர்வலர் கலாநிதி கலையரசி சின்னையா நியூஸ்லாந்திலிருந்து யாதுமாகி நூல் வெளியீட்டு மெய்நிகர் அரங்கிற்குத் தலைமை தாங்குகிறார்.

நூல் பற்றிய தங்கள் வாசிப்பு அனுபவத்தை, அவுஸ்திரேலியா மெல்பனிலிருந்து திருமதி விஜி இராமச்சந்திரன், சிட்னியிலிருந்து திருமதி கனகா கணேஷ், கோல்ட் கோஸ்டிலிருந்து மருத்துவர் திருமதி வாசுகி சித்திரசேனன், தமிழ் நாட்டிலிருந்து முனைவர் வள்ளி ஸ்ரீ ஆகியோர் சமர்பிப்பர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு தாமோ பிரம்மேந்திரன் - கன்பரா தமிழ் அரங்கம். மெய்நிகர் அரங்கில் இணைந்திருப்பவர்களின் கருத்துப்பகிர்வையடுத்து நூலாசிரியர் முருகபூபதி ஏற்புரை நிகழ்த்துவார். அவுஸ்திரேலியா: இரவு 7.00 மணி- இலங்கை- இந்தியா: மதியம் 1:30 மணி, இங்கிலாந்து: காலை 8:00 மணி

Join Zoom Meeting https://us02web.zoom.us/j/89679356153?pwd=Kyt6MUtyOU8ralBoWk9IK1JX Q3F0Zz09

Meeting ID: 896 7935 6153

Passcode: 557776

■

# முன்தினம் பார்த்தேனே

எய்து கொண்டே இருக்கும் அம்புகள் இலக்கைத் தைக்ககாத போது தைத்த இடங்களை அதுதான் இலக்கென்று ஏமாற்றும் தந்தையைப் போலவே கிடைத்த தற்குள் சிலர் கனவு

Lakshmivva
@Lakshmivva1

சிதறல்கள்
@mujib989898

சில விசயங்களில் நஷ்டமடைந்தாலும் எதிர்ப்பைக் காட்டிட வேண்டும் ஏற்றுக் கொண்டால் இதைவிட பெரிய துன்பத்தை சுமக்க வேண்டி வரும்.




இரும்பு மனம் படைத்த மனிதனிடம் இளகிய மனமும் உண்டென உணர்த்த தவறுவதில்லை இயற்கை..

🔥சுடர்விழி💕
@sudar__offi

அன்பில் திளைப்பது என்பதெல்லாம் வெயில் நேர மழை யில் எழும் மண் வாசனை மயக்கத் துக்கும் புத்துணர்வுக் கும் சமம்.



வெற்றியாளர்கள் அசாதாரணமாக மாற முயற்சிப்பதில்லை.. மாறாக.. அசாதாரணமான காரியங்களை செய்ய அவர்கள் முயற்சிக்கிறார்கள்..!

Sasikaran Yo


Muhunthan Balachandiran

வயது வந்தவர்கள் என்போர் உருமாறி சிதைந்து போன சிறுவர்களே...

இப்படி எல்லாம் இருந்தா புடிக்கும்கிறது ஆசை... எப்படி இருந்தாலும் புடிக்கிறது தான் காதல்...

Ilaya Raja

Darien Daries




நிறைய நாள் கனவு ஒரு முழு நீளத் திரைபடம் ஒன்னு எடுக்கனும் அதை பெரிய திரையில போடனும் எண்டு உங்கள நம்பி நாங்க களத்தில் இறங்குறோம்.

# சிறுநீரகப் பாதிப்பிலிருந்து பாதுகாப்பு பெற

பைஷல் இஸ்மாயில்

கீழ் முதுகில் வலி, உடல் வலி, அரிப்பு மற்றும் கால்களில் பிடிப்பு போன்றவை பொதுவாக சிறுநீரக நோய்களின் பிரதிபலிப்பு ஆகும். வளர்ச்சி குன்றுதல் மற்றும் உயரம் குறைவாக இருத்தல் மற்றும் கால் எலும்புகள் வளைந்து கொடுத்தல் இவை எல்லாம் சிறுநீரக நோய்கள் குழந்தைகளைத் தாக்கும் பொழுது வரக்கூடிய அறிகுறிகள்.

நம் உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி, உடலின் ஆரோக்கியத்தைக் காக்க பல வகைகளில் துணைபுரிவது நம் சிறுநீரகம்தான். இதில் அதிர்ச்சி தரக்கூடிய ஒரு செய்தி என்னவென்றால், பலர் தங்களுக்கு சிறுநீரகம் பாதிப்பு அடைந்துள்ளது என்பதையே அறியாமல் இருக்கிறார்கள்.



நோய் முதிர்ச்சியடையும் நிலையில் தான் அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். இதை, வளரவிடக் கூடாது. அப்படி வளர்ந்தால் டயாலிசிஸ், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை எனப் பல பெரிய சிகிச்சைகளைச் செய்ய வேண்டிவரும். நம் உடலில் ஒரு பிரச்சினை என்றால் அது திடீரென்று உருவாகுவதில்லை.

ஒரு நாள் நீங்கள் தூங்காமலிருந்தால் அடுத்த நாள் சுறுசுறுப்பாக உங்களால் வேலை செய்ய இயலாது. அதுபோல அன்றாடம் நீங்கள் செய்யும் வேலைகளில் கவனம் செலுத்த முடியவில்லை என்றாலோ, வலி, அரிப்பு, மன உளைச்சல் ஏற்பட்டாலோ உடனடியாக உங்கள் உடல் அனுப்பும் தகவல்களைக் கவனியுங்கள். ஏனெனில் உடல் உறுப்புகளில் சிறிய பாதிப்பு வந்தாலும் அந்தச் செய்தியை உடல் உங்களுக்கு அனுப்பிவிடும்.

**1. சிறுநீரக நோய் பற்றி குறிப்பிட முடியுமா?**

நாள்பட்ட சிறுநீரக நோய் (சி.கே.டி) சிறுநீரகத்தின் செயற்பாட்டைப் படிப்படியாகக் குறைக்கும். இந்த நோயின் வளர்ச்சியினால் சிறுநீரகங்கள் சாதாரணமாகச் செய்யும் இரத்த சுத்திகரிப்பு படிப்படியாகக் குறைக்கப்படும். நாள்பட்ட சிறுநீரக நோயின் வளர்ச்சிக்கான இரண்டு பொதுவான காரணங்கள் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தமாகும்.

**2. இதன் அறிகுறிகள் என்ன?**

சிறுநீரக நோயின் ஆரம்ப கட்டங்களில், இது பொதுவாக எந்த குறிப்பிடத்தக்க அறிகுறிகளையும் காட்டாது. வழக்கமான இரத்தப் பரிசோதனைகள், இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகள் மூலம் கண்டறிய முடியும். இருப்பினும், சிகிச்சையின் போது சிறுநீரக செயற்பாடு மோசமடைந்தால் அல்லது சிறுநீரக நோயை முன்கூட்டியே கண்டறியவில்லை என்றால், தொடர்ந்து சிறுநீர் பிரியாமை மற்றும் கணுக்கால் வீக்கம், சிறுநீரில் இரத்தம் மற்றும் அதிகரித்த தசைநார் காரணமாக மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகளை அனுபவிக்கலாம்.



**3. இந்நோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள் என்ன?**

மருந்துகளுடன் தொடர்புடைய வாழ்க்கைமுறை மாற்றங்கள் சிறுநீரகக் கட்டுப்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது. சிறுநீரக செயற்பாடு மோசமடைந்தால், அது இறுதியில் சிறுநீரக செயலிழப்புக்கு வழி வகுக்கும்.

இதனால் சிறுநீரக சுத்திகரிப்பு அல்லது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படலாம்.

குறிப்பாக, 50 பேரில் ஒருவருக்கு நாள்பட்ட சிறுநீரக நோய் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுநீரக செயலிழப்பை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளித்தால் இந்த நோயிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.

**4. நாள்பட்ட சிறுநீரக நோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள் என்ன?**

பொதுவாக, சிறுநீரகத்தின் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க குறைபாடு ஏற்பட்டாலும் மனித உடல் வெற்றிகரமாகச் செயற்படும். CKD பொதுவாக ஆரம்ப கட்டங்களில் குறிப்பிடத்தக்க அறிகுறிகள் எதையும் காட்டாது. CKD இன் ஆரம்ப அறிகுறிகள் பொதுவாகத் தெளிவற்றவையாக இருக்கும்.


**5. நீங்கள் குறிப்பிட்ட அறிகுறிகள் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

பசியின்மை, குமட்டல், வறண்ட தோல் மற்றும் தோல் அரிப்பு, தலைவலி, உடல்நிலை சரியில்லாமல் இருப்பது போன்ற பொதுவான உணர்வு, சோர்வு, எதிர்பாராத அல்லது கட்டுப்பாடற்ற எடை இழப்பு. ஒரு வழக்கமான இரத்த அல்லது சிறுநீர் பரிசோதனை ஆரம்ப நிலையில் ஏதேனும் ஒரு பிரச்சினையை வெளிப்படுத்தினால் அல்லது ஆரம்ப நிலையிலேயே உரிய சிகிச்சை அளிக்கப்பட்டால், இந்த நோய் மேலும் தீவிரமடையாமல் தடுக்கலாம்.

**6. தாமதமாகத் தொடங்கும் அறிகுறிகள் என்ன?**

சிறுநீரக நோய் ஆரம்பத்திலேயே கண்டறியப்படாமலோ அல்லது சிகிச்சை அளிக்கப்படாமலோ இருந்தால், சிறுநீரகநோய் தீவிரமடைந்து பின்வரும் அறிகுறிகளை உருவாக்கலாம். அதாவது, இரத்தத்தில் உள்ள கல்சியம் மற்றும் பொஸ்பரஸ் அளவுகளில் ஏற்றத்தாழ்வு மற்றும் அதனால் ஏற்படும் எலும்பு வலியால் சிறுநீரக பாதிப்பு ஏற்படுகிறது. கைகள், கால்கள் மற்றும் கணுக்கால்களில் உணர்வின்மை அல்லது வீக்கம். உடலில் கழிவுப் பொருட்கள் தேங்குவதால் அமோனியா வாசனை அல்லது மீன்கழிவுகள் போன்ற துர்நாற்றம், பசியின்மை மற்றும் எடை இழப்பு, வாந்தி, அடிக்கடி விக்கல் வரும், அடிக்கடி சிறுநீர் கழித்தல் (குறிப்பாக இரவில்), மூச்சுத்திணறல், சோர்வு, சிறுநீர் அல்லது மலத்தில் இரத்தம், சிந்தனை அல்லது கவனம் செலுத்துவதில் சிரமம், தசைப்பிடிப்பு / முதுகுவலி, எளிதான சிராய்ப்பு, அடிக்கடி தண்ணீர் குடித்தல், மாதவிடாய் இல்லாதது (அமினோரியா), தூக்கமின்மை, தோல் வெளிர் அல்லது கறுப்பு நிறமாக மாறும், பாலியல் செயலிழப்பு. CKD இன் கடைசி நிலை சிறுநீரக செயலிழப்பு போன்ற அறிகுறிகள் காணப்படும்.

இறுதிக்கட்டமாக இதற்கு டயாலிசிஸ் அல்லது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படலாம். நாள்பட்ட சிறுநீரக நோயைக் குணப்படுத்த முடியாது, சிகிச்சை மூலம்




**7. அதன் மோசமான நிலையைத் தடுக்கலாமா? இதுபற்றி நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் அல்லது அதிக கொழுப்பு போன்ற பிற நோய்களைக் கட்டுப்படுத்த மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன. நீரிழிவு நோயாளிகள் ஆரோக்கியமான மற்றும் சீரான உணவை உண்ண வேண்டும், உடற்பயிற்சி மற்றும் வழக்கமான இரத்த பரிசோதனைகள் மூலம் அவர்களின் இரத்த சர்க்கரை அளவை கண்காணிக்க வேண்டும். உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த வைத்தியர் மருந்துகளைப் பரிந்துரைக்கலாம்.

இரத்த அழுத்தம் 140/90 மி.மீ இற்குக் கீழ் பராமரிக்கப்பட வேண்டும். cholestrol அளவைக் குறைக்க மருந்துகள் பரிந்துரைக்கப்படலாம்.

நாள்பட்ட சிறுநீரக நோய் இரத்தச் சோகைக்குக் காரணம் என்பதால், இரும்புச் சத்துக்கள் பரிந்துரைக்கப்படலாம். புகைபிடிப்பதை நிறுத்த வேண்டும்.

மேலும், சீரான மற்றும் ஆரோக்கியமான உணவை உண்ணவேண்டும். தினமும் உப்பின் அளவை 6 கிராமாகக் குறைக்க வேண்டும். தினமும் குறைந்தது 30 நிமிடங்களும் வாரத்தில் ஐந்து நாட்களும் உடற்பயிற்சி செய்யுங்கள். மதுபானம் அருந்துவது நல்லதல்ல. உடல் எடையை குறைத்து உங்கள் உயரத்திற்கும் வயதுக்கும் ஏற்ற ஆரோக்கியமான எடையை பராமரிக்கவும். சுய மருந்து வேண்டாம். போதுமான அளவு நீர் அருந்துதல், புரத உணவு அளவுடன் உட்கொள்ளுதல், குறைந்த சோடியம் உணவுகளை உண்ணுங்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

ஒரு நாளைக்குக் குறைந்தது 30 நிமிடங்கள் தவறாமல் உடற்பயிற்சி செய்யுங்கள். நீச்சல் மற்றும் விறுவிறுப்பான நடைப்பயிற்சி உடலில் சுறுசுறுப்பை ஏற்படுத்தும். இருப்பினும், நீங்கள் உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இல்லாவிட்டால், உங்கள் உடல்நலப் பாதுகாப்புக் குழுவிலிருந்து உங்களுக்கு எந்தப் பயிற்சிகள் சரியானவை என்பதைக் கண்டறியவும்.

ஆரோக்கியமான உணவுகளைத் தேர்ந்தெடுக்கவும். சீனி கலந்த பானங்களைத் தவிர்க்கவும். குறைந்த கலோரி உணவுகளைத் தேர்ந்தெடுத்து உப்பு மற்றும் சர்க்கரை உணவுகளைத் தவிர்க்கவும். ஆரோக்கியமான உடல் எடையுடன் இருப்பது அவசியம். உடல் பருமன் சிறுநீரகங்களுக்குப் பணிச்சுமையை அதிகரிக்கிறது. உங்கள் உடல் எடையை பராமரிக்க பயிற்சி பெற்ற நிபுணர் மற்றும் உணவியல் நிபுணரின் உதவியை நாடலாம்.

ஒவ்வொரு இரவும் 7 முதல் 8 மணி நேரம் தூக்கம் அவசியம். போதுமான தூக்கம் உங்கள் உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது மற்றும் உங்கள் இரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் சுகரின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.

புகைபிடிப்பதைத் தவிர்ப்பது சிறுநீரகப் பாதிப்பு மற்றும் உயர் இரத்த அழுத்தத்தைத் தடுக்க உதவுகின்றது. நீடித்த மன அழுத்தம் பல நோய்களை ஏற்படுத்தும்.

ஆழ்ந்த இசையைக் கேட்பது, அமைதியான விடயங்கள் அல்லது செயற்பாடுகளில் கவனம் செலுத்துவது அல்லது தியானம் செய்வதன் மூலம் மன அழுத்தத்தைச் சமாளிக்க முடியும். வலிமருந்து மற்றும் ஆண்டிபயோடிக் அதிகமாகப் பயன்படுத்துவதை தவிர்க்கவும். சிறுநீர் பகுப்பாய்வில் சிறிய அசாதாரணங்களைக் கூட புறக்கணிக்காதீர்கள். மருத்துவ ஆலோசனையின்றி எந்த மருந்துகளையும் அல்லது அங்கீகரிக்கப்படாத ஊட்டச்சத்து மருந்துகளையும் பயன்படுத்த வேண்டாம். எளிய வாழ்க்கைமுறை மூலம் உங்கள் சிறுநீரகங்களைப் பாதுகாக்க முடியும். மருத்துவ ஆலோசனையின்படி வாழ்ந்தால் ஆரோக்கியமாக வாழ முடியும்.

# நம்ம அல்பம் 05

மதுமிதா

இளம் நெஞ்சங்களில் ஆழமாகப் பதிந்து விட்டது "தமிழ் பெண்" பாடல். அம்மா அனுப்பிய படங்களில் தனக்குப் பிடித்த வளைத் தேடும் வாலிபனின் எண்ண ஓட்டம் அற்புதமாகப் படமாக்கப்பட்டுள்ளது. கவிச்சக்கரவர்த்தி கம்பனின் வழியில் "ஐயோ" என அழகை வர்ணித்து ஆரம்பமாகும் பாடல் முழுவதும் தமிழ் வாசம் வீசுகிறது. "ஐயோ அழகிய புருவம். அவள் மேல் பலருக்கு கருவம்" என ஆரம்பமாகும் பாடலில் தமிழ் துள்ளி விளையாடுகிறது.

ஆர்ப்பாட்டம் இல்லாத மெதுவான மனதைக் கவரும் இசை, பாடலுடன் பயணம் செய்ய உதவுகிறது. பாடல், இசை இரண்டையும்




இணைக்கும் குரல் மனதில் ரீங்காரமிடுகிறது.

இளம் பெண் என்ன செய்வாள் என்பதை படமாக்கிய விதம் நன்றாக இருக்கிறது. சிறுவர்களுடன் ஓடிப் பிடித்து விளையாடுவது, ஊஞ்சல் ஆடுவது, சைக்கிள் ஓடுவது என அனைத்தும் கண் முன்னே நிழலாடுகிறது.

அனைவரும் இயல்பாக நடித்துள்ளனர் அமைதியான அபிநயம். ஒலிப்பதிவு, ஒளிப் பதிவு அனைத்தும் தரமாக உள்ளன.

திருமண வயதை அடைந்த தனது மகனுக்குப் பெண்பார்த்த தாய் பல படங்களை அவனுக்கு அனுப்பி வைக்கிறார். அவன் ஒரு ஓவியன் தனக்கு மனைவியாக வருபவள் எப்படி இருக்க வேண்டும் என்ற கற்பனை மனதில் உள்ளது. மனதில் குடி இருக்கும் பெண்ணை ஓவியமாக அவளின் சிரிப்பு, பேச்சு, நடை, உடை, பாவனை எல்லாவற்றையும் வண்ணத்தில் குழைத்து ஓவியமாக்கினான். ஓவியத்தைப் பார்த்து ரசித்தவனுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. தாய் அனுப்பி வைத்த படங்களில் ஒருத்தி அவனது கனவு நாயகி. அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

தமிழ்ப் பெண் பாடல் குழுவினர். இயக்குநர் பா.ஹம்சத்வணன்
இசைக் குரல் - வெற்றி சிந்துஜன்
பாடல் வரிகள் - பொலிகை குமரன்
வீணை- வாகீசன் சிவநாதன்
புல்லாங்குழல்- தினஞ்சனா மதுஷங்க
நடிகர்கள்-பிகே.லிவாஷ் ,தமிழ்நிலா
ஒளிப்பதிவாளர் - ஏ.கே. கமலதாசன்

இப்பாடலைக் காண்பதற்கு என்ற https://youtu.be/Rb-OIHgMSp4 இணைப்பினூடாகச் சென்று பார்வையிடலாம்.




# இலங்கையில் உருவான...






(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

நாடுகள் பல பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்ட நிலையில், சுற்றுலாத்துறையை கணிசமாக நம்பி இருக்கும் இலங்கை படுமோசமான வீழ்ச்சியைச் சந்தித்தது. அதிலும் டொலருக்கு நிகரான இலங்கையின் ரூபாயின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து கொண்டே சென்றது.

கடந்த வருடம் 190 ஐ தாண்டிய இலங்கை ரூபாய் மதிப்பு இப்போது 260 ரூபாவைத் தாண்டி சென்று கொண்டு இருக்கிறது. ரிசர்வ் அந்நாட்டு மத்திய வங்கி இதை சரிப்படுத்த பல்வேறு திட்டங்களை அறிவித்தும் எதுவும் உதவிகரமாக அமையவில்லை. வரலாற்றில் கடந்த 75 வருடங்களில் இல்லாத நிலைக்குப் பொருளாதாரம் நலிவடைந்துள்ளது. இதனால் ஒரே வாரத்தில் இரண்டு முறை சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை உதவி கேட்டு கையேந்தும் நிலைக்குச் சென்று விட்டது. ரஷ்யப் போர் காரணமாக இன்னொரு பக்கம் பெற்றோல், டீசல் விலை உச்சத்தைத் தொட்டுள்ளது.

மின்சாரத்தடை மக்களை வருத்துகிறது. பொருட்களின் விலை உயர்வு ஒன்றும் புதியதல்ல. முன்பு 5 ரூபா, 10 ரூபா வரையில் பொருட்களின் விலை உயரும். இன்று 50 ரூபா, 7 ரூபா, 100 ரூபா உயர்ந்தால் பண வசதி உள்ளவர்களால் கூட சமாளிக்க முடியாதுள்ளது.

விலைவாசி உயர்வு காரணமாகவும் வேலைவாய்ப்பு இன்மையாலும் தலைநகர் கொழும்பில் மக்கள் கடுமையான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இலங்கையின் ஜனாதிபதி கோட்டபாய , பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரையும் அவர்களின் குடும்பங்களை எதிர்த்தும் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

1958 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்திலும் பௌத்தமும், சிங்களமுமே முன்னிறுத்தப்பட்டன. தமிழ் இளைஞர்கள் உரிமைக்குரல் எழுப்பி ஆயுதப் போராட்டம் செய்தபோது இனவாதப் பிரசாரங்கள் உச்சம் பெற்றன.

நாட்டை முன்னேற்றுவது, பொருளாதார அபிவிருத்தி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு போன்ற எவற்றுக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இன வாதம் பேசினால் ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற உணர்வு அப்போது மேலோங்கியது.

மக்களும் பொருளாதாரத் திட்டங்களைப் பற்றி யோசிக்காமல் இன வாதத்திற்கு வாக்களித்ததன் விளைவு இன்று வீதியில் இறங்கிப் போராடும் நிலையை உருவாக்கியுள்ளது. ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோஷமிடுகின்றன. ஆட்சி மாறினாலும் இதே நிலைதான் தொடரும். உடனடியாக மாற்றம் ஏற்பட வாய்ப்பு இல்லை.



# கமரூன் வீரர்களின் பெயர் அறிவிப்பு

கமரூன் தேசிய கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளர் ரிகோபர்ட் சாங், அல்ஜீரியாவுக்கு எதிரான பீபா 22 உலகக் கிண்ணப்பிளே ஆஃப் போட்டிக்கான தனது இறுதி 27 பேர் கொண்ட அணியை புதன் கிழமை அறிவித்தார்.

அஜாக்ஸ் கோல்கீப்பர் ஆண்ட்ரே ஓனானா, நேபோலி மிட்ஃபீல்டர் ஆண்ட்ரே-ஃபிராங்க் ஜாம்போ அங்குசா மற்றும் பேயர்ன் முனிச் முன்கள வீரர் எரிக் மாக்சிம் சௌபோ-மோடிங் ஆகியோர் அடங்கிய அணிக்கு வின்சென்ட் அபூபக்கர் கப்டனாக இருப்பார்.

பட்டியலில் மூன்று கோல்கீப்பர்கள் உள்ளனர். ஆனால், 2017 ஆபிரிக்க சம்பியனான போது விளையாடிய கீப்பர் ஃபேப்ரைஸ் ஒன்டோவாவுக்கு இடம் இல்லை.

ஃபார்வர்ட்ஸ் கிளின்டன் என் ஜி, கிறிஸ்டியன் பாஸ்ஸோகோக், ஜெரோம் ஒங்குனே ஆகியோரும் சாங்கால் கைவிடப்பட்ட வீரர்களில் அடங்குவர்.



கமரூன் அல்ஜீரியாவை மார்ச் 25 ஆம் திகதி ஜபோமா ஸ்டேடியத்தில் சந்திக்கிறது.

சொந்த மண்ணில் 2021 ஆபிரிக்க கிண்ண நேஷனலில் மூன்றாவது இடத்தைப் பிடித்த பிறகு, கடந்த மாதம் அன்டோனியோ கான்சிகாவோவை தேசிய அணியின் தலைமையில் சாங் மாற்றினார். ■

# பிரெஞ்சு ஓபனில்-ரஷ்ய வீரர்கள் விளையாடுவார்கள்?

கொரோனா வைரஸ் நிலைமை சீராக இருக்கும் வரை, நோவக் ஜோகோவிச் கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசி போடாவிட்டாலும் பிரெஞ்சு ஓபனில் விளையாட அனுமதிக்கப்படுவார் என்று அமைப்பாளர்கள் புதன் கிழமை தெரிவித்தனர். ரஷ்ய டென்னிஸ் வீரர்களான டானில் மெட்வெடேவ் உள்ளிட்ட ரஷ்ய டென்னிஸ் வீரர்களும் போட்டியில் விளையாட அனுமதிக்கப்படுவார்கள். ஆனால், அண்டைய நாடான உக்ரைனில் தங்கள் நாடு தொடங்கிய போரின் காரணமாக நடுநிலை விளையாட்டு வீரர்களாக உள்ளனர்.



ஜோகோவிச் இரண்டு முறை பிரெஞ்சு ஓபனை வென்றுள்ளார். மற்றும் மொத்தம் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களைப் பெற்றுள்ளார்.


பிரெஞ்சு டென்னிஸ் கூட்டமைப்பின் தலைவர் கில்லஸ் மோரெட்டன், ஜோகோவிச் இப்போது விளையாடுவதற்கு சுதந்திரமாக இருந்தாலும் மே 22 அன்று போட்டி தொடங்குவதற்கு முன்பு வைரஸ்நிலைமை மோசமடைந்தால், புதிய கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்த பிரெஞ்சு அதிகாரிகள் கட்டாயப் படுத்தப்படலாம் என்று கூறினார்.

உக்ரைனில் நடக்கும் போர் காரணமாக ரஷ்ய டென்னிஸ் வீரர்கள் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்களா என்ற கேள்விக்கு ரஷ்யா, பெலாரஸ் ஆகிய நாடுகளை இடைநீக்கம் செய்யும் முடிவுகளில் ஒட்டிக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக அமைப்பாளர்கள் தெரிவித்தனர் ஆனால், வீரர்களை நடுநிலை விளையாட்டு வீரர்களாக போட்டியிட அனுமதிக்கின்றனர்.

உலகெங்கிலும் விளையாட்டை நடத்தும் ஏழு குழுக்கள் போரைக் கண்டித்துள்ளன. ரஷ்யாவிலும் பெலாரஸிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுகள் இரத்துச் செய்யப்பட்டன கிங் கப், டேவிஸ் கப் அணி போட்டிகளிலிருந்து அந்த இருநாடுகளும் வெளியேற்றப்பட்டன. மேலும், அந்த நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் WTA, ATP, கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள் ஆனால், ரஷ்யா அல்லது பெலாரஸின் பெயர் அல்லது கொடியின் கீழ் விளையாட முடியாது. ■



# நோர்வே ஒலிம்பிக் கமிட்டி துணைத் தலைவர் இராஜினாமா



சர்வதேச விளையாட்டுகளில் ரஷ்ய மற்றும் பெலாரஷ்ய விளையாட்டு வீரர்கள் பங்கேற்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து நோர்வே ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் கமிட்டி மற்றும் கான்ஃபெடரேஷன் ஆஃப் ஸ்போர்ட்ஸ் NIF விளையாட்டு வாரியத்தில் இருந்து ஒரியண்டீயர் வாட்டர்ரால் இராஜினாமா செய்துள்ளார்.

உக்ரைன் மீதான "முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாத" படையெடுப்பைத் தொடர்ந்து இரு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையில் NIF மிகவும் குரல் கொடுத்தது. மேலும் ரஷ்யா மற்றும் பெலாரஸ் அதிகாரிகளைப் பதவிகளில் இருந்து இடைநீக்கம் செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

பெப்ரவரி 26 வெளியான அதன் அறிக்கையில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் (IOC) இரண்டு நாட்களுக்குப் பிறகு ரஷ்ய , பெலாரஷ்ய விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் இருந்து விலக்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தது.

எவ்வாறாயினும், NIF விளையாட்டு வாரியத்தில் தடைகள பிரதிநிதி துணைவராகப் பணியாற்றிய வாட்டர்ரால் அமைப்பின் நிலைப்பாட்டின் காரணமாகத் தனது பதவியை இராஜினாமா செய்ததாக நோர்வே ஒளிபரப்பாளர் NRK தெரிவித்தார். இருப்பினும் அவரது மீதமுள்ள பதவிக்காலம் வரை தடைகளக் குழுவில் தொடர்வார்.

கிராஸ்-கன்ட்ரி ஸ்கீயர், ஸ்கை ஓரியண்டீயர் வாட்டர்ரால் NIF தடைகளக் குழுவின் துணைத் தலைவராக உள்ளார். IOC உறுப்பினரான ஆஸ்ட்ரிட் உஹ்ரென்ஹோல்ட் ஜேக்கப்சன் தலைமையில் உள்ளது.

வாட்டர்ரால் தனது முடிவை உறுதிப்படுத்தும் மின்னஞ்சலில் தடைகள குழுவுடன் ஆலோசனை இல்லாததை மேற்கோள் காட்டினார்.

"ரஷ்ய மற்றும் பெலாரஷ்ய விளையாட்டு வீரர்களை தடை செய்வதற்கான NIF அழைப்பின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது மற்றும் முடிவின் போது UK [தடைகள FO] ஈடுபாடு இல்லாமை," என NRK தெரிவித்தது போல் வாட்டர்ரால் கூறினார்.

"இது எனது மதிப்புகள் மற்றும் விளையாட்டு என்னவாக இருக்க வேண்டும் என்ற கருத்துடன் கடுமையான முரண்பட்ட முடிவு.

எனவே, நான் திரும்பப் பெறுவதன் மூலம் இந்த முடிவை பிரதிநிதித்துவப்படுத்தவோ அல்லது அதனுடன் தொடர்பு கொள்ளவோ விரும்பவில்லை என்று முடிவு செய்துள்ளேன்." ■

# மகளிர் கரிபியன் பிரீமியர் லீக்

ஐ.பி.எல் தொடரை போல கடந்த சில வருடங்களாக கரிபியன் பிரீமியர் லீக் தொடரை நடத்தி வரும் மேற்கு இந்திய கிரிக்கெட் சபை இந்த வருடம் முதல் முறையாக மகளிர் கரிபியன் பிரீமியர் லீக் தொடரை நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது. இது முதல் முயற்சி என்பதால் இந்த வருடம் பார்படாஸ் ராயல்ஸ், த்ரிபங்கோ நைட் ரைடர்ஸ், கயானா அமேசான் வாரியர்ஸ் ஆகிய 3 அணிகள் மட்டும் பங்கேற்க உள்ளதாக அறிவித்துள்ளது. இந்த தொடர் வரும் ஒகஸ்ட் 30 முதல் செப்ரெம்பர் 30 வரை ஆடவர் கரிபியன் லீக் தொடர் நடைபெறும் போது அதனுடன் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஆடவர் ரி- 20 தொடருக்கு இணையாக மகளிர் தொடரும் நடத்தப்பட்டு வருகிறது. அதன் காரணமாகவே அந்த நாடுகள் அதிக மகளிர் உலகக் கிண்ணங்களை வென்று சாதனை படைத்துள்ளன.



பி.சி.சி.ஐ கடந்த 2018 - 2020 வரை 3 அணிகளை வைத்து மகளிர் ஐ.பி.எல் தொடரை நடத்திய போதிலும் அது மிகப்பெரிய வெற்றி அடையாத காரணத்தால் அப்படியே கிடப்பில் போட்டுவிட்டது. ■



# வாண்டுமாமா

## சிறுவர் பகுதி

# பொன் வண்டு



முன்னொரு காலத்தில் ஓர் ஏழை விவசாயியின் குடிசைக்கு அருகில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதில் பொன் வண்டு ஒன்று குடியிருந்தது. அது அவ் விவசாயி படும் துன்பத்தைத் தினமும் பார்த்துக் கொண்டிருந்தது. இந்தப் பொன் வண்டு தினமும் பூக்களைக் கொய்து கொண்டு ஆலமர அருகில் உள்ள இறைவனின் சிலைக்குப் பூசை செய்து வந்தது. ஒரு நாள் அதன் தூயமனதிற்கு அடிமையான இறைவன் அதனிடம் வந்தார். அவர் அதனை அழைத்து “உனக்கு என்ன வரம் வேண்டும்?” எனக் கேட்டார்.

இறைவனைப் பார்த்து வண்டு “இறைவா, எனக்கு அனைவருக்கும் இல்லை எனக் கூறாது வாரி வழங்கும் வள்ளல் வண்டாக மாறவேண்டும்” என்றது. இறைவனும் “ அப்படியே ஆகட்டும்” எனக் கூறிவிட்டு அங்கிருந்து மறைந்தார். மறுநாள் அந்த வண்டு வழமை போல் தன்வேலையைச் செய்தது. ஆனால், மூன்று நாட்களின் பின் அந்த வண்டு கஷ்ரப்படும் விவசாயிக்கு உதவ முன் வந்தது. வண்டு பேசுவதைப் பார்த்த விவசாயி பயந்து போனார். பின் வண்டு அவரைச் சாந்தப்படுத்தி அவரிடம் “ஒரு வரம் கேள்” என்றது.

அவரும் “எனக்கு கலப்பை வேண்டும்” என முதலில் கேட்டார். அந்த ஆசையை பொன் வண்டு நிறைவேற்றியது. பின் அந்தப் பேராசையற்ற விவசாயி இன்னொரு ஆசையாக புதுக்கலப்பைக்கு இரண்டு, புது மாடுகள் வேண்டும் என்றார். அதையும் நிறைவேற்றியது. சற்றுப் பேராசைப் பட்ட விவசாயி இந்த ஊரின் தலைவனாக வேண்டும் என்றார். அதையும் நிறைவேற்றியது பொன் வண்டு. இதனால் ஆணவம் தலைக்கேறிய விவசாயி “அரண்மனை வேண்டும் அதில் வேலைக்கும் காவலுக்கும் நூறுக்கும் மேற்பட்ட நபர்கள் வேண்டும்” என்றார். அதையும் நிறைவேற்றியது பொன் வண்டு. அந்த அரண்மனை அருகில் ஒரு குடிசை இருப்பதை விவசாயி கண்டார். அவரின் அரண்மனையை அந்தக் குடிசை அலங்கோலமாக்குவது போல் இருந்தது. கோபப்பட்ட விவசாயி தானும் குடிசையில் இருந்துதான் இன்று இப்படி ஆனேன் என்பதை மறந்தார். பொன் வண்டிடம் அந்தக் குடிசையை எரித்து விடு என்றார். அந்த ஆசையும் நிறைவேற்றப்பட்டது.

விவசாயியின் இறுதி வரத்தால் மனமுடைந்த வண்டு இறைவனிடம் சென்றது. வரம் கொடுக்கும் வரத்தை திரும்பப் பெறுமாறு கெஞ்சியது. இறைவன் அதற்கு “மனிதர்களே இப்படித்தான் பணம் இல்லாத போது ஒருவர் போன்றும் பணம் உள்ள போது இன்னொருவர் போன்றும் நடப்பார்கள்” எனக் கூறி வரத்தை மீள எடுத்தார். காலத்தினையும் மீள மாற்றினார். வண்டுக்கு வரம் வாங்கிய நாள் மீள வந்தது. “இறைவனிடம் வரம் எதுவும் வேண்டாம்” எனக் கூறிய வண்டு இறைவனை வணங்கிவிட்டு இன்பமாகப் பறந்தது.

**ச.சாகித்தியானந்**
**யா/ ஹாட்லிக் கல்லூரி**
**தரம்-08**


# பூமிக்கடியில் தீராத வெப்ப ஆற்றல்

பூமிக்கடியில் அள்ள அள்ளத் தீராதது பெட்ரோலியம், நிலக்கரி போன்றவை என்று நினைத்த காலம் போய்விட்டது. அவை புதுப்பிக்கத்தக்க எரிபொருட்கள் அல்ல என்பது நிறுவப்பட்ட உண்மை.

ஆனால், தோண்டத் தோண்டத் தீராத ஒரு ஆற்றல் பூமிக்கடியில் புதைந்து இருக்கிறது என்றால் நம்புவீர்களா? அமெரிக்காவிலுள்ள எம்.ஐ.டி., தொழில்நுட்ப நிலையத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தனியாக தொடங்கி உள்ள, ‘குவேய்ஸ்’ அதை நம்பித்தான் இருக்கிறது.

பூமிக்கடியில் இன்னும் ஆறாமல் தகித்தபடி இருக்கும் தீக்குழம்பு தான் அந்த தீராத ஆற்றல். இதில், 0.1 சதவீதத்தைப் பயன்படுத்தினால், அடுத்து வரும் 2 கோடி ஆண்டுகளுக்கு, பூமியின் மின் ஆற்றல் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என, விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

ஏற்கெனவே, நிலக்கரிச் சுரங்கத் தொழில்களுக்காக, நிலத்தடியில் நீண்ட சுரங்கங்களைத் தோண்டியுள்ளனர். இவற்றில், புவி வெப்பத்தைப் பயன்படுத்தி, நீராவியால் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்கலாம் என, குவேய்ஸ் ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர். இதன் முதல் திட்டம், 2028 இல் தொடங்கும். பின்னர், குவேய்ஸ் தனது தொழில் நுட்பத்தை மேம்படுத்தி, உலகிலுள்ள 8,500 நிலக்கரி அனல் மின் நிலையங்களை அணுகும்.




ஏனெனில், அவை அனைத்தும், 2050க்குள் செயற்பாட்டை நிறுத்த திட்டமிட்டுள்ளன. பூமிக்கடியில், 3 முதல் 20 கி.மீ வரை தோண்டினால் கிடைக்கும் வெப்பம், இலவசமாகக் கிடைக்கும் ஆற்றல். அதை, அனல் மின்சாரமாக ஆக்கும் திட்டம் அபாரமானதுதான். அதாவது, செயலுக்கு வந்தால்.



சிறுவர் பகுதிக்கான
உங்கள் சொந்த ஆக்கங்களை
எங்களுக்கு உடனே
அனுப்பி வையுங்கள்

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542



# விளக்குமாற்றின் விளக்கம்

அன்று தைப்பொங்கல் தினம் என்பதால் தான் காலையில் எடுத்து அம்மாவுக்கு உதவியாக வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தேன். அப்பாவும் அண்ணாமாரும் பொங்கலுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். அப்பா பொங்கல் விழாவுக்காக வீட்டினுள் கட்டிய தென்னங்குருத்தினாலான தோரணம் ஒன்று எங்கள் வீட்டுக்கு வெளியே பார்த்து ஏளனமாக நகைத்துக் கொண்டு இருந்தது. நான் அவ்விடத்தை அவதானித்த போது அங்கு தம் வீட்டினை துப்பரவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் தென்னம் ஈர்க்கினால் ஆன விளக்குமாறு ஒன்று காணப்பட்டது. தோரணம் நகைப்பதை அவதானித்த விளக்குமாறும் உடனே, தோரணத்தைப் பார்த்து “ஏன் என்னைப் பார்த்து சிரிக்கிறாய்” எனக் கேட்டது. அதற்குத் தோரணம், “நான் சும்மா சிரிக்கிறேன்” என்றது அதற்கு விளக்குமாறு “இல்லை இல்லை உமது சிரிப்பில் ஓர் ஏளனம் இருக்கிறது, அதற்கான காரணத்தைக் கூறும்” என்றது. அதற்குத் தோரணம் மீண்டும் சிரித்து விட்டு “எம் இருவரது பிறப்பும் ஒரே இடம்தான்” ஆனால், என்று கூறி மீண்டும் வாய் விட்டுச் சிரித்தது. “ஆம். எனக்கும் தெரியும் ஆனால், நீர் வாய் விட்டுச் சிரிக்கும் அளவிற்கு இப்போது என்ன நடந்து விட்டது” என விளக்குமாறு கேட்டது. “நம் பிறப்பிடம் ஒரே இடமாக இருந்தாலும் நான் எல்லோரது வீட்டின் உள்ளேயே இருக்கிறேன். நீயோ வீட்டுக்கு வெளியே ஓர் ஒதுக்குப் புறத்தில் இருக்கிறாய். அத்துடன் நான் எல்லோரது இன்ப, துன்ப நிகழ்வுகளில் மிகவும் அழகாக அலங்கரிக்கப்படுகிறேன். ஆனால், நீயோ அவர்களது வீடுகள் மற்றும் சுற்றுப் புறங்களில் உள்ள அசுத்தங்களையும் குப்பைகளையும் அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றாய். அதை எண்ணித்தான் நான் இவ்வாறு நகைக்கிறேன்” என்றது தோரணம். தோரணம் கூறியதைக் கேட்ட விளக்குமாறு மௌனமானது. அப்போது, அம்மா என்னை அழைக்கும் சத்தம் கேட்டு நான் சென்று விட்டேன். பொங்கலின் மறுநாள் நான் வெளியே வந்து விளக்குமாற்றைத் தேடினேன். அப்போது எனது அம்மா தனது கையில் விளக்குமாற்றை வைத்திருந்ததைக் கண்டேன். பொங்கல் அன்று தோரணத்தின் கதையைக் கேட்டு மௌனமாக இருந்த விளக்குமாறு கதைக்கத் தொடங்கியது. “நண்பா! நேற்றைய தினம் நீ வீட்டினுள் அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தாய் ஆனால், இன்று நீ ஒரு குப்பையாக கீழே கிடக்கின்றாய். குப்பையாக இருக்கும் உன்னை துப்பரவு செய்வதும் நான்தான். உன் போல் நான் ஆணவத்தில் ஆடியதில்லை என்று கூறியது விளக்குமாறு தனது பணியைத் தொடங்கியது.



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 19.03.2022 அன்று வெளியிடப்பட்டது.